விலை சதம் 25

# சுதந்திரன்
SUTANTIRAN

திருவள்ளுவர் ஆண்டு 1998 வைகாசி திங்கள் 17-ம் நாள் (31—5—67) புதன்கிழமை ஸபர் 20 | புத்தகம் 20
194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12. தொலை பேசி எண்-3411 த. பெ. 1183 | இதழ் 45

# விசாரணைக் கமிஷன் விரைவில் நியமனம்?

## எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு: இவ்வாரம் முடிவு தெரியும்

வல்வெட்டித்துறைத் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் பற்றியும் தமிழ்ப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் இனிமேல் இராணுவ கெடுபிடிகளுக்குப் பலியாகாமல் அமைதியாக வாழ்வதற்கான வழிவகைகள் பற்றியும் ஆராய்ந்து சிபார்சு செய்வதற்காக விரைவில் ஒரு கமிஷன் நியமிக்கப்படலாமென்று விஷயமறிந்த வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

ஆனால் கமிஷன் நியமிப்பதை எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்ப்பதாகவும், இந்த எதிர்ப்பை அலட்சியம் செய்தால், தமிழரசுக் கட்சியின் நிர்ப்பந்தத்தின் மீது வட பகுதியில் நிறுத்தப் பட்ட இராணுவத்தினரை அரசாங்கம் "நிராயுதபாணி"யாக்கி விட்டதென்று சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வார்களென்றும், ஆகவே எதிர்க்கட்சியின் எதிர்ப்புக்கும் சற்று செவிசாய்க்க வேண்டுமென்றும் ஐ. தே. கட்சியிலுள்ள ஒரு சிலர் அரசாங்கத்திடம் கூறி வருவதாகவும் தெரிகிறது. அரசாங்கத்தின் முடிவை இவ்வாரத்தில் பிரதமமந்திரி அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வல்வெட்டித்துறையில் கடந்த ஏப்பிரல் 8ம் திகதி நடைபெற்ற துக்ககரமான சம்பவத்தை யடுத்து, வட மாகாணத்தில் நடைபெற்று வரும் இராணுவத்தினரின் அத்துமீறல் நடவடிக்கைகளை ஆராயவும், எதிர்காலத்திலும் அப்படியான சம்பவங்கள் நடைபெருமல் தடுக்கவும் ஒரு பகிரங்க விசாரணைக் கமிஷனை நியமிக்கவேண்டுமென்று தமிழரசுத் தூதுக்குழுவினர் டாக்டர் நாகநாதன் தலைமையில் பிரதமரைப் பேட்டிக்கண்டு கோரியிருந்தார்களல்லவா?

வல்வெட்டித்துறை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நீதிபதியின் விசாரணையிலிருப்பதால், அது முடிவடைந்ததும் விசாரணைக் கமிஷன் நியமிப்பது பற்றித் தாம் ஆலோசிப்பதாகவும் பிரதமர் அப்பொழுது கூறியிருந்தார்.

(9-ம் பக்கம் பார்க்க)



தமிழ் மறைக் கழகத்தினரின் பதினைந்தாவது திருக்குறள் மாநாடு சங்கானை அரசடி வயிரவ கோவில் முன்றிலில் அமைக்கப்பட்ட அலங்கார பந்தலில் மூன்று தினங்களாக நடைபெற்றது விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிக்கு கழகத்தலைவர் க. பொ. இரத்தினம் பா. உ. தலைமைவகித்துப் பேசுகிறார்.

கீழே வட்டுக்கோட்டை பா. உ., திரு. அ. அமிர்தலிங்கம் மாநாட்டை ஆரம்பித்து வைத்து தொடக்கவுரை நிகழ்த்துகிறார்.

## கூடா நட்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட இலங்கையிற் கிளைகள் அமைக்கப் போவதாக ஒரு செய்தி கூறுகிறது.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு — ஜனநாயகவாதிகள் ஆட்சிபுரியும் நாடு. எனவே எந்த அரசியல் கட்சியும் எங்கு வேண்டுமானாலும் கிளைகள் அமைத்துக் கொள்ளலாம்.

தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைகளை அபகரித்த கட்சி சுதந்திரக் கட்சி.

அக் கட்சிக்குத் தமிழ்ப் பகுதியில் கிளைகள் அமைப்பதற்கு துணிச்சல் எங்கிருந்து வந்தது? வட இலங்கைக்கு அக்கட்சியை வருந்தி அழைத்தது யார்? அக் கட்சிக்கு அங்கே ஆதரவளிப்பவர் யார்.

'தமிழ் மக்களின் கோரிக்கை எதையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முழு சம்மதத்துடன் கொண்டுவந்தால் தான் அது நிலைத்து நிற்கும்' என்று பல ஆண்டுகள் அரசியல் அஞ்ஞாதவாசம் செய்து மீண்டும் அரசியல் பிரவேசம் செய்துள்ள ஒருவர் இவ்வாரம் ஒரு கூட்டத்திற் பேசியுள்ளார். இவர் தேசிய அரசாங்கத்தில் முன் வரிசையில் அமர்ந்திருப்பவர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவரது இந்தப் பேச்சு ஒன்றே மேற் கண்ட வினாக்களுக்கு விடையளித்துவிடுகிறது.

மாவட்டசபை, இலங்கை இந்திய மசோதா போன்ற தமிழ்ப் பேசும் மக்களுக்கு நன்மை பயக்கும் மசோதாக்கள் பற்றி சுதந்திரக் கட்சி செய்யும் பிரசாரத்தையே இந்தப் பிரமுகரும் செய்து வருகிறார். தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகளைப் பொறுத்த வரையில் அக் கட்சியின் கருத்தையே இவரும் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

சுதந்திரக் கட்சியின் கொள்கையை இவர் தமிழ் பேசும் மக்களிடம் பிரசாரம் செய்வது விந்தையாக மட்டுமின்றி விபரீதமாகவும் இருக்கிறது. இப்பொழுது அக் கட்சிக்குப் பகிரங்கமாகவே வக்காலத்து வாங்கத் தொடங்கி விட்டார்.

அக் கட்சிக்கும் இவருக்குமிடையே ஏதோ சில உடன்பாடுகள் இருக்கலாமோ என்று மக்கள் ஐயுற வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இத்தகையோரின் ஆதரவையும் உதவியையும் கொண்டுதான் சுதந்திரக் கட்சி தமிழ்ப் பகுதியில் தலைகாட்டத் தொடங்கியுள்ளதென்பதை இனி மறைக்க முடியாது. தேசிய அரசாங்கத்தின் நண்பராக நடித்துக் கொண்டே இவ்வாறு செய்வது நம்பிக்கைத் துரோகம் செய்வதாகும் என்று கூறின் தவறாகாது.

இது ஒரு கூடா நட்பு— தமிழ்ப் பேசும் இனத்தின் நலன்களுக்கு மாருன நட்பு. இதனை அவர் கைவிட வேண்டும். இல்லையேல் மீண்டும் 'அரசியல் அஞ்ஞாதவாசம்' தான் என்று எச்சரிக்கின்றோம்.

## தமிழ் மொழியை வளம்படுத்துங்கள்!
### அண்ணுவின் செய்தி

'இன்றைய இருபதாம் நூற்றுண்டின் தேவையை உணர்ந்து அதற்கேற்றவகையில் நம்முடைய மொழியை வளம்படுத்த நாம் பாடுபட வேண்டும்!'

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு இலங்கைச் சட்டக்கல்லூரி தமிழ் மன்றம் இன்று நடத்தும் முத்தமிழ் விழாவிற்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

முத்தமிழின் இனிமையில் மகிழ்ந்து அதன் நலம்பாராட்டுவதோடு தமிழர்கள் தமிழுக்குச் செய்யவேண்டிய தொண்டு முடிந்துவிட்டதாக நான் கருதவில்லை.

இன்றைய இருபதாம் நூற்றுண்டின் தேவையை உணர்ந்து அதற்கேற்ற வகையில் நம்முடைய மொழியை வளம் படுத்த நாம் முயல வேண்டும். சட்டம் போன்ற ஆராய்ச்சித் துறையில் பயிலும் மாணவமணிகள் தங்கள் கடமைகளில் ஒன்ருக இதைக் கொண்டு, தமிழ் நுட்ப மொழியாகவும் விஞ்ஞான மொழியாகவும் வளர உதவவேண்டும் என்று

(9-ம் பக்கம் பார்க்க)

"பாரி"
எழுதும்
கால நிலை காணீரோ?
என்னும்
நகைச்சுவைத் தொடர்
7-6-67 சுதந்திரனில்
ஆரம்பமாகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரனில் மனிதன் இறங்க ஏற்பாடு!

பின்னஞ்சிறு வயதில் குழந்தைகளுக்கு உணவூட்டும்போது, குழந்தை அடம் பிடித்தால் 'அம்புலி காட்டி' உணவூட்டுவது நம் தாய்மாரின் வழக்கம். அச்சமயத்தில் குழந்தை அம்புலியைப் பிடித்து தரும்படி கேட்டால், இக்காலத் தாய்மார்கள் அக்குழந்தையை விரைவில் அம்புலியிடம் அழைத்துச் செல்லுவதாக இனிமேல் கண்ணை மூடிக் கொண்டு கூறிவிடலாம். ஏனெனில் சந்திரமண்டலத்துக்கு விரைவில் செல்லக்கூடிய வாய்ப்பு மனிதனுக்கு நெருங்கி வருகிறது

'சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்' என்ற கவிஞனின் வாக்கை நிறைவேற்ற உலகத்து விஞ்ஞானிகள் போட்டி போட்டுக் கொண்டுமுயற்சிசெய்து வருகிறார்கள். சந்திரமண்டலத்தியல் கண்டுதெளிவது மட்டுமல்ல, 'சந்திரமண்டலத்துக்கு சென்று வருவோம்' என்பதில்விஞ்ஞானமேதைகள் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு ஆராய்ச்சி புரிந்து வருகின்றனர்.

அணு ஆயுதங்கள் போன்ற அழிவுச் சக்திகளைத் தயாரிப்பதில் போட்டியிட்ட சோவியத் ரஷ்யாவும் அமெரிக்காவும், இப்பொழுது அறிவியற் துறையில் போட்டியிலிறங்கியிருப்பது உலக மக்களால் பெரிதும் விரும்பி வரவேற்கப்படுகிறது. ஏனெனில் முதற் போட்டி மனித இனத்தை நாசம் செய்துவிடும்; இரண்டாவது போட்டியோ மனிதனுக்கு அறிவு வளர்ச்சியையும், வேறு பல நன்மைகளையும் கொண்டுவரும். அந்த வகையில் இந்தப் போட்டி வரவேற்கப்பட கூடியதே.

உயிரையும் திரணமாக மதித்து.மனிதனைசந்திரமண்டலத்துக்கு அழைத்துச் சென்றுவிட வேண்டுமென்பதில் விஞ்ஞானிகள் மிகுந்த அக்கறை காட்டி வருகிறார்கள்.

சந்திரன் கடவுள் என்ற நம்பிக்கையிலிருந்த மக்களுக்கு, அது நம்முடைய உலகைப் போன்ற ஒன்றே என்றும் அங்கும் மனிதர் சென்று வரலாமென்றும் விஞ்ஞானிகள் நிரூபித்து வருகிறார்கள்'

### புதிய தகவல்

விண்வெளி ஆராய்ச்சித் துறையில் ஒரு புதிய வெற்றியை ஏப்ரல் மாதம் 14ம் திகதி விஞ்ஞானிகள் அனுப்பி வைத்த 'சேவையர் -3' ஏற்படுத்திவிட்டது. அம்புலித் தரையைகொத்தித் தோண்டி, மண்ணை உடைத்து ஆராயும் விசை மண்வெட்டி அமைந்த 'சர்வேயர்-3' என்ற இந்தச் செயற்கைக் கோள் சந்திர மண்டலத்திலிருந்துஅனுப்பிய தகவல்கள் சந்திரனைப் பற்றிய பல புதிய சுவையான தகவல்களை தந்திருக்கிறது.

அமெரிக்காவில் கலிபோர்னிய மாநிலத்தில் பாசடேன நகரிலுள்ள ஜெட் உந்துவகை ஆய்வு கூடத்து விஞ்ஞானிகள், சேர்வையர் -3' செயற்கைச் சிரகத்தில் பொருத்தப்பட்டுள்ள மண்வெட்டியை பல தடவை நிலாத்தரையைச் சுரண்டும் படியும், கொத்தும்படியும், மண்ணை உடைக்கும்படியும் உத்தரவிட்டார்கள்.

### ஏப்ரல் 20ல் இறங்கியது

ஒவ்வொரு வேலைக்குப் பிறகும் அந்த மண்வெட்டியை விலகியிருக்குமாறு செய்துவிட்டு வேலை நடந்த இடத்தை 'சர்வேயரில்' பொருத்தப்பட்டுள்ள 'கமரா' படம் பிடித்துக் காட்டுமாறு செய்தார்கள் இந்தச்சோதனைகளின் பின்பே 'சர்வேயர்-3' ஏப்ரல் 17ந் திகதி கென்னடி முனையிலிருந்து அனுப்பப்பட்டது.

சந்திரனில் 'புயல் கடல்' என்று குறிப்பிடப்படும் பகுதியில் திட்டமிடப்பட்ட இலக்குக்கு 24மைல் தொலைவில், ஏப்ரல் 20ந் திகதி இந்தச் செயற்கைக் கோள் இறங்கியது.

'சர்வேயர்' சந்திரனுக்கு52 மைல் தொலைவில் வரும் பொது அதிலுள்ள வேகங் குறைப்பான் கருவியைப் பூமியிலிருந்து கட்டளையனுப்பி இயக்கி வைத்தார்கள். இதனால் மணிக்கு 6000 மைல் வேகத்தில் சென்று கொண்டிருந்த சர்வேயரின் வேகம் மணிக்கு 350 மைலாக குறைந்தது. இதன்பின் ரொக்கக் கருவிகள் சில இயங்கின. இந்தக் கருவிகளின் உதவியினல் சந்திரனை அடைய அடைய செயற்கைக் கோளின் வேகம் குறைந்தது. 'சர்வேயர்' நிலாத்தரையைத் தொட்ட போது அதன் வேகம் மணிக்கு மூன்று மைல்களே.

### இறங்கிய இடம்

சந்திரனில் சர்வேயர்-3 இறங்கிய இடத்தின் தரை சற்றே குழிவான இடம். அதில் சாய்ந்தபடியேதான் 'சர்வேயர் நின்றது. நிற்பதற்கு முன்னர் அது இருமுறை தரையில் பட்டுத்துள்ளியதாம்.

'சர்வேயரிலுள்ள; சிறிய மண்வெட்டி ஐந்து அடி தூரம் வரை எட்டும். உலோகத்தாலான இவ்விசை மண்வெட்டி ஒன்றரை அடி ஆழம் வரை மண்ணைத் தோண்டியது. மொத்தம் 24சதுர அடி பரப்பளவை அது கொத்திப் பார்த்துள்ளது. 'சர்வேயரின்' மண்வெட்டி மண்ணைத் தோண்டும் போது ஆறு அங்குல ஆழத்தில் 'உருண்டைகள்' சில வற்றைக் கண்டது. இவை கற்களா மண்வெட்டிகளா என்பதை இதுவரை விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்க முடியவில்லை.

'சர்வேயர்' தங்கி நிற்கும் சுற்றுவட்டார நிலாத் தரையையும், மண் தோண்டுவதையும் காட்டும் சுமார் 1600 படங்களை சர்வேயரில்பொருத்தப்பட்டுள்ள 'கமரா' படம் எடுத்து அனுப்பியுள்ளதாம்.

சர்வேயர் தங்கிநிற்கும்புயல் கடல் எனும் சமவெளி சந்திரனில் மேற்கு ஓரத்தில் நிலா மத்திய ரேகைக்கு சற்றுக் கீழாக அமைந்துள்ளது.

'சர்வேயர்-3' இறங்கியுள்ள இடத்தில் 15 டன் எடையுள்ள 'அப்பாலோ' என்ற விண்வெளிக்கப்பல் இறங்கி நிற்க முடியுமா என்று பார்ப்பதற்கே, அங்குள்ள மண்ணைக் கொத்திச் சோதித்துப்பார்த்தார்கள்.


### விஞ்ஞானிகள் கருத்து

இவ்வாறு நிலாத்தரையைக் கொத்திப்பார்த்து அதன் அமைப்பையும் உறுதியையும் அளவிடுவதால் கிடைக்கும் தகவல்கள் சந்திரனின் வரலாற்றையும், அதன் தோற்றத்தைப் பற்றி அறியவும் உதவும் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

'அப்பாலோ! கப்பலில் அமெரிக்க விஞ்ஞானிகள் சென்று இறங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள எட்டு இடங்களில் ஒரு இடமே 'சர்வேயர்' இப்போது இறங்கியுள்ள இடமாம்.

'சர்வேயரின்' ஆராய்ச்சியின் பயனாக சந்திரனைப் பற்றி பின்வரும் உண்மைகளை விஞ்ஞானிகள் வெளியிடுகிறார்கள்.

'சந்திரனிலுள்ள மண் பெரும்பாலும் பூமியிலுள்ள மண்ணைப் போலவே நெருக்கமாக இருக்கிறது. பளுவைத் தள்ளும் அளவில் அது கிட்டத் தட்ட பூமியின் மண்ணைப் போலவே உள்ளது. மனிதன் விண்வெளிக்கப்பலில் சென்று நிலாத்தரையில் இறங்கலாம்: அங்கு புழுதியில் அமிழ்ந்து விடுவோமோ என்ற பயமின்றி தாராளமாக நடக்கலாம். அம்புலித்தரை சாதாரண மண்போன்று இருக்கிறது. பெரும்பாலும் கடற்கரை ஈரமணல் போன்று உள்ளது. பாவிக்கும் போது சாதாரண மணல் போலவே வருகிறது.



அம்புலியின் மறைந்த பகுதி—இப்படம் லூனர் ஒபிட்டரால் படம் பிடித்து அனுப்பப்பட்டது. அம்புலித் தரையின் மறைந்த பகுதியை நன்கு சித்திரிக்கும் இப்படம் இதற்கு முன்பு எடுக்கப்படாதது என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

சந்திரனில் தண்ணீரோ வேறு திரவமோ கிடையாது. எனினும் அம்புலித் தரையின் மண் நெருக்கமாக இணைந்து இருப்பதன் காரணம் நில மின்விசை. ஆரியக்கதிரியக்கம், சந்திரனைத் தாக்கும் நுண்விண்துகள்கள் ஆகிய இவற்றில் ஒன்றாக இருக்கும் பூமியிலிருப்பவர்களுக்கு 14 நாட்கள் சந்திரனில் ஒரு பகல்.'

### முதல் முயற்சி

சந்திரனையடையும் முயற்சி 1957லிருந்து தான் தீவிரமாக ஆரம்பமாயிற்று. முதன் முதலில் ஸ்புட்னிக் என்ற செயற்கை சந்திரனை சிருஷ்டித்து பூமியைச் சுற்றி வரச் செய்த பெருமை ரஷ்ய விஞ்ஞானிகளையே சாரும். 1957 அக்டோபர் 4ந் திகதி இது வானவெளியில் பறக்கவிடப்பட்டது. இதைத் தொடர்ந்து நவம்பர் 3ல் லூட்னிக்கில் நாய் அனுப்பப்பட்டது. ஆனால் இந்த நாய் உயிருடன் திரும்பவில்லை.

1959ல் ஏழு செயற்கைச் சந்திரன்கள் வானவெளிக்கு அனுப்பப்பட்டன. இவை மூலம், பூமியை படம் பிடிக்க முடிந்தது. பூமியின் காந்த இழுப்புச் சக்தி எவ்வளவு சூரியனின் 'எக்ஸ்ரே' கிரணம் [illegible] ப்பட்டன.

1960ல் 12 செயற்கை கோள்கள் விடப்பட்டன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான தகவல்களைக் கண்டு பிடித்து வெளியிட்டன. இவைகளில் சில ரஷியாவினுடையது சில அமெரிக்காவினுடையது. மனிதர்களை அனுப்பு முன் விண்வெளிக் கப்பல்களில் நாய்கள், குரங்குகள், முதலியன அனுப்பப்பட்டு பரிட்சிக்கப்பட்டன.

1961 ஏப்ரல் 12ல் ரஷ்யாவின் விண்வெளிக் கப்பலான 'வாஸ்டாக்'1ல் மேஜர் காகரின் பூமியை ஒரு முறை வலம் வந்தார். மணிக்கு 17,400 மைல் விதம் இது சென்றது.

இதே ஆண்டு ஆகஸ்ட் 6ந் திகதி மேஜர் ஜெர்மன் டிட்டோவ் என்ற ரஷியர் வாஸ்டாக்-2 விண்வெளிக்கப்பலில் சென்று பூமியை 17 தடவை சுற்றி வந்தார்.

### உலகைச் சுற்றினர்

1962 பெப்ரவரி 20ந் திகதி பிரண்ட்ஷிப் (7) என்ற விண்வெளிக் கப்பலில் அமெரிக்க மாலுமி ஜான் கிளென் மூன்று முறை உலகைச் சுற்றி வந்திருக்கிறார். இதே ஆண்டு மே 24ல் மால்கம் ஸ்காட் கார்ப்பெண்டர் என்ற அமெரிக்கர் அரோரா என்ற செயற்கைக் கோளில் சென்றுவிட்டு திரும்பி வந்தார்.

வாஸ்டோக்(3)இல் ஆண்டிரியங் நிகோலயாங் என்ற ரஷியர் ஆகஸ்ட் 11ந் திகதி பிரயாணமானார். இவர் 18 தடவை உலகைச் சுற்றி ஒரு ரெக்கார்ட்டையே ஏற்படுத்தினர். இதைத் தொடர்ந்து போபாவிச் என்ற ரஷியர் வாஸ்டாக் (4) என்ற விண்வெளிக்கப்பலில் ஆகஸ்ட் 12ந் திகதி அனுப்பப்பட்டார்.

## நிலாவில் தரையை வெட்டிக் கொத்தி செய்த ஆராய்ச்சி

இரண்டு விண்வெளிக் கப்பல்களும் போட்டதிட்டப்படி ஒரு குறிப்பிட்ட இடத்தில் வந்திறங்கின.

### முதல் விண்வெளிப் பெண்

1963 ஏப்ரல் 2ந் திகதி சந்திரனை நோக்கி லூனு(4) செயற்கைக் கோள் பிரயோகிக்கப்பட்டது. இதே வருடம் ஜூன் 16ந் திகதி அனுப்பப்பட்ட வாஸ்டாக் (6)ல் வேலண்டினா டிரஸ்கோவா என்ற ரஷ்யப் பெண்மணி பிரயாணம் செய்து முதல் வானவெளிப் பெண் என்ற புகழையும் சம்பாதித்துக் கொண்டாள்.

1964ல் அமெரிக்க விண்வெளி வீரர்களான கூப்பரும் கன்ராடும் 8 நாட்கள் விண்வெளிக்கப்பலில் இருந்து கொண்டு பிரயாணம் செய்ய முடியும் என்பதை நிரூபித்தனர். எட்வர்ட் வைட் என்பவர் வான வெளியில் நடந்து சென்று மீண்டும் விண்வெளிக் கப்பலுக்கு வந்து சேர்ந்தார்!

1965ல் வர்ஜில் கிரிஸம். ஜோன் ஜங் என்ற அமெரிக்கர்கள் வழக்கமான சுவட்டிலிருந்து (ஆர்பிட்) விண்வெளிக் கப்பலை வேறு வழிக்குத் திருப்ப முடியுமென்று கண்டுபிடித்தனர்.

ரஷியாவின் 2வது லூனு 1959 செப்டம்பர் 14ல் சந்திர மண்டலத்தில் இறங்கியது' ஆனால் சேதமடைந்து விட்டது. இதே போல6வது லூனுவும் சந்திர மண்டலத்திலிறங்கத் தவறிவிட்டது. 8வது லூனு சந்திர மண்டலத்தின் மேல பரப்பை எட்டியது.

9வது லூனு 1966ம் ஆண்டு பெப்ரவரி 3ந் திகதி சந்திரமண்டலத்தில் வெற்றிகரமாக இறங்கியது. சந்திரன் ஒரே புழுதி மண்டலம் என்றும், அதில்விண்வெளிக்கப்பல் இறங்கினால் அதை புழுதி மூழ்கடித்துவிடும் என்றும் கூறப்பட்டு வந்தது தவறு என்பதை ரஷ்யாவின் லூனு9 நிரூபித்தது.

1966ம் ஆண்டும் இந்த ஆண்டும் அமெரிக்காவும் 'லூனர் ஒபிட்டர்' என்ற செயற்கைக்கோளை அனுப்பி சந்திரனில் விண்வெளிக்கப்பல் சென்று தங்கக் கூடிய இடங்களைக் கண்டுபிடித்திருக்கிறது.

1957 முதல் 1967 வரை சந்திர மண்டலத்துக்கு செல்லும் ஆராய்ச்சியில் அடைந்து வரும் முன்னேற்றத்தைப் பார்க்கும் போது இன்றும் சில ஆண்டுகளில் மனிதர்கள் சந்திரனுக்கு போய் வருவது கண்டிப்பாக சாத்தியமாகக் கூடிய ஒன்றாகவே தோன்றுகிறது.

மனித குலத்துக்கு ஆக்கபூர்வமான வெற்றியைத் தேடித்தரும் இந்த முயற்சியில் ரஷியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள போட்டியை வரவேற்கலாம். இல்லையா?

## அலிக்கு கல்தாவா?

சுதந்திரக்கட்சியின் ஒரு கிளை இயக்கமான இஸ்லாமிய சோஸலிச முன்னணிக்கும் மூதூர் எம். பி, ஜனப். முகமதலிக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வருவதாகத் தெரிகிறது. இதனால் ஜனப் முகமதலியை அரசாங்கப் பாராளுமன்றக் குழுவில் இருந்து வெளியேற்ற வேண்டுமென்று பாராளுமன்றக் குழுவில் உள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் சிலர் வற்புறுத்தி வருவதாக கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கலைவாணி,
யாழ்ப்பாணம்.

கே: இலங்கை-இந்திய உடன்படிக்கை மசோதா மாவட்டசபை மசோதா ஆகிய இரண்டு மசோதாக்களையும் ஆர். ஜி. யும், ஜீ. ஜீ. யும் எதிர்ப்பது ஏன்?

ப: இரண்டும் தமிழ்பேசும் மக்களுக்கு நன்மையளிப்பதால்!

கே: பொன்னம்பலத்தின் இன்றைய அரசியற் கொள்கை என்ன?

ப: 'குழவிக் கூட்டுக்கு கல்லெறிவது'தான் அவரது இன்றைய அரசியற் கொள்கை.

ஃ

தமிழ்ச்செல்வன்,
மட்டக்களப்பு.

கே: அதிகாரமற்ற மாவட்டசபையைத்தானும் டட்லி கொடுக்கப் போகிறாரென்று சில அரசியல்வாதிகள் கூறுகிறார்களே?

ப: அவர்கள் ஆரூடம் தெரிந்தவர்களா? மாவட்டசபையை எதிர்ப்பவர்களே அப்படிக் கூறுபவர்கள். மாவட்டசபைநிருவும் நிலைமை உருவாகி வருவதைக் கண்டதும் எதிர்த்துப் பயனில்லை என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். எனவே அதிகாரமில்லாத மாவட்டசபைஎன்று கூறத் தலைப்பட்டிருக்கிறார்கள். கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதில் அவர்களுக்கு ஒரு திருப்தி.

ஃ

ஆர். ஆனந்தசுப்பிரமணியம்,
நீர்கொழும்பு.

கே: மென்மையான இதயம் படைத்த பெண்களிலும் சிலர் பேய்களாயிருக்கின்றனரே, ஏன்?

ப: காரணம் பேயே இதயமாக இருப்பதுதான்? மரித்த ஒரு பிராணியின் இதயமே பேயுருவம் கொள்கிறது.

கே: ஆண்களை அடக்கி ஆளும் பெண்களைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: அவர்கள் நாட்டை ஆட்சிபுரியத் தகுதிவாய்ந்தவர்கள்.

ஃ

கே. எஸ். பவன்,
இலுப்பைக்கடவை.

கே: மாவட்டசபை மசோதாவை ஜீ. ஜீ. ஏன் எதிர்க்கிறார்?

ப: அதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று காலனி எசமானர்களின் துருப்பிடித்த பத்தாம்பசலி கச்சேரி முறையைப் பாதுகாப்பதிலுள்ள பேரார்வம். மற்றொன்று இது தமிழரசுக்கட்சியின் கோரிக்கையாக இருப்பது.

கே: நான் ஓர் எழுத்தாளனாக என்ன செய்யவேண்டும்?

ப: நாலு எழுத்தை எழுதிவிட்டு, முச்சந்தியில் நின்று 'நானே எழுத்தாளன்' என்று டமாரம்அடிக்கவேண்டும். அத்துடன் சற்று மண்டைக்கனமும் அவசியமாகும்.

ஃ

செல்வி. சி. பத்மாதேவி,
மன்னிங்பட்டிணம்.

கே: அரசாங்கத்திற் தமிழரசார் இருப்பதாற்தான் உபதேர்தல்களில் அரசாங்கக் கட்சி தோல்வி அடைகின்றது என ஒரு சாரார் கூறுகின்றார்கள். உண்மையா?

ப: அகலவத்தைத் தேர்தல் முடிவுக்குப் பின் அவர்களின் வாய் அடைத்துப் போயிருக்கும்.

ஃ

எம். ஈ. கே. கே. எஸ்.
இரத்தினம்,
கல்லடி வேலூர்.

கே: திப்பெட்டித் தட்டுப்பாடு நாடெங்கும் ஏற்பட்டிருக்கிறதே இதனால் மண்ணெண்ணெய் அடுப்பில் கதிரையில் உட்கார்ந்து கொண்டு சமையல்செய்யும் நவநாகரிக நவமணிகளின் நிலை என்னவாகும்?

ப: அவர்கள் மண்ணெண்ணெய் அடுப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டு மின்சார அடுப்பில் சமைக்கத் தொடங்கிவிட்டார்களே.

கே: பொன்னன் மேடையில் பேசும்போது மேலாடையை இடுப்பில் இறுக வரிந்து கட்டிக்கொண்டு பேச்சிலே அதிகமான ஆங்கிலச் சொற்களையே உபயோகிக்கிறாரே, ஏன்?

ப: ஆங்கிலத்தை 'தேவபாஷையாக' எண்ணிக் கொண்டிருக்கும் ஆங்கிலம் தெரியாத பாமர மக்களை ஏமாற்றுவதற்காகவே இந்த தந்திரத்தைக் கையாளுகிறாராம்.

ஃ

கே. நவதாசன்,
நெடுங்கேணி.

கே: என் நண்பன் தன் காதலிக்கு என் பெயரில் வாழ்த்து மடல்களை அனுப்புகின்றானே?

ப: அப்படியா? இதில் உங்களுக்கு நஷ்டமில்லை. ஏனெனில் இறுதியில் ஏமாந்துபோகிறவர் உங்களின் நண்பர்தான்.

கே: கனவிலே காணும் கன்னி நினைவிலே வந்து நிலைத்திருப்பாளா?

ப: நினைவுக்கும் கனவுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதால், அவள் நிலைத்திருக்காவிட்டாலும்—நினைவுக்கு வருவது சாத்தியமே!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

சேவாய்
புசல்லா.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன் அவள் என்னை தனியாகப் பேச அழைக்கிறாள் என்ன செய்வது?

ப: என்னையா இது? காதலியுடன் பத்து பேரை வைத்துக் கொண்டுதான் பேசப் போகிறீரோ?

ஃ

'அம்மையப்பன்',
பதுளை.

கே: ஆங்கில கலாசாரமே காதலிக்கவும கட்டியணைக்கவும் எளிதானது! இப்படிச் சொல்வதால் தமிழ் கலாசாரத்தை விட்டுவிடுங்கள் என்பது அர்த்தமல்ல!! ஆங்கிலேய ஆலிங்கனமே நல்லதென்கிறேன், என்கிறாரே ஒரு மேதாவி?

ப: அவரை உடனே பொ. கட்சியில் சேரச் சொல்லுங்கள்.

கே: இந்திய ஜனாதிபதி தேர்வும் பெறு பேறுபற்றி பாகிஸ்தான் என்ன கருதுகிறது?

ப: பாகிஸ்தான் கையைப் பிசைகிறதாம் பிரச்சினைகளுக்கு இடமில்லையே என்று! இந்திய, பாகிஸ்தான் ஜனாதிபதிகள் இருவரும் முஸ்லிம்களாகிவிட்டதால் இனி பிரச்சினைகளுக்கு இடமேது?

கே: பழையது இல்லாமல் புதியது எங்கே கிடைக்கும்?

ப: எங்கும் கிடைக்காது. பழையதிலிருந்தே புதியது தோன்றுகிறது.

ஃ

வா. சின்னத்தம்பி,
கைதடி வடக்கு.

கே: 'யாருடன் சிநேகிதம் கொள்ளலாம்'?

ப: சந்தர்ப்பம் பார்த்து காலை வாரிவிடும் அல்லது கழுத்தறுக்கும் நபர்களைத் தவிர மற்றவர்களுடன் நட்பு கொள்ளலாம்.

கே: காணிப் பட்டானத்திற் சேருவதற்கு விண்ணப்பம் செய்துள்ளேன். என்னை எடுப்பார்களா?

ப: [illegible] [illegible]த்திலிருந்து கம்பி நீட்டாதவராக இருந்தால் எடுப்பார்கள்.

கே: விவசாயத்தைப் புறக்கணிக்கும் வாலிபர்களை என்ன செய்வது?

ப: வேலையில்லாப் பட்டாளத்தில் அவர்களைச் சேர்த்துவிடுங்கள்.

ஃ

வி. நவரத்தினம்,
நோட்டன்பிறிஜ்.

கே: திரு. பொன்னம்பலம் மாவட்டசபை மசோதா மக்கள் சபைக்கு வந்தால் தேசிய அரசாங்கத்திலிருந்தும் விலகுவதாகக் கூறித்திரிகின்றார் அத்துடன் உடனடியாகவே தனது பாராளுமன்ற ஸ்தானத்தைத் துறந்து தேர்தலில் குதிக்கப் போவதாகவும் கேள்வி?

ப: அவர் சொல்வதைச் செய்தால் மீண்டும் அரசியல் அஞ்ஞாத வாசம் அவரை எதிர்நோக்கும்.

ஃ

தாழையூர் நாகராஜன்,
தாளங்குடா-9.

கே: மூதூர் தொகுதியில் ஓர் முஸ்லிமைத் தவிர யாரும் வெற்றிபெற முடியாதென்றும் அதனால்தான் தமிழரசுக்கட்சி தம்மை நிறுத்தியதென்றும் பத்திரிகையில் அறிக்கை விட்டாரே, அப்படியானால் அவரது வருங்காலம்?

ப: அமாவாசைதான்.

ஃ

எஸ். பி. அல்விறட்,
செம்பியன்பற்று.

கே: எங்கள் பருத்தித்துறைத் தொகுதியில் தமிழரசுக்கட்சியை விட வேறு பல கட்சிகளும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போகின்றனவாமே?

ப: பாராளுமன்ற ஜனநாயகத்தின்படி எத்தனை கட்சிகளும் உங்களின் தொகுதியில் போட்டியிடலாம். ஆனால் ஒரு கட்சிதான் வெற்றிபெறும்! வெற்றிபெற முடியும்.

ஃ

எஸ். எம். ஏ. காதர்,
மிருவோடை.

கே: ஐ. நா. காரியதரிசி ஊதாண்ட் அறிவித்துள்ள மூன்றுவது உலக மகாயுத்தம்தோன்றினால் மனித இனத்தின் கதி என்ன?

ப: மனிதர் எண்ணிக்கை குறையும். உணவுப் பிரச்சினை தீரும். நாடுகளும் உலகமும் சுபீட்சம் பெறும்!

ஃ

சு. தவராசா,
நாவலப்பிட்டி.

கே: எனது மைத்துனர் எந்த நேரமும் பணம், பணம் என்று கதறுகிறார். அதற்கு என்ன செய்யலாம்?

ப: அது ஒருவகை மனநோய்! ஐந்து ஆண்டுகளுக்காவது பணத்தில் படாமல அவரது கண்ணைப் பாதுகாத்திரானல் பணநோய் சுகமாகி விடும்.

ஃ

சி. நிர்மலராஜன்,
பருத்தித்துறை.

கே: தமிழ் சமுதாயத்தைக் காப்பாற்றக் கூடியவர் யார்?

ப: தமிழ் மக்களே தங்களின் சமுதாயத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். தன்கையே தனக்கு உதவி.



## கீதம்! இது கீதம்!!

சினிமாக் கொட்டகைகளில் தேசிய கீதம் பாடப்படும்.

—செய்தி

—சில தமிழ்ப் படங்களில் வரும் பாட்டுக்களைக் கேட்பதை விட 'தேசிய கீதத்தை' கேட்பது நன்றாக இருக்கும் என்கிறார் ஒரு சினிமாப் பிரியர்!

## கயிறு திரிப்பு!

கயிறு ஏற்றுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.

—செய்தி

—ஆனால் 'கயிறு திரிப்பு' மட்டும அதிகரித்துவருகிறதே!

## அண்ணாவின் ஆர்வம்

மதுவிலக்குப் பற்றி வாக்கெடுப்பு நடத்தத் தயாராக இருக்கிறோம்.

—அண்ணா

—மக்களின் அபிப்பிராயத்தையறிய அண்ணா காட்டும் ஆர்வம் நல்லதுதான். ஆனால் மது விலக்கை ரத்துச் செய்யும்படி மக்கள் கூறிவிட்டால் அண்ணா என்னசெய்யப் போகிறார்?

## தூங்காதே தம்பி தூங்காதே

சேமலாப நிதிப் பணம் செலுத்தாத முதலாளிகளை தொழில் பகுதி இனிக் கவனிக்கும்.

—செய்தி

—அப்போ இவ்வளவு நாளும் தொழில் பகுதி தூங்கி வழிந்ததா?

## இரும்பும் இனிக்கும்

குறைந்த விலைக்கு இரும்பு கிடைக்கும்.

—கொந்தராத்துக்காரர்களுக்கு கரும்பான செய்தி.

## (அ)சுத்தம்

கொழும்பு நகரில் குழாய் நீர் அசுத்தமடைந்துள்ளது.

—செய்தி

—கொழும்பில் வாழும் மக்களின் உள்ளங்களும் இன்று அசுத்த மடைந்து காணப்படுவது இதனால் தானோ என்று




## கவிஞர்களுக்கு ஒரு வாய்ப்பு

———ஃ———

### புது முறைக் கவி அரங்கு

கவிஞர்களே!

இங்கு விளக்கப்படும் நிகழ்ச்சியைக் கொண்டு ஒரு கவிதை இயற்றி அனுப்புங்கள். கவிதை வெண்பாவாகவோ, விருத்தமாகவோ, வேறு எவ்வகையாகவோ இருக்கலாம். 10-6-67 க்கு முன்னர் கவிதை அனுப்பப்படல் வேண்டும்.

நிகழ்ச்சி

'பெண்ணிற்பெருந்தக்க யாவுள?' என்று பெண்ணின் பெருமை பற்றி வினவுகிறார் திருவள்ளுவர். அவர் தமது துணைவியைப் பிரிந்தபோது 'அடிசிற்கினியாளே......' என்று பாராட்டிப் பாடியதாகவும் ஒரு கதையுண்டு. அத்தகைய திருவள்ளுவர் மேனாட்டைப் பின்பற்றும் இக்கால நவ நாகரிகை நங்கை ஒருத்தியைக் காணுகிறார் என்று கற்பனை செய்யுங்கள். காணும்போது அவர் பாடியதாக ஒரே ஒரு கவிதை மட்டும் இயற்றி அனுப்புங்கள். கவிதைகளிற் சிறந்தவை 22-6-67ந் திகதி 'சுதந்திரனில்' வெளிவரும். மிக மிகச் சிறந்த கவிதைக்கு ஒரு பரிசும் உண்டு.

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:

புது முறைக் கவிதை
'சுதந்திரன்'
த. பெ. எண் 1183
கொழும்பு.

## நிருபர்கள் தேவை

வட, கிழக்கு மாகாணங்களிலும், மலை நாட்டிலும் எல்லா இடங்களிலிருந்தும் சுதந்திரனுக்கு நிருபர்கள் தேவை.
விபரங்களுக்கு தராதரத்துடன் விண்ணப்பிக்கவும்.

ஆசிரியர்,
சுதந்திரன்
த. பெ. எண் 1183
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜூன்-4 அமரர் கந்தையா நினைவுதினம்

# தமிழினத்தின் உயர்ச்சிக்கு அயராது உழைத்தவர் அமரர் கந்தையா

## அன்னவர் வழியில் சென்று இலட்சியத்தை அடைவோம்

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் தனக்கென ஒரு திட்டவட்டமான கொள்கையை வகுத்துக் கொள்ள வேண்டும். அப்படி வகுத்துக் கொண்ட பின்னர், அந்தப்பாதையிலே, அந்தரங்க சுத்தியுடன், நடந்து செல்ல வேண்டும்; அப்படிப்பட்ட ஒருவனையே இலட்சிய வாதியென்றும் கொள்கை வாதியென்றும் உலகமக்கள் போற்றுகிறார்கள்.

உலகின் பெரிய வழிகாட்டிகளான காந்திஜியையும், புத்தரையும், யேசுவையும், வள்ளலாரையும், ஆபிரகாம் லிங்கனையும் இன்னும் பலரையும் உலக மக்கள் போற்றுகிறார்கள். இன்னும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் பின்னரும் இப்பெருமக்களை மக்கள் தம் இதயத்தில் வைத்து வழிபட்டே வருவார்கள். இதைத்தான் வள்ளுவர் கூட,

உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்று தமது குறளில் வெகு அழகாகச் சொல்லிவைத்திருந்தார்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் அரசியல் வரலாற்றில், ஏற்றுக்கொண்ட கொள்கையையே என்றும் நெஞ்சில் கொண்டு, அதன்படி ஒழுகி அதனால் இன்று மக்கள் மத்தியில் அழியாத இடத்தைப் பெற்றிருப்பவர்கள் யார் என்று பார்க்கும் போது, தமிழரசுத் தலைவர்கள்தான் நம் கண் முன் வந்து நிற்கிறார்கள்.

அரண்மனையிலிருந்த அரசியலை ஆலமரத்தடிக்கு கொண்டு வந்தவர் அறிஞர் அண்ணா என்று தமிழகத்தில் தி. மு. க. தோழர்கள் கூறுவார்கள். ஈழத்திலும் அதே செயலைக்கையாண்டவர் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் அவர்களே.

### அரசியல் மக்களிடம் வந்தது

உல்லாச வாசிகளினதும் சுகபோகிகளினதும் சந்தர்ப்பவாதிகளினதும் கையிலிருந்த தமிழ்ப்பிரதேசத்தின் அரசியலை சாதாரண பொதுமக்களிடம் கொண்டுவந்தவர் தமிழரசுத் தந்தை செல்வநாயகமும், தமிழரசுக் கட்சியுமே.

தமிழ்ப்பிரதேசத்தின் அரசியலை சாதாரண பொது மக்களிடம் கொண்டு வந்து அரசியல் விழிப்புணர்ச்சியை ஊட்டி தமிழ் பேசும் தேசிய இனத்தை கட்டியெழுப்பிய பெருமை தமிழரசுத் தலைவர்களுக்கேயுண்டு. இந்தப் பெருமைக்கு [illegible] [illegible] சென்ற அமரர் வீ. ஏ. கந்தையா.

தூய்மையான சிந்தையுடன் தமிழ் வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த திரு. வீ. ஏ. கந்தையா அரசியலுக்கு வந்தது 1956ல் தான். அதற்கு முன்பு தமிழ்ப் பணியும் சைவப் பணியும், வேறு பொதுப்பணியும் ஆற்றிக் கொண்டிருந்த கந்தையாவை, 1956ம் ஆண்டு நாட்டில் எழுந்த மொழிப்பிரச்சினை அரசியலில் அக்கறை கொள்ள வைத்துவிட்டது.

### தொண்டர்க்குத் தொண்டுடர்

தமிழ் பேசும் மக்களின் விடுதலையைப் பெற்றுத் தரக்கூடியது தமிழரசுத்தந்தை காட்டும் சீரிய பாதையே என்பதை தமது கூரிய மதியால் உணர்ந்து கொண்ட திரு. கந்தையா, தாம் இறக்கும் வரை தமிழரசுக் கட்சியின் ஒரு சீரிய தொண்டனாக பணியாற்றினார்.

### இளவேனில்

ஒரு கட்சியின் கொள்கைகளை ஏற்றுக் கொண்ட பின்னர், அக் கட்சியின் கொள்கைகளுக்குக் கட்டுப்பட்டு விசுவாசத்துடன் நடக்க வேண்டியது தான் ஒரு உண்மைத்தொண்டனின் கடமையென்பதை திரு. கந்தையா தமது வாழ்வில் நிருபித்துக் காட்டினார்.

கட்சியென்பது ஒரு குடும்பம் போன்றது. குடும்பத்தில் மனைவிக்கும் கணவனுக்கும் எத்தனை பிணக்குகள் இருந்தாலும், ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த தம்பதிகள் தமது பிணக்கை வெளிக்காட்டிக் கொள்ளமாட்டார்கள். இந்த அரசியல் நாகரிகத்தை நல்ல முறையில் கடைப்பிடித்து, கட்சிக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் இழுக்கு ஏற்படாதவாறு நடந்து கொண்டவர் திரு. கந்தையா.

### தடுப்புக் காவலில்

அரசியலுக்கு வந்த நாள் முதல் திரு. கந்தையா ஓய்ந்திருக்கவில்லை. நாடுமுழுவதும் சுற்றித் திரிந்து தமிழ் பேசும் மக்களின் ஐக்கியத்தை கட்டியெழுப்புவதில் ஈடுபட்டார். கட்சி நடத்திய போராட்டங்களில் எல்லாம் முன்னணியில் நின்று பணியாற்றினார். போராட்டங்களில் ஈடுபட்டதால் 1958லும், 1961லும் ஏறத்தாழ ஆறு, ஆறுமாதங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

1961ம் ஆண்டுப் போராட்டத்தின் போது திரு. கந்தையா அதிதீவிரமாகப் பங்கேற்றார். அதுவும் அப்போது அவருக்கு உடல் நலமில்லாத நிலை, எனினும் சால்வையை மடித்து தலைக்குப் போட்டுக் கொண்டு, யாழ்ப்பாணம் கச்சேரி முன்பு கொதிக்கும் வெய்யிலில் அவர் சத்தியாக்கிரகம் செய்தது இன்றும் பசுமை போல காட்சி தருகிறது.

திரு. கந்தையாவின் பேச்சில் கொதிப்பு அதிகம் இருக்காது. குளிர்மையும் நகைச்சுவையும் அதிகம் இருக்கும். அவரது நகைச்சுவைகள் எதிரிகளை வேல் போலத் தாக்கும் கூர்மை பொருந்தியன.

தமிழகத்தின் பொருளாதார முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டிய திரு. கந்தையா ஒரு சிறந்த சமயத் தொண்டராகவும் விளங்கினார்.

### வார்சோவில் உரிமைக் குரல்

சென்ற இடமெல்லாம் செல்வாவின் கொள்கையை எடுத்துக் கூறியவரான திரு. கந்தையா போலந்து தேசத்தின் தலை நகரான வார்சோவில் நடைபெற்ற சர்வதேச பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள சென்றிருந்தபோது, அங்கும் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையையும் ஒரு சமஷ்டியரசு நிறுவப்படவேண்டிய அவசியத்தையும் எடுத்துக் கூறி, உலகின் கவனத்தை தம் பக்கம் இழுத்தார்.

எல்லாந் தமிழியக்கத்தில் அதிக அக்கறை கொண்டிருந்த திரு. கந்தையா, தாம் அரசாங்கக் கணக்குக் குழுத்தலைவராக இருந்தபோது 1959ம்-1960ம் ஆண்டின் அரசாங்கக் கணக்குக் குழு அறிக்கையை தமிழில் தயாரித்து வெளியிட்டு, தமிழில் எல்லாம் செய்ய முடியும் என்பதை நிரூபித்தார்.

### தமிழில் சபை நடத்தியவர்

ஒருமுறை வரவு செலவு திட்டம குழு நிலையில் விவாதிக்கப்பட்டபோது, சனப்பிரதிநிதிகள் சபைகு தலைமை தாங்கி, சபை நடவடிக்கைகளைத் தமிழில் நடத்திக்காண்பித்த பெருமை திரு. கந்தையாவினுடையதே.

பாராளுமன்றத்திலே அப்போதைய பிரதமர் திருமதி. சிறீமாவோ பண்டாரநாயக்காவும், திரு. கே. எம். பி. இராசரத்தினவும் தமிழர்கள் பரம்பரையில் வந்தவர்கள் என்றுஎடுத்துக்காட்டினார் இக்கூற்று அவரது சிறந்த நகைச்சுவைக்கு மட்டுமன்றி ஆழ்ந்த ஆராய்ச்சித் திறனுக்கும் ஓர் எடுத்துக் காட்டு.

எப்பொழுதும் கட்சியின்கட்டளைக்கு கட்டுப்பட்டு வந்த திரு. கந்தையா 1963ம்ஆண்டு பருத்தித்துறையில் உணவு மந்திரியின் வருகையை எதிர்த்துக் கறுப்புக்கொடிப்போராட்டத்தில் கலந்துக் கொள்ளும்

(14-ம் பக்கம் பார்க்க)

## கந்தையா பெயர் அழியாது!

வளர்மதி வாணன் அன்பு
சான்ற நற்றலைவன் திங்கள்
திகழுவான வரையில் எங்கள்
தமிழுயர் வேணு மென்று
நவின்ற தோடுழைத் துயர்ச்சி
நாடியோன் கந்தை யாவே!
இமையவர் வாழும் நாடு
ஏகிநீ நன்று வாழ்க!

கலையிலே மலையா னன்னன்
கல்வியில் இமய மானன்
உலையிலே இட்ட தீயாய்
உயர் தமிழரசில் நின்று
விலைமதியாத செல்வ மாயினும்
வேண் டேனென்று
அலையெனத் தமிழர் கோட்டம்
அமைத்துமே வாழ்ந்தா யன்றோ!

எத்தனை கற்ற போதும்
இறுமாப் பெள்ளளவு மின்றி
நித்திய அறிவு கொண்டு
நிமிர்ந்த நேர் நடையினின்று
புத்தியால் பிறரை வெற்றி
புரிந்து பாராளு மன்றம்
பற்றியே தமிழைக் காத்துப்
பரகதி யடைந்தோய் வாழி!

திரிநிறக் கொடியின் கீழே
தெரியுமே உரிமையென்று
புரியவே மேடை யேறி;
"புரிகுவோம் சமரெ"ன் றுரத்து
வரிந்து போர்க் கொடியைக் கட்டி
வாழ்ந்துமே மறைந்து சென்ற
பெரியவன் கந்தை யாவின்
பெய ரழியாது நிற்கும்

— வி. த. குமாரசாமி

## 'இடதுசாரிகளால் நன்மையில்லை'

வகுப்புவாதத்தை வளர்த்து, வாட்டமுறவேண்டும். தோட்ட தொழிலாளர்கள் என்று கனவு கண்டு அதை நனவாக்க முயற்சி செய்து கொண்டிருக்கும் இடதுசாரிகட்சிகளால் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதுவித நன்மையும் கிடைத்துவிடாது. அரசியல் அத்திவாரமில்லாத சில கட்சிகளெல்லாம் தொழிலாளர்களுக்கு நன்மை செய்வோம் அதைச் செய்வோம் இதைச்செய்வோம் என்று உங்கள் முன் கூறிக்கொண்டிருப்பவர்களெல்லாரும் நல்லவர்களல்ல. சில பசுத் தோல் போர்திய புலிகளும் எம்மத்தியில் இருக்கின்றனர்.

இவ்வாறு கடந்த 17-5-67ல் தலவாக்கொல்லையில் நடந்த தலவாக்கொல்லை மாவட்ட இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் மாட்டக்குழுக்கூட்டத்தில் உரையாற்றிய கழகத்தின் தலைமை அலுவலக பிரமுகர் திரு. கோ. இ. து. கோவிந்தராசன் கூறினார்.

கழகத்தின் துணைத்தலைவரும் தலவாக்கொல்லை மாவட்ட தலைவருமான திரு. சாமன் இக் கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலையைச் சுற்றி சுழலும் மர்மம்

## சிவப்புக் கைக்குட்டையும் சாவியும் யாருடையது?

கம்பளைப் பகுதியில் புஸெல்லாவையைச் சேர்ந்தததே ஸ்டெலன்பர்க் (கந்தளாய்) தோட்டம்.

இந்த தோட்டத்தின் சூப்பிரன்டன்ட்தான் திரு. சி. ஏ. ஜி. போப்.துரைஅவருக்கு வயது சுமார் 45 இருக்கலாம். கட்டுமஸ்தான உடற்கட்டுள்ளவர்.

1941 மே 9ந் திகதி

திரு. போப் துரை அன்று இரவுச் சாப்பாட்டுக்கு தனது தோட்டத்திலிருந்து சுமார் 7மைல் தூரத்திலுள்ள லெவலன் தோட்டத்தின் பங்களாவுக்குச் சென்றிருந்தார். லெவலன் தோட்டத்துரை திரு. ஆர். டி. பிளாக்மோர் என்பவரே அன்றிரவு அவருக்கு விருந்தளித்தவர்.

இரவுச் சாப்பாட்டுக்குப் பின் போப் துரை இரவு சுமார் 11 மணிக்கு ஸ்டெலன்பர்க் தோட்டத்துக்குப் புறப்பட்டார். அவர் தனது காரைத் தானே ஓட்டிக் கொண்டு சென்ருர்.

இரவு சுமார் 11-30 மணிக்கு போப்துரையின் கார் ஸ்டெலன்பர்க் தோட்டத்தின் தேயிலைத் தொழிற் சாலையைக் கடந்து சென்றது.

### பங்களாவுக்கு டெலிபோன்

தொழிற்சாலைக் காவலாளியான ஜே. ஏ. காசிம் என்பவர் வழக்கம் போல பங்களாவுக்கு டெலிபோன் செய்து, துரை வருகிருரென்றும் கார் கராஜைத் திறந்து வைக்கும்படியும் அப்புவுக்குக் கூறினர்.

ஐந்து அல்லது பத்து நிமிடங்களுக்குப் பிறகு அப்பு, காசிமுக்கு டெலிபோன் செய்து 'துரையின் கார் வரவில்லை' என்று தெரிவித்தார்.

காசிம் பாதை வழியே பங்களாவை நோக்கிச் சென்ருர் நிலைமையை அறிவதற்காக.

நிலவு பால்போல காய்ந்து கொண்டிருந்தது.

**காசிம் சுமார் 200 யார் சென்றிருப்பார். அங்கு அவருடைய எஜமானர் நினைவிழந்த நிலையில் இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருப்பதைக் கண்டார்.**

சில யார்களுக்கு அப்பால் பாதையின் அடுத்த வளைவில் கார் நின்றது. பாதைக்குக் குறுக்கே கட்டைகள் போடப்பட்டிருந்தன.

### கைக்குட்டை சாவி

போப் துரை விழுந்துகிடந்த இடத்தில் ஓர் இரும்புக் குழாய்க் கம்பியும் மூன்று துண்டுகளாக உடைந்து போன ஒரு கம்பும்,ஒரு சிகப்பு நிறக் கைக்குட்டையும் ஒரு நீலநிறக் கைக்குட்டையும், சிகப்புக் கைக்குட்டையில் முடியப்பட்ட ஒரு சாவியும் கிடந்தன. இவற்றைக் காசிம் கண்டார்.

காசிம் உடனே போய் உதவிக்கு ஆட்களை அழைத்து வந்தார். அங்கிருந்து சுமார் ஒரு மைல் தூரத்திலுள்ள பங்களாவுக்கு போப்துரை எடுத்துச் செல்லப்பட்டார்.

இதற்கிடையே போலிசாரும் வந்து விட்டனர்.

போப்துரை நினைவு திரும்பாமலேயே இறந்து விட்டார்.

ஆரம்பத்தில் இக் கொலை வழக்கு கம்பளை மாஜிஸ்டிரேட் திரு ஐவர் டி. சேரம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு, உயர் நீதி மன்றத்துக்குப் பாரப்படுத்தப்பட்டது.

சுப்றீம் கோர்ட்டில் 1941 டிசம்பர் 1ந் திகதி திங்கள் கிழமை நீதியரசர் சூட்ஸ் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு வந்தது.

விசாரணையின் ஆரம்பத்தில் அட்டோர்னி - ஜெனரல் திரு. ஈ. ஜி. பி. ஜயதிலக்கா கே. சி. வழக்கை எடுத்துரைத்தார்.

அவர் கூறியதாவது:

'மே 9 ந் திகதி இரவு 11-30 மணிக்குபோப்துரைஸ்டெலன்பர்க் தோட்டத்தில் தேயிலைத் தொழிற்சாலையிலிருந்து பங்களாவுக்குச் செல்லும் பாதையில் மிருகத்தனமாகக் கொலை செய்யப்பட்டார்.

### இறங்கினர் தாக்கப்பட்டார்

தொழிற்சாலையிலிருந்து சுமார் 300 யார் தூரத்தில் பாதையில் குறுக்கே கட்டைகள் தடையாக வைக்கப்பட்டிருந்ததால் துரை தனது காரை நிறுத்த வேண்டியதாயிற்று.

கட்டைகளை அகற்றுவதற்காக அவர் தன் காரிலிருந்து இறங்கினர். அப்பொழுது அவர் தாக்கப்பட்டு கொலையுண்டார்

தாக்கப்பட்டு சுமார் இரண்டரை மணிநேரத்திற்குப் பின்னர், அதாவது இரவு 2 மணிக்கு போப் துரை உயிர் நீத்தார்.

அவரது உடலில் காணப்பட்ட பல காயங்களும் சம்பவம் நடந்த இடத்தில் காணப்பட்ட பல ஆயுதங்களும் அவரைத் தாக்கியதில் அநேகர் பங்கு பற்றினர் என்பதை நிரூபிக்கின்றன.

அத்துடன் அவர் ஓர் ஆஜானுபாகு. தனியொரு மனிதன் அவரை அடித்து வீழ்த்திவிட முடியாது.

ஸ்டெலன்பர்க் தோட்டத்தின் தொழிலாளர்களான இந்த எதிரிகளே இந்தக் குற்றத்தைச் செய்திருக்கிருர்கள் என்பதே எங்களின் குற்றச் சாட்டு.

### காரணம் தெளிவு

இந்தக் குற்றத்தைக் செய்வதற்கான காரணமும் தெளிவாக இருக்கிறது.

ஸ்டெலன்பாக் தோட்டம் பணியக் கணக்கு, மேல் கணக்கு என்று இரு பகுதிகளைக் கொண்டதாகும். சுமார் 500 தொழிலாளர்கள் இத் தோட்டத்தில் வேலை செய்கின்றனர்.

1940 பெப்ருவரியில் அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் கிளை ஒன்று இத்தோட்டத்தில் நிறுவப்பட்டது. இச் சங்கத்தின் தலைமைக் காரியாலயம் கண்டியில் திருகோணமலை வீதி 54ம் எண் கட்டிடத்தில் இருக்கிறது.

ஸ்டெலன்பர்க் தோட்டத் தொழிலாளர் சுமார் 300பேர் இச்சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர்.

மெய்யப்பன் என்பவர் சங்கத்தின் தோட்டத் தலைவராளுர். அவர்தான் தோட்டக் கிளை யூனியனின் காரியதரிசி. அ. இ. தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் நிர்வாகக் குழுவின் உறுப்பினராகவும் இருந்தார்.

1940 அக்டோபரில் தோட்டத்தில் ஒரு சிறிய தகராறு ஏற்பட்டது.

### எதிரி வேலை நீக்கம்

டீமேச்கரும், உதவி டீமேக்கரும் செய்த புகாரின் மீது இவ்வழக்கில் முதலாவது எதிரியான வீராசாமியை போப் துரை வேலையிலிருந்து நீக்கி அவருக்குப் பற்றுச்சீட்டு கொடுத்தார்.

பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ள முதலாவது எதிரி மறுத்து விட்டார். அவர் இது பற்றி அ. இ. தோட்டத் தொழிலாளர் சங்கத்துக்குப் புகார் செய்தார்.

சங்கம் தோட்டத் துரைக்கு ஒரு கடிதம் அனுப்பியது. துரை முன்னிலையில் கங்காணியும் உதவிக் குமாஸ்தாவும் முதலாவது எதிரியை அடித்திருப்பதாகக் குற்றஞ் சாட்டிய சங்கம், முதலாவது எதிரிக்கு மீண்டும் வேலை கொடுக்கும்படி துரையைக் கேட்டுக் கொண்டது.

### துரையின் மனவேதனை

இத்தகராறு தீர்க்கப்பட்டதாகத் தெரிகிறது. முதலாவது எதிரி முன்பு தேயிலைத் தொழிற் சாலையில் வேலை செய்து கொண்டிருந்தார். அவா அதிலிருந்து நீக்கப்பட்டு வேறு வேலை கொடுக்கப்பட்டார்.

இந்த சம்பவத்துக்குப் பின்னர், தானே வீராசாமிக்கு மீண்டும் வேலை பெற்றுக் கொடுத்ததாக மெய்யப்பன் தோட்டத்திற் பெருமை அடித்துக் கொண்டு திரிந்தார். இது போப்துரைக்கு மனவேதனையைக் கொடுத்தது.

ஜனவரி 2ந் திகதி துரை மெய்யப்பனை வேலையிலிருந்து நிக்குவதென்று முடிவு செய்து அவருக்குப் பற்றுச் சீட்டைக் கொடுத்தார்.

அவர் சங்கத்திடம் புகார் செய்தார். மெய்யப்பனுக்கு வழங்கிய 'நோட்டீசை' வாபஸ் வாங்கும்படி சங்கம் துரைக்கு எழுதியது. துரை அதற்குப் பதிலனுப்பினுரென்று தெரிகிறது. சங்கம் மீண்டும் ஒரு கடிதம் துரைக்கு அனுப்பி வைத்தது.

### வழக்கு தாக்கல்

சங்கத்தின் இக் கடிதம் துரைக்கு வேதனையை விளைவித்தது.

அவர் மே மாதம் 1ந் திகதி கம்பளை மாஜிஸ்

(14-ம் பக்கம் பார்க்க)

## இந்த சூழ்நிலையிற்தான்...

நேருஜி இலங்கைக்கு விஜயம் செய்து, இலங்கை வாழ் இந்தியப் பிரமுகர்கள் பலருடன் விவாதித்து, பின்னர் இலங்கை இந்தியர் காங்கிரஸை நிறுவுவதற்குத் துணை புரிந்தார்.

இ. இ. காங்கிரஸ் மலையகத்தில் வாயில்லாப் பூச்சிகளாகக் கருதப்பட்ட தோட்ட மக்களிடையே ஒரு வித விழிப்பை ஏற்படுத்தியது என்பது உண்மையே.

இந்திய தேசியத்தைப் பின்னணியாகக் கொண்டு தான் அவர்களிடையே இந்த விழிப்பு ஏற்பட்டது. ஆனல் 1939ல் அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் என்ற பெயரில் மலையகத்தில் தொழிற்சங்கமொன்றினை நிறுவி, புரட்சி காரர்களான சமதர்மிகள் மலைத் தோட்டங்களில் நுழைந்தனர்.

இச்சங்கத்தின் தலைவராக திரு பொன்னையாவும், காரியதரிசியாகத் திரு, வேலுச்சாமியும் பணியாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு காலத்தில் மலைநாட்டையே குலுக்கிய இச்சங்கம் சென்ற உலக யுத்தம் முடிந்தவுடன் தாளுகவே மடிந்து விட்டது.

அன்று இச்சங்கத்தின் நடவடிக்கையின் காரணமாக மலையகத்தில் சில பகுதிகளில் தோட்டத் தொழிலாளர் மத்தியிலே புரட்சிகரமான எண்ணங்களும் போராட்ட உணர்ச்சியும் தோன்றத் தொடங்கின. அடங்கிக் கிடந்தவர்கள் ஆர்த்தெழுந்தனர். இது அன்றைய ஆட்சியினருக்கும் கவலையளித்தது.

மலை நாட்டிலே தோட்ட வெள்ளைத் துரைமார்களின் ராஜ்யம் கொடி கட்டிப் பறந்த காலம் அது! இ. இ. காங்கிரஸால் தொழிலாளர் மத்தியில் ஏற்பட்ட விழிப்பைக் கண்டு கதி கலங்கியிருந்த தனிக்காட்டு அரசர்களான வெள்ளைத் துரைமார் அ இ. தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டு மேலும் திகிலடைந்தனர்.

அநேக தோட்டங்களில் மலைத் தொழிலாளர்களின் வரலாற்றில் முதன் முதலாக இச் சங்கத்தின் தலைமையின் கீழ் வேலை நிறுத்தங்கள் வெடித்தன. வேலை நிறுத்தம் பல தோட்டங்களுக்குப் பரவியது.

முல்லோயத் தோட்ட வேலை நிறுத்தத்தில் கோவிந்தன் என்னும் தொழிலாளி சுட்டுக் கொல்லப்பட்டான். இச்சம்பவம் நாட்டையே ஒரு கலக்கு கலக்கியது.

இவற்றைக் கண்டு மலை நாட்டுத் தொழிலாளி தலை நிமிர்ந்தான் — தோட்டத் துரைமார்களோ பரபரப்பு அடைந்தனர்.

மலையகத்திலே இந்த சூழ்நிலை நிலவும் போதுதான் அ. இ. தோட்டத் தொழிலாளர் சங்கம் கம்பளைப் பகுதியில் புஸ்ஸெல்லாவயிலுள்ள ஸ்டெலன் பர்க் (கந்தளாய்) தோட்டத்துள் நுழைந்து உறுப்பினர்களைச் சேர்த்தது. தோட்டத்தில் தொழில் தகராறுகளும் தோன்றின.........




## கொலை வழக்கு விசாரணை

நீதி மன்றம்: கொழும்பு உயர் நீதி மன்றம்
நீதியரசர்: நீதியரசர் சூட்ஸ்

விசாரணை ஆரம்பம்: 1941 டிசம்பர் 1ந் திகதி.

குற்றச் சாட்டு: 1941 ஏப்ரில் 9ந் திகதி கண்டிமாவட்டம், கம்பளை டிவிஷன், புஸ்ஸெல்லாவைச் சேர்ந்த ஸ்டெலன்பர்க (கந்தளாய்) தோட்டத்தின் துரை சி. ஏ. ஜி. போப் என்பவர் கொலை செய்யப்பட்டார்.

எதிரிகள்: 1. வீராசாமி 2. வேலாயுதன் 3. ஐயண் பெருமாள் 4. ரெங்கசாமி 5. சின்ன முனியாண்டி 6. மாரிமுத்து வேலாயுதன் (எல்லோரும் ஸ்டெலன்பர்க் தோட்டத்தின் தொழிலாளர்கள்)

அரசாங்கத்தின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள்: அட்டோர்னி ஜெனரல் திரு ஈ. ஜி. பி. ஜயதிலக்கா கே. ஸி. திரு. ஆர். ஆர். கிரோஸட் தம்பையா திரு. ஓ. எல். டி கிரெட்ஸர்(ஜுனியர்)

1 வது, 2வது, 3வது, 5வது, 6வது எதிரிகளின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள்:

திரு. ஆர். எல். பெரேரா கே. ஸி.
திரு. ஜே. ஆர். ஜயவர்தன,
திரு. பி. எச். டபிள்யூ. டி. சில்வா
திரு. ஆர். என். இலங்கக்கோன்.

4 வது எதிரி சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள்:

திரு. பி. [illegible]
திரு. எச். டபிள்யூ. ஜயவர்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்கர் மீது பாய்ச்சல்

கத்தோலிக்கர்கள் ஐரேப்பாவுக்கு யாத்திரை செல்வதாகக் கூறிக்கொண்டு இந்நாட்டுக் செலாவாணியைக் கடத்தும் இரகசியத் திட்டமொன்றைக் கண்டுபிடித்திருப்பதாக "சிங்களே" (23-5-67) கூறுகிறது.

இப்பத்திரிகையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

"வெளிநாடுகளில் பிரயாணஞ் செய்வதற்காகச் செல்லும் இலங்கையருக்குக் கடுமையான செலாவணிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆனல் கத்தோலிக்க தேவஸ்தானத்தின் சிபார்சு கிடைக்குமானல் அன்னிய செலாவணி எவ்வளவு வேண்டுமானலும் இலங்கையிலிருந்து கொண்டு செல்வதற்கு இடம்கிடைக்கும் என்று கூறப்படுகிறது. இதற்காக கத்தோலிக்கராக இருக்க வேண்டியது அவசியமாகும்.

கத்தோலிக்கராக விரும்பினுல் ஒரு பௌத்தர் கூட இத்திட்டத்தின்படி பணம் வெளிநாடு கொண்டு செல்வதற்கு அனுமதி கிடைக்குமாம் இத்திட்டம் கீழ்க்காணும் முறையில் அமுல் நடத்தப்படுகிறது.

முதலில் செய்ய வேண்டியது தான் ஒரு கத்தோலிக்கரென்றும், லூர்து நகரத்துக்கு யாத்திரை செல்லவிருப்தாகவும் கார்டினல் ஆண்டகையிடமிருந்தோ, மேற்றிராணி ஒருவரிடமிருந்தோ ஒரு கடிதம் பெற்றுக்கொள்வதே. அடுத்து இக் கடிதத்தை எடுத்துக்கொண்டு மத்திய வங்கியிலுள்ள ஒரு குறிப்பிட்ட உயர்தர அதிகாரியிடம் செல்ல வேண்டுமாம்.

கத்தோலிக்கதேவஸ்தானத்தின் கோரிக்கையை நிறைவேற்றிக்கொடுப்பதற்காக மத்திய வங்கியில் வெளிநாட்டுச் செலாவணிப் பகுதியில் செய்யப்படவேண்டிய காரியங்களை அணு பிசகாமல் செய்து கொடுப்பதை அந்த உயர்தர அதிகாரி கவனித்துக்கொள்வார்.


கத்தோலிக்க தேவஸ்தானத்தின் சிபார்சின்மீது வெளிநாட்டு செலாவணியை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவோரில் பலர் யாத்திரை செல்வதில்லை. அவர்கள் உல்லாசத்துக்காகவும் வேறு காரியங்களுக்காகவும் ஐரோப்பாவுக்குச் செல்கின்றனர்.

எந்த நோக்கத்துக்காகச் செலவாணி அனுமதிக்கப் படுகிறதோ அந்த நோக்கத்துக்காக அது பயன்படுத்தப்பட்டதா என்று சோதனை செய்து பார்க்கும் பழக்கமில்லாததால் இந்த அனுமதியை மோசடியாகப் பயன்படுத்துவதற்கு இடமுண்டு.

இவ்வாறு கத்தோலிக்க தேவஸ்தானத்தின் அனுமதியைப் பெறுவோரில் அநேகர் கத்தோலிக்கரல்லர். தேவஸ்தானத்தின் கோரிக்கையின் மீது கத்தோலிக்கர் ஒருவருக்கு இரண்டாவது முறையாகவோ அதற்குப்பிறகோ வெளிநாடு செல்லுவதற்குத் தேவைப்படும் போது, அந்த நபரின் முந்திய பிரயாணங்கள் பற்றிய விபரங்களடங்கிய கடிதக்கோவை மத்யவங்யிலிருந் மாயமாக மறைந்து விடுகிறதாம். இந்த மறைவுக்குப் பின்னல் அந்த உயர்தர அதிகாரி இருக்கிருராம்.


# ராணி

## அழகிகளைத் தெரிவு செய்து அழகிய பரிசொன்றைப் பெறுங்கள்.



மேலேயுள்ள படத்தில் இலங்கையின் பண்டைய அரசிகளில் ஒருவரான பத்மாவதி குளித்துக் கொண்டிருக்கிருர். அவரைச் சூழ அவருடைய சேடிமாரும் மற்றும் பல அழகிகளும் காணப்படுகின்றனர். இவர்களுடைய முகங்கள் மறைந்திருக்கின்றன.

நீங்கள் இப்பொழுது செய்யவேண்டிய காரியம் மிகவும் இலகுவானது. படத்தில் எத்தனை முகங்கள் உண்டு என்பதை எண்ணிப் பார்த்து, உங்கள் பதிலைக் கீழேயுள்ள பத்திரத்தில் எழுதி அந்தப் பத்திரத்தை ராணி சந்தன சோப் உறையொன்றுடன் த. பெ. 1119. கொழும்பு என்னும் விலாசத்துக்கு அனுப்ப வேண்டியதே.

மேலேயுள்ள படத்தில் ....... ராணி அழகிய முகங்கள் காணப்படுகின்றன.

பெயர்: ..................

வயது ..................

விலாசம் ..................


ஒப்பம்: ..................

**விதிகள்**

1. இந்தப் போட்டியில் சுவதேசி இன்டஸ்ட்றியல் வேர்க்ஸ் லிமிட்டெட் மலர் அன்ட் பிப்ஸ் (இலங்கை) லிமிட்டெட், கிரான்ட் அட்வேர்ட்டைஸிங் (இலங்கை) லிமிட்டெட் ஆகிய ஸ்தாபனங்களின் ஊழியர்களோ அவர்களின் குடும்பத்தவர்களோ பங்குபற்றத் தகுதியற்றவர்களாவர்.
2. இந்தப் போட்டி சம்மந்தமாக எத்தகைய கடிதப் போக்குவரத்தும் நடைபெறமாட்டாது.
3. நீதிபதிகளின் தீர்ப்பே இறுதி முடிவாக இருக்கும்.


**1 ஆம் பரிசு**

சிங்கர் தையல் மெஷின் (கபினெற் மொடல்) அல்லது ரூ. 1000/- ரொக்கம்.



**2 ஆம் பரிசு**

ஒரு குருண்டிக் பாட்டரி ரேடியோ அல்லது ரூ. 525/- ரொக்கம்.




**3 ஆம் பரிசு**

ஒரு ஹம்பர் பைசிக்கிள் அல்லது ரூ. 300/- ரொக்கம்.



**4 ஆம் பரிசு**

டயமன் மண்ணெண்ணெய் அடுப்பு மற்றும் சமையல் பாத்திரங்கள் கொண்ட பொட்டலம் அல்லது ரூ. 185/- ரொக்கம்.



முதலாவது பரிசு முதலாவதாகக் கிடைக்கப்பெறும் துப்புரவான, சரியான விடைக்கு வழங்கப்படும். இவ்வாறே 2ஆம், 3ஆம், 4ஆம் பரிசுகள் இரண்டாவதாகவும் மூன்ருவதாகவும் நான்காவதாகவும் கிடைக்கப்பெறும் துப்புரவான சரியான விடைகளுக்கு வழங்கப்படும்.

**சோப்புகளில் ராணி ராணி சந்தன சோப்**

சுவதேசி இன்டஸ்ட்றியல் வொர்க்ஸ் லிமிட்டெட், கந்தானை.

GRANT-32


— எத்த (21-5-67)

## இ. போ. ச. வின் சங்கடம்

இலங்கைப் போக்கு வரத்து சபை நஷ்டத்தில் நடைபெறுவதால் இ. போ. ச.வின் நிர்வாகசபையைக் கலைத்துவிட்டு, புதிய நிர்வாக சபையொன்றினை அமைக்கும்படி பிரதம மந்திரிக்கு ஆலோசனை கூறுவதற்கு தேசியமய சேவை அமைச்சர் திரு. சுகத்ததாசா உத்தேசித்துள்ளார் என்று அறியப்படுகிறது.

இ. போ. ச. தொடர்ந்து நஷ்டமடைவதற்குக் காரணம் இ. போ. ச. நிர்வாக சபை, உயர்தர அதிகாரிகள் ஆகியோர்களிடையே ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமையும், தகராறுகளுமே என்பதை அறிந்துள்ள அமைச்சர் இது பற்றி விசாரணை செய்வதற்கு ஒரு கமிஷனை நியமிக்கவும் உத்தேசித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிகள் அனைத்துக்கும் மூலம் செந்தமிழே

## யாழ். ஞானப்பிரகாசர் ஆராய்ந்து கண்ட முடிவு

## சொல்லாராய்ச்சியில் இறங்க அறிஞர்கள் முன்வரவேண்டும்

நமது தாய் மொழியாம் தமிழ்மொழி திராவிடக் குடும்ப மொழிகளுள் தலையான மொழி என்பது அனைவராலும் ஒப்பப்பட்டதாகும்.

திராவிடக்குடும்பம் என்பது திருந்திய மொழிகளான, தமிழ், தெலுங்கு கன்னடம், மலையாளம், துளு, குடகு என்பனவும், திருந்தாத மொழிகளான, துடம், கோதம், கோண்ட், கூ, ஒரியன், இராஜ்மகால் அல்லது மாலர் முதலாயின வேறு சிலவும் கொண்டதாகும்.

திருந்திய மொழிகளுள்ளும், துளு—தனி எழுத்து வடிவம் பெருததும், குடகு, கன்னடத்தின் கிளைமொழி ஆகும் அளவே தனிமையுடையதும் ஆகும். தெலுங்கும் கன்னடமும்—பல நூற்றாண்டுகளாகவே தனித்து இயங்கத் தலைப்பட்டு; தனி வரிவடிவமும் இலக்கியமும் இலக்கணமும் கொண்டவையாக இலங்குவன; மலையாளம், அண்மைக் காலத்திலேயே தமிழினில் இருந்து வேற்றுமைகொள்ளத் தொடங்கி முன்னூறு ஆண்டுகளாகவே தனிவழியில் வளர்ச்சி பெற்று வருவதாகும்.

திருந்திய மொழிகளும் திருந்தாத மொழிகளும்ஆகிய அனைத்தும், தமிழின் மூலச் சொற்களோடும், வேர்ச்சொற்களோடும் பிறப்புத் தொடர்புடையன என்பதும் மொழி நூலோரால் காட்டப்பட்ட உண்மையாகும்.

இவற்றுள் திராவிடமொழிகளுளளே—தாயாகவோ அன்றித் தமக்கையாகவோ கொள்ளப்படும் தகுதியுடையதாயிற்று தமிழ். திருந்திய திராவிட மொழிகளுள்ளே—முதன் முதல் எழுத்து வடிவும், இலக்கியமும் அவற்றினை நெறிப்படுத்தும் இலக்கணமும் பெற்றிருப்பது தமிழே. பிற திராவிட மொழிகள் தனி வழியில் புதியவரிவடிவில் அடியெடுத்து வைப்பதற்கு முன்னதாகவே—ஒரு மொழி பெற வேண்டிய வளர்ச்சிகளனைத்தும்பெற்றுத் தலைசிறந்து விளங்கியது தமிழே.

தெலுங்கும், கன்னடமும் தனிக்கூறு ஏதும் காணும் முன்னரே தமிழ் இயலாகப் பெருகி இசையாகஒடிக் கூத்தாக ஆடி, முத்தமிழாக மலர்ந்து மணம் பரப்பியது.

### சங்க காலம்

இரண்டாயிரம்ஆண்டுகட்கு முன்னர்—ஒரு மூவாயிரம் ஆண்டுகால அளவேனும்—தமிழ் மொழிப்புலமை வளர்க்கும் திறன் வாய்ந்த தமிழ்ச் சங்கங்கள் பல நிலவியுள்ளன. சங்கங்கள் பற்றிய செய்திகள் எவையாயினும், தமிழ் இலக்கியங்கள், சங்ககாலச் செய்யுட்கள் ஒருநெறிமுறை உடையதாய் விளங்குவதையும் அவற்றைப் பாடிய புலவர்கள் மிகப்பலர் என்பதையும் புலமைத் தெளிவினின்றும் பிறக்கும் இலக்கணமும், அக்காலத்திலேயே மிக உயர்ந்த வடிவு பெற்றிருந்ததென்பதையும் நோக்குமிடத்து, புலவர் பலர் கூடித் தமிழாயும் வாய்ப்புடைய சங்கங்கள் நடைபெற்றிருத்தல் இயல்பே என்பது போதரும்.

தமிழ் மக்களின் பேச்சு வழக்கு மொழி பல்லாயிரம் ஆண்டுவளர்ந்தன்றோ எழுத்து வடிவு பெற்றிருக்க முடியும். எழுத்து வடிவம் பொருளைக் குறிக்கும் அளவாக எழுதப்பட்டதின் ஆயிரம் ஆண்டுகட்குப் பின்பன்றோ செய்யுளும், எழுதப்பட்டிருக்கும். செய்யுள்கள் பலவாகப் பெருகிய காலத்திலன்றோ வரையறை செய்யும் இலக்கணம் முகிழ்த்திருக்கும்.

கருத்து பிறந்து, அது மெள்ளவளர்ந்து, காலத்தினுல் தெளிந்து சிந்தனைசிறந்து விளக்கம் பெறுங்காலத்திலன்றோ வாழ்க்கையைப் பற்றிய தெளிந்த உண்மைகளைக் காணமுடியும்.

### பழைய பெருமை

தமிழர்கள் தொல்காப்பிய இலக்கணம் பிறந்த கடைச் சங்கதத்துக்கு முற்பட்ட காலத்திலேயே, வாழ்க்கையையே பொருள் எனக் கண்டு, அது அகமாகவும்—புறமாகவும் கொள்ளலாவது என வரையறை செய்ததும், இலக்கணத்தை எழுத்து சொல், பொருள் எனமுக்கூறுகத்தெளிந்ததும் 'திணை' என்பது இயல்பான, ஒழுக்கம் எனக் கொண்டு நிலத்தை ஐந்திணை ஒழுக்கத்திற்குஉரியகளங்களாகவும் உயிர்களை உயர்திணை, அல்திணையாகவும் வகுத்த அருமை எளிதாகுமோ? சொற்களைப் பாகுப்படுத்தும் இடத்து ஆண், பெண், பலர், ஒன்று, பல எனப் பால் முறை வகுத்து 'அப் பொருளோடு இயைந்து நிற்பது போன்றபலவற்றில் மாறுபட்டுக் கிடப்பதன்றே!

மககள் வாழ்க்கையின் நோக்கம் எதுவாக இருக்க வேண்டும், எந்தக் கடமையில் மகிழ வேண்டும், எதற்குத் தன்னையும் இழக்க முன்வர வேண்டும் எதனை உண்மை இன்பம் என உணரவேண்டும் எதனைச் செல்வமாகப் போற்ற வேண்டும், எவற்றைக் கடிந்தொழுக வேண்டும், எவற்றில் எழும் விருப்பத்தை அடக்க வேண்டும், எவற்றைக் கண்டு நாணவேண்டும், எது பண்பு எது சால்பு? எது அறம்? எனப் பலகாலும்புலவர்பலர்எண்ணி எண்ணிச் செய்யுளாகப் பாடிப்பாடி — கருத்தைத் தீட்டிக் கூர்த்ததால் அன்றோ, திருக்குறள் ஆகிய அமிழ்தம் தமிழ்க் கடலினின்றும் எழுவதாயிற்று.

இவ்வாறு, தொன்று முதலாகவே பல துறையிலும் வளர்ந்து செழித்து வளரும் நந்தமிழ், முத்தமிழாய் முழங்கியது, செந்தமிழாய்ச் சிறந்தது, பைந்தமிழாய்ப் பரவியது, சங்கத் தமிழாய் நிலைத்தது என்பது தமிழறிந்தார் கண்டது.

### திராவிட மொழிகளின் தலைவி

திராவிட மொழிகளுள்ளே தலைமையும் — தனித்தன்மையும், தொன்மையும், உடையது தமிழ் என்பதும் திராவிட நூலாசிரியர்கள் தெளிந்தது.

கன்னடமும் களிதெலுங்கும் துளு மலையாளமும் ஈன்று புறந்தந்ததும் சீரிளமையோடு விளங்குதல் நோக்கிக் கன்னித் தமிழ் எனவும், பிற மொழியின் துணையின்றி இயங்கும் ஆற்றலுடைமையின தனித் தமிழ் எனவும் போற்றப்படுவது.

இவையேயன்றி, மக்கள் இனம் மொழியறியாக் காலத்தில், அவர்களிடம் பிறந்து வளர்ந்ததாலே இயற்கை மொழி எனவும், மிகவும் தொன்மையான பிறப்புடையதாயினும், பிற தொல் மொழிகள் எனப்படும் லத்தீன், ஹிப்ரூ, கிரேக்கம் வட மொழி போன்று வழக்கிழவாத தன்மையால், வாழ் மொழி, முது மொாழி எனவும் சிறப்பிக்கப்படுவது.

'முது மொழி நீ அனுதி என மொழிகுவதும் வியப்பாமே' என்றார் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. இயல்பாக எழும் குரல் ஒலிகள் மாறுதும், கெடாதும், ஒலித்தற்குத் துன்பமான கடும் ஒலிகள் (கனைப்பும், அலறலும், கத்தலும் இல்லாமை) புகாமலும் ஒலிக்கப்படும் நன்மையுடைமையின இன் மொழிஎனவும் கொள்ளப்படும். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்குங் காணோம்' என்றாரல்லரோ பாரதியார்.

'இன்பத் தமிழ எமது; எமக்கின்பம் தரும்படி வாய்ந்த நல்லமுது' என்றாரன்றே புரட்சிக் கவிஞர்.

'தமிழ்' என்றாலே 'இன்பம்'' 'இனிமை' எனப் பொருள் வழங்குவதும் நாம் அறிந்ததே.

### சமஸ்கிருதமும் தமிழும்

இத்தகு பெருமையுள்ள தமிழ் மொழியின் ஒரு தனிச் சிறப்பு 'அண்மைக் காலமாக மொழி நூல் ஆராய்ச்சியாளர்களால் அவரவர் காணும் உண்மையின் அளவானே உரைக்கப்பட்டு வருகிறது.

தமிழ், திராவிட இன் மொழிகளின் தாய் என்பது மட்டுமேயன்றி, செய்யப்பட்ட மொழியாகிய சமஸ்கிருதத்தின் சொல்வளத்துக்கும் ஏதுவாகவும், இந்தோ ஐரோப்பிய மொழிகள் அனைத்திற்கும் [illegible] ஆக்கமளித்த மொழியாகவும், உலக மொழிகள் அனைத்திற்கும் அவற்றின் மூல வேர்களாய் அமைந்த சொற்களிலே தன் வண்ணம் பதித்த ஆதிமொழியாகவும், சான்றுகள் கொண்டு துணியப் படுகிறது.

வடமொழி — தென்மொழியான தமிழின் வளர்ச்சிக்கு என்றும் ஏதுவானதில்லை. உயிராற்றல் பொருந்திய தமிழ் மொழிக்கு, இயற்கை வளர்ச்சியை என்றும் பெருத செயற்கை மொழியான சமசுகிருதம் துணையாதல் இயல்வதன்று. சமசுகிருதம் உருவான காலத்து அதற்கு உணவாக — உயிர் ஊட்டமாக, வட நிலத்தில் வழங்கிய தமிழின் திரிந்த வடிவ மொழிகளே அமைந்தன. சமஸ்கிருதமோ, தமிழ் உடம்பின் அலங்கரிக்கும் பொருளாக, அதுவும் இயற்கை அழகையும், உயிர்த் தன்மையுடைய ஒலிச் சிறப்பையும் கெடுக்கும் வேண்டாத சுமையாக பூட்டப்பட்டன.

### தமிழுக்கு கேடு

ஆயினும், இது காலை தமிழுக்குவடமொழித்துணைவேண்டப்படுவதன்று என்பதும், வடமொழிக்கலப்பு தமிழுக்குக் கேடே என்பதும் தெளிவாகிஉள்ளது. எனினும், வட மொழி தமிழுக்குப் பட்டுள்ள கடன் பற்றி நினைவு கொள்வார் இல்லை.

தமிழ்ச் சொற்கள் பல, பல நூற்றாண்டுகட்கு முன்னரும், வேதங்கள் எழுதப்பட்ட காலத்தும் வட மொழியில் இடம்பெற்றுள்ளன. அவை, வடமொழியாளர் உச்சரிப்பால் சிறிது வடிவு திரிந்தன. வடிவு திரிந்த அவற்றின் மூலச்சொல் 'தமிழில்' உள்ளதென ஒப்புக் கொள்வதால் தம்முடைய தேவபாடையின் கற்பனை உயர்வு கெடுவதாகும் எனக் கருதிய வடமொழியாளர், அவற்றிற்கெல்லாம் வடமொழியிலேயே மூலவேர்கள் உள்ளன எனக் கற்பிக்கலாயினர். அவ்வேர்கள் காட்டும் மூலப்பொருள் பொருந்தமுடையவையனவாக இல்லாவிடத்தும் எவ்வாறே 'வேர்' உற்பத்தி செய்யப்படுவது அவர்கள் முறையாயிற்று.

வட மொழியில் வழங்கிய 'த்ராவிடம்' என்னும் சொல் 'தமிழ்' என்பதை வட மொழியாளர் ஒலித்த வகையால் பெற்ற திரிபேத்மிளம், த்ரமிளம், த்ரவிடம், த்ராவிடம் என — அழைக்கப்பட்ட வகையால் அவ்வடிவத்தை வட மொழியில் பெற்றது. அதற்குப் பொருள் காண்போர் 'த்ரு-விடம்' என அதைப் பகுக்கும் முறை எல்லாம் நெறியாகாது. கருத்தும் சிறப்பதாகாது. மாறுக அச்சொல் —வடசொல்லே எனக் காட்டவும் — அச்சொல்லே ,தமிழ் என்னும் இன்னோசையும் இன்மைப் பொருளும் இயல்பாக உடைய பெயராயிற்று என நாட்டவும் முற்படுதல் 'தமிழ்'ச் சொல் வழக்கின தொன்மையை உணராத கூற்றேயாகும்.

### 'முத்தமும்' 'முக்தா'வும்

'முத்தம்' என்னும் தென் பாண்டிக் கடல் நன் முத்துக்களே யன்றி அச் சொல்லும் —வட மொழியாளர் தமிழிடம் பெற்றதேயாகும். ஆனல் அதனை 'முக்தா' என வழங்கி 'முக்த' என்னும் வட சொல் மூலம் கொண்டது என்பர். வேர்ச் சொல்லுக்கு — சிப்பியிலிருந்து விடுதலை பெற்றதால் எனப் பொருள் காட்டி மகிழ்வர்.

முகம் என்னும் தமிழ்ச் சொல், முன், முனை, மூக்கு, முகத்தல், முகர்தல், முலை, முளை, மூளை, முதலான பலப் பல தமிழ்ச் சொற்களோடும் பொருந்த பிறந்ததாகவும் அச்சொல்லை அந்த வடிவில் பெற்ற வடமொழியாளர்—அது வட சொல்லே என வாதிடுவர். ஐம்பொறிகளும், ஐம்புலன்களாகிய, ஒலி ஒளி, நாற்றம், சுவை, ஊறு ஆகியவற்றை நுகருதல் உடைமையின், அவற்றை முகத்தல் (கொள்ளுதல்) நோக்கி முகம் எனப் பெயர் பெற்றதைத் தமிழறிஞர் எடுத்துக் காட்டுவர்.

இவை போல்வன பல.

### மயக்கம் தீர்ந்தது

இவையேயன்றி, தமிழ் விரிந்து நின்ற காலத்து மேலைக் கடற்கரையினின்றும் மேல் திசை நாடுகட்குச் சென்ற பண்டங்களோடு ஒட்டிச் சென்ற தமிழ்ப் பெயர்களான — தோகை, அகில், அரிசி, இஞ்சிவேர், முதலான சொற்களும் அம் மொழிகளில் ஒலி திரிந்து வடிவுமாறி வழங்குவதை, தமிழினின்றும் வட மொழியில் புகுந்து வழங்கும் திரிந்த வடிவுகளோடு, எவ்வகை வரலாற்றுச் சான்றும் இன்றியே உறவு காட்டி— முதன்மை நாட்ட முற்படுவர்.

ஆயினும் ஆராய்ச்சி வளருவதால் —தமிழின் முதன்மையும், தொன்மையும் வடமொழியாளர் விளைவித்த மயக்கத்தை அகற்றுவனவாயின.

### உலகம் உணர்த்தும் உண்மை

'உலகம்' என்னும் தமிழ்ச் சொல் — சங்க காலத்திற்கும் முற்பட்ட வழக்குடையதாய் வழங்கி வருவது. உலம் வருவோர் —என்பதற்குச் சுழல்வோர் என்பது பொருளாதல் புறநானூற்றுப் பாடல் சொல் ஒன்றாலேயே உணரப்படும். உலவை — என்பது சுற்றி வீசுங் காற்று. உலம், உருண்டையானது எனவும், உலவு சுற்றிவருவது எனவும் பொருள்படுவதை நோக்குமிடத்து, ஞாயிற்றைச் சுற்றி வருவதும், தானே சுழல்வதும், உருண்டையானதுமான உலகத்துக்கு-இப்பெயர் எவ்வளவு பொருத்தமும், ஏற்றமுடையது என்பது விளங்கும்.

உலகம்என்பதை வடமொழியாளர் 'லோக்க' எனத் திரித்து வழங்கியது மட்டுமின்றி, அதற்குவேர் 'லோக்' எனக்கொண்டு,'பார்'க்கப்பட்ட இடம் (காட்சியான பொருள்) எனப்பொருள் காண்பர். அவர் தம்மொழி வெறி—'பொருளை' இழந்தற்கு ஏதுவானதையும் இது காட்டுவதன்றோ!

(14-ம் பக்கம் பார்க்க)

பேராசிரியர் க. அன்பழகன் எம். ஏ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களத் தினசரி மூட்டிய தீ

செய்திப் பத்திரிகைகள் தான் பிரச்சினைகளைக் குழப்பியடித்த விஷமப் பிரசாரத்தின் மூலம் மக்கள் மனதை மாசுபடுத்துகின்றன என்ற உண்மை அண்மையில் தெரியவந்தது. பத்திரிகைகளின் விஷமப் பிரசாரங்களைத் தமிழரசுத் தந்தையும் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டத்திற் கண்டித்ததாக ஒரு செய்தி காற்றுடியின் காதுக்கு எட்டியது. உடனே அகலவத்தை நினைவுக்கு வந்து விட்டது காற்றுடிக்கு.

'மாவட்டசபை கிராமக்கமிட்டியைவிட அதிகாரம் குறைந்ததாக இருக்கும்' என்ன விழிக்கிறீர்கள்! இது ஒரு பத்திரிகையின் செய்தித் தலைப்பு—ஏரிக்கரையிலிருந்து காலையில் வெளியாகும் ஒரு பிரபல சிங்களத்தினசரி (13-5-67) மாங்காய் பருமன் எழுத்துக்களில் 8 பத்திகள் நீளத்தில் வெளியிட்டிருந்த விஷமத்தனமான தலைப்புதான் இது.

அகலவத்தைத் தேர்தல் கூட்டமொன்றில் பிரதமர் பேசும்போது, 'தேசிய அரசாங்கம் நிறுவவிருக்கும் மாவட்டசபைக்குக் கிராமக் கமிட்டியின் அதிகாரம்கூட இருக்காது' என்று கூறியதாக அந்தத் தலைப்பின் கீழ் செய்தி வெளியிட்டிருந்தது அத் தினசரி.

ஏரிக்கரையின் தமிழ் தினசரியோ, ஆங்கிலத் தினசரிகளோ இந்தச் செய்தியை வெளியிடவில்லை? ஏன்? சிங்களத் தினசரி மட்டும் வெளியிடக் காரண மென்ன?

அந்தக் கூட்டத்தில் பிரதமர் பேசும்போது கூட்டத்தின் மீது காற்றுடியும் பறந்து கொண்டுதானிருந்தது. பிரதமரின் வாயிலிருந்து வெளிவந்த ஒவ்வொரு சொல்லும் காற்றுடியின் காதில் தெளிவாக விழுந்தது. இப்படி அவர் கூறவேயில்லை. இது சுத்தப் பொய். பிரதமரைச் சிக்கலில் மாட்டி வைப்பதற்காக கட்டிய கதைஇது.

இதனைக் காற்றுடி இலேசில் விட்டுவிடுமா என்ன?

அந்தரங்கத்தை அறிய காற்றுடி ஏரிக்கரைமீது சுழன்று சுழன்று பறந்துகொண்டிருந்த போது, உள்ளே முணு முணுக்கும் பேச்சுகள் காற்றிலே மிதந்து வந்து காற்றுடியில் மோதின. இரகசியம் என்ன தெரியுமா?

அகலவத்தை இடைத்தேர்தலில் 'மாவட்டசபை' முக்கிய பிரச்சினைகளிலொன்றும். எனவே சிங்கள வாக்காளர்களை ஏமாற்றுவதற்காக சிங்களத் தினசரி மட்டும் இச் செய்தியை இட்டுக் கட்டி பிரசுரித்ததாம். அதுதான் மற்ற பத்திரிகைகள் அதனை வெளியிட வில்லையாம்! பிரதமர் பத்திரிகையாளரிடம் மாவட்ட சபை பற்றி கூறியதும் இந்த இடைத்தேர்தலுக்காகத் தானும்!

எப்படிக் கதை? இத் தினசரி சுமார் 100,000 பிரதிகள் தினசரி விற்பனையாகின்றனவாம். ஒரு பிரதியைச் சராசரி 3 பேர் வாசித்தாலும் சுமார் 300,000 பேர் இச்செய்தியை வாசித்து ஏமாந்திருப்பார்களல்லவா? இப் பத்திரிகையை என்ன செய்யலாமென்று நீங்களே கூறுங்கள்.

நாட்டையே பாதிக்கும் ஒரு பாரதூரமான செய்தியைப் பிரசுரித்துவிட்டு ஒரு சில சிங்கள வாக்காளர்களுக்காக பிரசுரித்தோம் என்றுகூறி தப்பித்துக் கொள்ள அனுமதிப்பதா?

இம்மாதிரி நாட்டுக்கே தீமூட்டும் பத்திரிகைகளைத் தடை செய்து மக்களைப் பாதுகாக்கும்படி பிரதமரிடம் கேட்டுக் கொள்ளலா மென்றுகூட காற்றுடிக்குத் தோன்றுகிறது.

●

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கான மசோதா பாராளுமன்றத்தில் இந்தக் கூட்டத் தொடரிலேயே— ஜூன் 20ந் திகதிக்கு முன்பு — நிறைவேறிவிடுமென்று காற்றிலே மிதந்து வந்த ஒரு செய்தி காற்றுடியிலே மோதியது.

எதிர்க் கட்சித் தலைவியும், 'அப்பி சிங்கள' இயக்கத்தின் தலைவரும் நாடெங்கினும் கூட்டங்கள் நடத்தி மசோதாவுக்கு எதிராக பெரும் கூச்சல் போட்டதும் அன்று காற்றுடி கேட்டுக் கொண்டுதான் இருந்தது.

அதே சமயத்தில் வணக்கத்துக்குரிய ஒரு மகாநாயக்க தேரோவும்இந்தமசோதா சட்டமானால் மூன்று இலட்சம் தோட்டத் தமிழர்களுக்குப் பிரஜாவுரிமை கிடைத்துவிடுமென்றும், அதனால் அடுத்த தேர்தலில் 72 தொகுதிகளில் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கக் கூடிய நிலையில் தமிழர்கள் இருப்பார்களென்றும் ஆகவே மசோதாவை நிறைவேற்ற வேண்டாமென்றும் பிரதமருக்கு எழுதிய கடிதங்களும் காற்றுடியின் கண்ணில் படாமல் தப்பிவிடவில்லை.

## காற்றுடி

ஆனால் மசோதா மக்கள் பிரதிநிதிகள் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவது நிச்சயமென்று சபைக் கட்டிடத்தின் படிகளில் நின்றுகொண்டிருந்தவர்கள் பேசிக் கொண்டார்கள்.

மசோதாவை எதிர்த்து நாட்டிலே தீவிரப் பிரசாரம் செய்து வந்த எதிர்க்கட்சித் தலைவி மசோதா விவாதத்துக்கு வரும்போது பாராளுமன்றத்திலேயே பிரசன்னமாக இருக்க மாட்டாராம் நல்ல வேடிக்கைதான்!

மற்றொரு வேடிக்கை என்னவெனில் எதிக்கட்சிப் பிரங்கிகளிலொருவரான டாக்டர் என். எம். பெரேராவும் அன்று பாராளுமன்றத்துக்கு வருவதும் சந்தேகம்தானும்.

●

சென்ற வாரம் தலைநகரில் காலிமுகத்திடலின் மீது காற்றுடி பறந்து கொண்டிருந்த போது, 'எங்கே? எங்கே? எங்கே?' என்ற கூச்சல் திடலின் வட கோடியிலிருந்து கிளம்பியது.

'என்ன எங்கே? எது எங்கே?' என்பதை அறிய கற்றுடி சற்று அந்தத்திசையை நோக்கிப் பறந்தது 'பீலிக்ஸ் எங்கே? எங்கே!' என்ற கூச்சல் மீண்டும் ஒலித்தது. அப்பொழுதுதான் விஷயம் காற்றுடிக்குப் புரிந்தது.

கடந்த ஏப்பிரல் மாதத்தில் திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்கா வடகொரியாவுக்குச் சென்றாராம். அங்கே மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றதாக இங்கே பேச்சு அடிபட்டது.

மேதினம் முடிந்தது ஆனால் அவர் திரும்பி வரவில்லை. அவர் வடவியட் நாமுக்குச் சென்றிருப்பதாக காற்றிலே ஒரு செய்தி மிதந்து வந்தது.

வேறு தகவல் கிடைக்குமா என்று அறிய காற்றுடி வான வெளியில் சற்று நோட்டம் விட்டது.

அம்மையாரின் யுத்த—சமரசத் திட்டமொன்றை எடுத்துக் கொண்டு அவர் அங்கே பறந்து சென்றிருக்கிறார் என்ற ஒரு வதந்தி வானத்தில் பரவுவதையும் காற்றுடி கண்டது.

காற்றுடிக்கு ஒரு சந்தேகம்! பிரதமருப் முன்பு ஒரு சமரசத் திட்டத்தை வடக்கு வியட்நாமுக்கு அனுப்பியிருந்தாரல்லவா? அதற்குப் போட்டியாக அம்மையாரும் ஒரு திட்டத்தை அனுப்பியிருசகலாமோ என்பதே அச்சந்தேகம்.

சந்தேகம் தீருமுன்பே, மற்றொரு வதந்தி மின் வேகத்தில் வந்து காற்றுடியிலே மோதிச் சிதறியது.

அம்மையார் இதற்கு முன்பு அவரையும் அழைத்துத் [illegible] யூகோஸ்லாவியாவுக்குச் சென்றாராம். இம்முறையும் அப்படி நடக்கலாமாம். எனவே அம்மையார் யூகோவுக்கு புறப்பட முன்பு அவர் வந்துவிடுவாராம். இது தான் அந்த வதந்தி,

ஆனால் வதந்தி பொய்த்துவிட்டது. 'எங்கே,எங்கே?' என்று கூச்சல் மீண்டும், வானவெளிக்குக் கிளம்பியது காலிமுகத்திடலின் வட கோடியிலிருந்து.'

●

இதற்கிடையில் மற்றொரு வதந்தி வானவெளியை வைகு தூரத்திற்கு அப்பால் மிதந்து செல்வதை காற்றுடி கண்டது. மோல்டாதீவுக்கு ஒரு மாநாட்டிற்கு சென்றிருக்கும் என். எம். அப்படியே கிழக்கு ஐரோப்பா பக்கம் பறந்து சென்று யூகோவில் போய்க் குதித்துவிடுவாராம் இது தான் அந்த வதந்தி.

'அப்படியா செய்தி?' என்று தனக்குத் தானே கூறிக் கொண்டது. காற்றுடி.

# சமஷ்டி வேண்டுமா? மக்கள் தீர்ப்புக்கு சமர்ப்பிக்க முடிவு

சுதந்திரன் அரசியல் விமர்சகர்

இலங்கையின் அரசியல் சாசனத்தைத்திருத்துவதற்கான சிபார்சுகளைச் செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக்குழு இது விஷயமாக மக்களின் நேரடிக்கருத்துக்களை ஒரு கேள்வித் தாள் மூலம் அறிவதற்கு முன் வந்துள்ளது. இது ஒரு நல்ல முயற்சியாகும்.

இலங்கையின் அரசியல் சாசனத்தில் எப்படிப்பட்ட திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்பதை அரசியல் வாதிகள் மட்டும் கூடி தீர்மானிப்பதைவிட பொதுமக்களின் கருத்துக்களை அறிவது ஒரு நல்ல ஜனநாயக முறையாகும். தேசிய அரசாங்கம் இந்த முறையைக் கையாள முன்வந்தது மூலம் ஜனநாயக முறைகளில் அதற்குரிய ஆர்வத்தை வெளிக்காட்டியுள்ளது.

### பண்டா தயாரித்தது

பொது மக்களிடம் தெரிவுக்குழு சமர்ப்பிக்க உத்தேசித்துள்ள கேள்வித் தாள் புதிதாகத் தயாரிக்கப்பட்டது அல்ல. 1958ம் ஆண்டு காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவால் தயாரிக்கப்பட்டதே. அக் கேள்வித் தாளில் காணப்பட்ட கேள்விகள்தான் இதிலும் இருக்குமாம். எனவே திரு. பண்டாரநாயக்காவின் கொள்கைகளைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் சுதந்திரக் கட்சியினரும், அது பற்றிக் குறை சொல்ல முடியாத ஒரு சூழ்நிலையை தெரிவுக் குழு ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் கேள்வித் தாளில் உள்ள 16 கேள்விகளில் ஒன்று இலங்கைக்கு ஒற்றையாட்சி முறை விரும்பத்தக்கதா? அல்லது சமஷ்டி போன்ற வேறு முறையான ஆட்சி முறை விரும்பத்தக்கதா என்பதாகும்.

### ஒரு வெற்றி

இந்தக் கேள்வியும் கேள்விக் கொத்தில் இடம் பெறுவதே இந்நாட்டில் சமஷ்டிக் கோரிக்கைக்கு கிடைத்த ஒரு வெற்றியென்று கூறலாம்.

1958ம் ஆண்டு திரு. பண்டாரநாயக்காவால் தயாரிக்கப்பட்ட இக் கேள்விக் கொத்திலேயே இக் கேள்வியை திரு. பண்டாரநாயக்கா சேர்த்திருப்பதிலிருந்து, அப் பொழுதே அவருக்கு சமஷ்டியாட்சியமைப்பில் ஆர்வம் இருந்திருக்கிறது என்பது புலனாகிறது.

அதனால் தான் சமஷ்டி பற்றிய கேள்வியையும் கேள்வித்தாளில் அன்றே இடம் பெறச் செய்திருந்தார்.

இன்று தேசிய அரசாங்கமும் அந்த கேள்வியை மக்கள் முன் வைப்பதிலிருந்த, மக்கள் விரும்பினால் ஒரு சமஷ்டியரசமைப்பை நிறுவ அதுவும் ஆர்வம் கொண்டிருக்கிறது என்பதையே புலப்படுத்துகிறது.

### விளக்கம் வேண்டும்

எனினும் துரதிருஷ்ட வசமாக, சமஷ்டி யென்பது நாட்டைப் பிரிப்பது என்று சந்தர்ப்பவாத அரசியல் வாதிகளால் இந்நாட்டு மக்களுக்கு தவறுவியாக்கியானம் நாப்பட்டிருக்கிறது. ஆகவே ஒற்றையாட்சி யென்றால் என்ன! சமஷ்டியென்றால் என்ன, என்பதும் மக்களுக்கு எடுத்து விளக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

சமஷ்டியமைப்பு விரும்பத்தக்கதா? ஒற்றையாட்சியமைப்பு விரும்பத்தக்கதா, என்றுகேட்கப்படும்கேள்விக் கொத்தில், ஒற்றையாட்சியென்றால் என்ன, அது எங்கெங்கு நடைமுறையில் இருக்கிறது என்பதும், சமஷ்டியமைப்பு எப்படி இயங்கும், எந்தெந்த நாடுகளில் சமஷ்டி ஆட்சி நடைபெறுகிறது என்ற விளக்கமும் பொதுமக்களுக்குத் தரப்படுமானால் மட்டுமே சாதாரண மக்களால், ஆட்சி முறையிலுள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொள்ள முடியும். அதைவிடுத்து சமஷ்டியென்றால் பூதம் என்று நாட்டு மக்களுக்கு பிரசாரம் செய்யப்பட்டுள்ள வேளையில், மக்கள் அதுபற்றி சிந்தித்து சரியான கருத்தை வெளியிடுவது கடினமே.

இக் கேள்விக்குப் பதிலளிக்க பொதுமக்களுக்குப் போதிய அவகாசம் கொடுக்கப்பட வேண்டும். அத்துடன் சமஷ்டி முறையைப்பற்றி தமிழரசார் மக்களிடையே தீவிரபிரசாரம் செய்வதற்கும் இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும்.

● விசாரணைக் கமிஷன்

● 'வாலறுந்த' தலைவரின் புது முயற்சி ●

● 'சன்' ஏட்டின் அறிவீனம்

●

கல்வெட்டித் துறையில் ஏப்பிரல் எட்டாந் திகதி நடைபெற்ற பொலீஸ் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றி விசாரணை நடத்திய பருத்தித்துறை நீதிபதி தமது விசாரணையின் முடிவில் துப்பாக்கிச் சூட்டில் இறந்த திரு. சிவஞானசுந்தரத்தின் மரணம் கொலை என்று தீர்ப்பு கூறியுள்ளார். நீதிபதியின் இத் தீர்ப்பையடுத்து இது சம்பந்தமாக மேற் கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அட்டர்னி—ஜெனரல் ஆலோசித்து வருவதாக செய்திகள் கூறுகின்றன.

வட மாகாணத்தில் கடந்த சில ஆண்டுகளாக, பொலீஸ் ராணுவக் கெடுபிடிகள் ஆங்காங்கே நடைபெற்று வந்துள்ளன. தமிழ் மக்கள் தமது சொந்தப் பிரதேசத்திலேயே இராணுவத்தினராலும், பொலீசாராலும் பலமுறை துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

### வெறியாட்டம்

யுத்தகாலத்தின், கைப்பற்றப்பட்ட எதிரியின் பிரதேசத்

(3-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சுக்குச் சூடு தட்டியது

## சமஷ்டி வேண்டுமா?

(8ம் பக்கத் தொடர்ச்சி)

தில் வெறித்தனமாக நடந்து கொள்ளுவது போல வட பகுதியில் இராணுவ வெறியாட்டம் பல முறை ஆங்காங்கே நடைபெற்று வந்துள்ளது. இராணுவ வீரர்கள், கடைகளில் சென்று பொருளை வாங்குவார்கள். பணம் கேட்டால் அடியும் உதையும் மட்டுமல்ல, சில வேளைகளில் கடை கூட கொழுத்தப்பட்டிருக் கிறது. இப்படிப் பட்ட சம்பவங்கள் பலமுறை நடைபெற்றிருக்கின்றன.

இன்னும் சில இடங்களில், இராணுவத்தினரின வெறிப் போக்கால், பெண்கள் பொது இடங்களில் தனியே செல்ல முடியாத நிலைமைகளும் ஏற்பட்டன என்பதை எவரும் மறந்திருக்க முடியாது.

வட மாகாணத்தில் ஆங்காங்கே நடைபெற்று வந்த பொலீஸ், இராணுவத்தினரின் அராஜகச் செயலகளுக்கு அதிகம் இலக்கான இடம் வல்வெட்டித்துறைதான். இராணுவத்தினரும், பொலீசாரும் தொடர்ந்து நடத்தி வந்த அராஜக, வெறிச் செயல்களின் தொடர்பான நிகழ்ச்சியே கடந்த ஏப்பிரல் 8ந் திகதி வல்வெட்டித்துறையில் ஏற்பட்ட மோதுதல் என்பதை நாம் முன்பு இப்பத்திகளில் சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

### கமிஷன் வேண்டும்

வல்வெட்டித்துறைச் சம்பவங்களையடுத்து வட பகுதி இராணுவத்தினரின் நடவடிக்கைகளை ஆராய ஒரு பகிரங்க விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டும் என்று பிரதம மந்திரியிடம் தமிழரசுப் பிரதிநிதிகள் வற்புறுத்தியிருந்தார்கள். நாமும் இதே கருத்தை வற்புறுத்தியிருந்தோம்.

ஆனல், பொலீஸ் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றிய நீதிமன்ற விசாரணை முடிவடைந்ததும், அது பற்றிக் கவனிப்பதாக பிரதமர் அப்போது உறுதிமொழியளித்திருந்தார்.

இப்பொழுது விசாரணை முடிந்து நீதிபதியின் தீர்ப்பும் வந்து விட்டது. நீதிபதி யளித்துள்ள தீர்ப்பும், பகிரங்க விசாரணைக் கமிஷன் வேண்டும் என்ற கோரிக்கையைப் பலப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

வட பகுதியில் இராணுவத்தினரின் மேல் பொது மக்களால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை ஆராயவும், அத்து மீறிய நடவடிக்கைகள் இன்மேல் ஏற்படாமல் தடுக்கவும், வல்வெட்டித்துறை சம்பவம் போன்ற துயரந் தோய்ந்த சம்பவங்கள் இனிமேல் ஏற்படாமல் இருக்கவும், உடனடியாக ஒரு விசாரணைக் கமிஷனை நிறுவுவதற்கு பிரதமர் முன்வரவேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறோம். இதில் இன்னும் கால தாமதம் செய்வது தமிழ் பேசும் மக்களுக்கு வீணான சந்தேகங்களையும் தேசிய அரசில் அவ நம்பிக்கையையும் ஏற்படுத்தவும் கூடும் என்பதையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

ஒரு காலத்தில் அரசியல் அஞ்ஞாத வாசம் செய்து மீண்டும் தமிழ் பிரதேசத்து அரசியலில் தலையை நீட்டியுள்ள ஒரு தலைவர் தனது இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவதற்காக இப்பொழுது ஒரு புது வழியைக் கையாண்டு வருகிருர் என்று தோன்றுகிறது.

அரசியலில், பொது மக்களால் ஒதுக்கப்பட்ட குப்பை கூழங்களையும், துரோகிகளையும், சுயநலப் பித்தர்களையும் ஒன்று கூட்டி வைத்துக் கொண்டு தமிழரசுக் கட்சியை எதிர்த்துப் பிரசாரம் செய்து மக்களைக் கவர்ந்து விடலாம் என்று அவர் கருதுகிருர் போலும்! அவரது சமீபத்திய அரசியல் போக்கு அப்படியே எண்ண வைக்கிறது.

வேறு கட்சிகளிலிருந்து வெளியேற்றப்பட்டு மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டவர்களை மேடையேற்றி தனக்கு 'ஐயா' போட வைப்பதன் மூலம் மீண்டும் தமிழ் மககளின் ஆதரவைப் பெற்று விடலாம் என்று அவர் நினைப்பாராளுல் நிச்சயம் ஏமாற்றம் அடைவார்.

### பிற்போக்கு கும்பல்

அவரும் ஏனைய 'புதிய' சிட கோடிகளும் ஒன்ருகச் சேர்ந்து உட்கார்ந்திருக்கும் காட்சியைக் காணும் போது, தமிழ்த் 'துரோகிகள்' ஒன்று சேர்ந்து விட்டார்கள் என்றும், பிற்போக்கு வாதிகள் அனைவரும் ஒரு கும்பலில் சேர்ந்து விட்டனரென்றும் மக்கள் எள்ளி நகையாடுகின்றனர்.

இது 'குப்பை கூழங்களை' ஒன்று கூட்டி அரசியல் வியாபாரம் நடத்தும் ஒரு பிற்போக்கு முகாம். தமிழ்ப் பேசும் மக்கள் இந்தக் கும்பலை ஏற்கனவே இனம் கண்டு கொண்டிருப்பதால் இவர்கள தமிழரசு இயக்கத்தை தடுப்பதற்காக ஒரு சுண்டு விரலைக் கூட உயர்த்த முடியாது.

❀

'முதியவன் ஏட்டைக் கெடுத்தான் பாடியவன் பாட்டைக் கெடுத்தான்' என்பது ஒரு நாடோடி வழக்கு.

இம் மாதம் 21ந் திகதி 'தினபதி'யைவெளியிடும் நிறுவனத்திலிருந்து வெளிவரும் 'சன்' என்ற ஆங்கிலப் பத்திரிகை 'தமிழகம்' என்ற தலைப்பின் கீழ் எழுதியுள்ள ஒரு தலையங்கம் மேற்படி நாடோடி வழக்கினையே நினைவூட்டுகிறது.

தெரியாமலோ, அல்லது வேண்டுமென்றே, தப்பும் தவறுமாக அத்தலையங்கத்தில் விபரங்கள் தரப்பட்டுள்ளன. பின்வரும் இரு விடயங்கள் அதில் குறிப்பிடத்தக்கன. ஒன்று, தமிழ்நாட்டில், சிங்கள மொழிக்கு இடமளிக்கப்படவில்லையென்ற குற்றச்சாட்டு. இரண்டாவது தமிழ்நாட்டில் 35 விதம் மக்கள் தெலுங்கு பேசுபவர்களாக இருந்தும் தெலுங்குக்கு அங்கு இடங் கொடுக்காத நிலையில் 10விதம் மட்டுமே தமிழர்கள் வாழும் இலங்கைத் தீவில் தமிழுக்கு இடம் கேட்பது வேடிக்கையானதாம்.

### தமிழ் நாட்டில் சிங்களமா?

சிங்களத்துக்கு தமிழ் நாட்டில் இடம் அளிக்கப்படவில்லையென்ற 'சன்'னின் குற்றச்சாட்டு விஷமத்தனமானது. சிங்களம், தமிழ் நாட்டில் பேசப்படும் ஒரு மொழியல்ல; அத்துடன் அது அந்நாட்டின் தேசிய மொழிகளில் ஒன்ருமல்ல. எனவே தமிழ் நாட்டு ஆட்சியில் சிங்களத்துக்கு இட மளிக்குமென்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

பிரஞ்சு நாட்டில் சிங்களம் எப்படி ஆட்சி மொழியாக முடியாதோ, இங்கிலாந்தில் எப்படி சிங்களம் ஆட்சி மொழியாக முடியாதோ, அப்படியே தமிழ் நாட்டிலும் சிங்களத்துக்கு ஆட்சிபீடத்தில் இடமிருக்க முடியாது.

## மூன்று எம். பி. களின் தீவிர நடவடிக்கை

தெலுங்கர் 35 விதம் பேர் தமிழ் நாட்டில் வாழ்ந்தும் அங்கு தெலுங்குக்கு உரிமையளிக்கவில்லை யென்று கூறும் 'சன்' இதன் மூலம் தனது அறிவீனத்தை காட்டியிருக்கிறது.

### தெலுங்கர் பிரச்சினை

தமிழகத்தை எல்லையாகக் கொண்டுள்ள ஆந்திரமாநிலத்தில் தெலுங்கு முழு உரிமையுடன் பரிபூரண ஆட்சி மொழியாக இருக்கிறது. அந்த வகையில், தமிழ் நாட்டில் தமிழும், ஆந்திராவில் தெலுங்கும் ஆட்சி மொழிகளாக திகழ்கின்றன.

அது மட்டுமல்ல தமிழ் நாட்டில் 35 விதம் பேர் தெலுங்கர்கள் என்று தவபும் தவறுமாக எழுதியிருக்கிறது 'சன்'.

தமிழ் நாட்டின் சனத்தொகையில் ஏறத்தாழ 10 விதம் பேர் மட்டுமே தெலுங்கர்கள்.

ஆனல், இந்தத் தெலுங்கர்கள் கூட உண்மையில் தெலுங்கர்களே அல்ல. பல தலைமுறைகளுக்கு முன்னர் தமிழகத்தில் வந்து குடியேறி, தமிழர்களாக மாறிவிட்டவர்கள்.

இவர்கள் தங்களைத் தெலுங்கர்கள் என்று கூறிக்கொள்வதில்லை. தமிழர்கள் என்றே தம்மைக் கூறிக் கொள்பவர்கள். தமிழர்களுடனே கொடுக்கல் வாங்கல் முதல், திருமணத் தொடர்புவரை உறவு கொண்டவர்கள். அவர்களைத் தமிழ்ப் பேசும் தெலுங்கர் என்று கூறலாம்.

### 'சன்' எதிர்ப்பானேன்?

இந்தத் தெலுங்கர்களின் மொழிக்கு தமிழ்நாட்டில் உரிமை கொடுக்கப்படாத போது இந் நாட்டு தேசிய மொழிகளில் ஒன்ருன தமிழுக்கு இங்கு(இலங்கையில்) இடமளிப்பது எப்படி என்று 'சன்' கேட்பது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்றதாகும்.

பாரதத்தில் தெலுங்கு பேசும் பிரதேசத்தில் தெலுங்கு மட்டுமே ஆளுகிறது. தமிழ் நாட்டில் தமிழ் மட்டுமே ஆளுகிறது.

அதை அப்படியே பின்பற்ற வேண்டுமென்று 'சன்' கருதினல், வடக்கு கிழக்கில் தமிழ் மட்டுமே ஆட்சி மொழியாக்கப்படுவதை எதிர்ப்பானேன்? தமிழ்ப் பிரதேசத்தில் தமிழும் சிங்களப் பிரதேசத்தில் சிங்களமும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று தானே இந்நாட்டுத் தமிழ் மக்கள் கோருகிருர்கள்?

இந்தக் கோரிக்கையை ஆதரிக்க 'சன்' தயாரா? அதன் சகோதரப் பத்திரிகையான 'தினபதி' தயாரா என்று கேட்க விரும்புகிறோம்.

தமிழ் மக்கள் இலங்கையின் மொத்த ஜனத்தொகையில் 10சத விகிதமே என்று கூறுவதும் உண்மையை மறைப்பதாகும். இங்கு சுமார் 27 ... தமிழ் ... பதை 'சன்' உணர வேண்டும்.

### யாழ் புகையிலைக்கு இந்திய ஜவுளியை மாறுகொள்வோம்

இந்தியாவுக்கு யாழ்ப்பாணப் புகையிலையை ஏற்றுமதி செய்து அதற்குப் பதிலாக இந்தியாவிலிருந்து ஜவுளி இறக்குமதி செய்வதற்கான ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் அத்திட்டம் கடந்த ஆறு மாதங்களாக உள்நாட்டு அமைச்சரின் அலுவலகத்தில் தூங்கிக்கொண்டிருந்ததாகவும் அறியப்படுகிறது.

ஆனல் இவ்வாரம் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழரசு எம். பிகள் அரசாங்கத்தின் இந்த மந்தப் போக்கைக் காரசாரமாக கண்டித்ததாகவும், அதன் பிறகே அமைச்சுக்குச் சூடு தட்டி, அத்திட்டப்பற்றி தீவிரமாகப் பரிசிலனை செய்யத் தொடங்கியிருப்பதாகவும் அமைச்சு வட்டாரங்களில் கூறப்படுகின்றன.

இது சம்பந்தமாக டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், திரு. வி. தர்மலிக்கம், திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை ஆகியதமிழரசு எம். பிகள் தீவிர நடவடிச்கை எடுத்து வருவதாகத் தெரிகிறது.

இந்த பண்டமாற்று முறை அங்கீகரிக்கப்பட்டால் யாழ்ப்பாணம் புகையிலைக்கு இந்திய மார்க்கெட் மீண்டும் கிடைப்பதுடன், அன்னிய செலாவணியின் றியேஇந்தியாவிலிருந்து ஜவுளி இறக்குமதி செய்ய வாய்ப்பு கிடைக்குமென்று வர்த்தக வட்டாரங்களில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

### விசாரணைக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வட மாகாணத்தில் இராணுவத்தினரும் பொலீசாரும் நடந்து வரும் முறைபற்றி கூறப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களை ஆராய்வதற்கென விரைவில் ஒரு பகிரங்க விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படலாமென்று விஷயமறிந்த வட்டாரங்கள் கூறின.

தமிழ் எம். பீக்களினதும், வடமாகாண தமிழ் மக்களினதும் ஏகோபித்த இக் கோரிக்கையை பிரதமர் நிராகரிக்கமாட்டாரென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனல் கமிஷன் நியமிக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தை வற்புறுத்தி வருவதாகவும் அறியப்படுகிறது.

எதிர்க்கட்சியினருக்குச்செவி சாய்க்க வேண்டுமென்று ஐ. தே. கட்சியினரில் ஒரு சாரார் கருத்து தெரிவித்துள்ளரெனினும், அரசாங்கம் எதிர்க்கட்சிகளுக்கு இவ்விடயத்தில் விட்டுக் கொடுக்காதென்றே அரசியல் வட்டாரங்களில் நம்பப்படுகிறது. இது சம்பந்தமாக அரசாங்கத்தின் முடிவு இவ்வாரம் வெளிவருமென்று நம்பப்படுகிறது.

### தமிழ் மொழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுக் கொள்கிறேன்.'

இலங்கைச் சட்டக்கல்லூரி மாணவரின் முத்தமிழ் விழா 31-5-67ல் மாலை 4.30 மணிக்குபம்பலப்பிட்டிசரசுவதி மண்டபத்தில் ஆரம்பமாகும். பிரதம அதிதியாக நீதியரசர் கலாநிதி எச். டபிள்யூ. தம்பையா கலந்து கொள்கிருர்.

விழாவில் விவாதம், இசை, நடனம் முதலிய சிறப்பு அம்சங்கள் இடம் பெறுகின்றன.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்கட்டில்

**செம்பியன் செல்வன்**

**"ஊரில இருக்கிற நாக்கில நரம்பில்லாததுகள் ....ஐயோ....இப்பநினைச்சாலும் மனம் அனலாய் எரிகிறது தம்பி....எல்லாம் என்ர குடும்பத்தைக் கலைக்கச் செய்த சதி தம்பி....**

**....மலரில் சேறுபட்டாலும் சேற்றில் மலர் வீழ்ந்தாலும் மலருக்குத்தான் மாசு தம்பீ...."**

என்ன மோனே...! வளவுக்குள்ள வந்தனீ... வீட்டுக்குள்ள வராம அப்பிடியே மரத்தடியில நிண்டிட்டாய்... ஓ...! இந்த வீடு இடிந்து பாழடைந்து கிடக்கிறதால...இதில ஒருபணிசச்சாதி வாழுமெண்டு நினைக்கேல்லயா...? அல்லது என்னைப்பார்க்க உனக்கு ஒரு மனிசனு தெரியேல்ல யா என்ன மோனே இன்னும் அங்கையே நிண்டுகொண்டுருக்கிறுய்...வா...வா... இந்த வீட்டில்ல வந்து இளைப்பாறு...

இந்த உச்சி வெயிலுக்குள்ளால எங்க புறப்பட்ட னீ வெயில் அனலாக்கொழுத்துது இதுக்குள்ள போய் நடந்தா மூளையெல்லே உருகப்போகுது? உன்னைப் பெத்து விட்டவள் கண்டாளெண்டா தலையில யெல்ல கையை வைக்கப் போருள்...

என்ன மோனே சிரிக்கிறு? இந்தக் கிழவன் இப்படிப் பேசுறுனெண்டுதான். நீங்கள் எல்லாம் ஓடுறபாம்பைக் காலால மிதிக்கிற இளசுகள். உங்களுக்குச் சிரிப்பாத்தான் கிடக்கும் எங்கட கதையும் பழங்கதையாத்தானிருக்கும்...

வாமோனே...வா... வந்துக்கார் ...வா! உன்ர முகத்தை இங்காலப் பக்கமாத் திருப்பு பாப்பம் யாற்றபிள்ளைமோன நீ...? அவன் முருகேசுவின்ர பேரனு... இல்லையா... ஓ! உவருககுப் புதுமுகமாகத் தெரியுது... எங்கட ஊரை வேடிக்கைபார்க்கவே வந்தனீ ...! என்ன என்ன யாழ்ப்பாணத்திலே இருந்தே ஒரு ரயிலேறி பஸ் ஏறி வள்ளம ஏறி இங்க வந்தனீ...! நல்ல வேடிக்கை தான்... அப்படி வேடிக்கை பார்கக என்ன இருக்கு இந்த ஊரில மனிசர் கூட மனிசரா யில்லை இப்பஊரில...இப்ப போய் ந வேடிக்கைபார்க்க வந்திருக்கிறுய்...

என்ன...என்ன... இன்னு மொருக்கச் சொல்லு... எங்கட ஊரை ஆராய்ச்சி பண்ணிக் கட்டுரை எழுத வந்தனீயோ? அதுக்குத்தான் இந்தக் கடதாசி பேப்பர்களோட திரியுறீயே அப்படிச் சொல்லன் சஙகதியை...நானும்நாலு நாளாப் பாக்கிறன்... நீயும் இப்படித்திரியுறதை... உனக்கும் வேலையில்லை உதைஎழுதி என்னத்துக்கு உனக்கு...?

இது எல்லாத்தையும் விடப் பெரிய விஞ்ஞானமாக்கிடக்கு? உதை எழுதிக் கொடுத்தா உனக்கு 'எம்மேப்' பட்டம் கிடைக்குமோ? உனக்கென்னத்துக்கு தம்பி உந்த எம்மேக்களும் கிம்மேக்களும் இப்பதான் ஊர்முழுக்க பெரிய எம்மேக் கள்ளங்களாக இருக்கிறுங்களே...!

என்னதப்பி அப்படியே நிக்கிறுய! ஓ நான் உன்னை இருக்கச் சொல்லேல்லையா...இரு... இருஎன்ன முழிக்கிறுய்இருக்க இடமில்லையெண்டா பறவாயில்லை ...நீயும் என்ர கட்டில்ல இருக்கலாம்...வெட்கப்படாத நான் தள்ளி இருக்கிறன்...

ஏன் இன்னும் நிற்கிறு?... அவசரமா? போகலாம் நில்லு நல்லா வெயில் தாளட்டும்... ஓ!...ஓ!... எனக்குப் புரியுது உன்ர வெள்ளைக் காச்சட்டை பிசங்கிப் போயிடுமெண்டுப் பயப்படுற" அப்படியொண்டும் பயப்படாத... கட்டில் கறுப்பா இருக்கிறது அழுக்கால யல்ல அத்திறம் முதிரைக் கட்டில்... பழங்காலவேலைப்பாடுள்ளகட்டில் பார்மோனே இதில உள்ள வேலைப்பாடுகளை. இப்ப உந்த மாதிரிச் செய்ய ஒரு தம்பியால முடியாது இந்தக் கட்டில் இந்தக்...கட்டில்...

என்ன தம்பி பயந்திட்டியா என்னமோ ஒருபழைய ஞாபகம் அதுதான் கண்ணில் தண்ணி வந்திட்டுது... அழுதழுது தண்ணி வத்திக்கிடந்த கண்களில் உன்னையும், இந்தக் கட்டிலையும் பாததோனை கண்ணீர் வந்திட்டுது...

என்ன தம்பி அப்படி ஆச்சரியமாபபாக்குருய்... இதில் இரு... ஒரு வேளை என்ர கதை உன்ர ஆராய்ச்சிக்கு உதவலாம் என்ன நீ கலாச்சாரம் பொருளாதாராம், மனித வாழ்க்கையை ஆராய வந்தனீயோ... அது எல்லாம் சரிதான் தம்பி! உந்த ஆராய்ச்சி எல்லாம் மனிதன்ர குணத்துக்குள்ள அப்படிய அடங்கிப் போகும் மனிசன் நல்லா இருந்தா அவன் நடவடிக்கைகளும் நல்லா இருக்கும் நடப்புநல்லா இருந்தா அவன்ர பொருளாதாரமும் வாழ்க்கை முறையும் நல்லா இருக்கும். அதுதான் நான் சொல்லுற கதையை ஆறுதலாகக் கேள்.; பேந்து சொல்லு உன்ர அபிப்பிராயத்தை.

காலில இறக்கை கட்டிக் கொண்டிருக்காம முதலில நீ இரு... என்ன மோன... கட்டிலின்ர சத்தைதக் கேட்டு அப்படியே பயந்து போறுய் போல... பொறிஞ்சு போம் எண்டு நினைக்காத...அது எனக்காக அழுது ஓலமிடுது கடந்தஇருபது வருடங்களாக!

இந்தக் கட்டில் இருக்கே மோன இது சாதாரணக்கட்டில்லல்ல என்ர ஒரே மகள் ஆசை மகள் அன்னம்மாவுக்காகச் செய்வித்த கலியாணக்கட்டில் ஆனு...ஆனு...

ஓம் தம்பி!... நீ நினைக்கிரது உண்மைதான் நான் என்னத்துக்காக வாங்கினனோ அது நிறைவேருமலே போயிட்டுது. எல்லாத்துக்கும் நான் விபரமாய்ச் சொல்லுறன் கேட்டுக் கொள் தம்பி!

நாப்பது வருசத்துக்கு முந்தி...இந்த வீடு தான் இந்த ஊரிலே பெரிய வீடு. அளவில பெரியதால இந்த வீட்டையே பெரிய வீடு எண்டுதான் சொல்லுவினம் நீ இப்ப வெறும் நிலைகளைத் தான்பாக்கிறுய்...ஆனுல் முந்திப் பாத்திருக்க வேண்டும்.

முந்திப் பெரியவீட்டு பேரன் பலம் எண்டால் ஊரில இராசாமாதிரி... ஓம்தம்பி அது நான்தான் அப்பநான் இப்படியே இருந்தன், முறுக்கிவிட்ட மீசையும் காதில வைரக் கடுக்கனும் தோளில் சால்வை தட்டிக்கட்டி... கொண்டையும்... இப்பவுன இருக்கினமே பெண்டுகள் ம் தலையில நாலு மயிர்கிடையாது அதுகளுள்ள அவையின்ர எடுவிதக் கொண்டையும் எடுப்பும் சாய்ப்பும் எனக்குப் பதிகிகொண்டு வருகுது...

ஊரில அப்பநான் சின்ன மனுஷனே பதினைஞ்சு ஏக்கர் காணி நல்ல விளைபூமி... நாப்பது மாடுகளைக் கொண்ட பெரிய பட்டிஇருந்தது குழைக குத்தகை, தோணிக்குத்தகை சங்கக்கடை மனேச்சர் பதவி கிராமச் சங்கத்தலைவர் எல்லாம் எனக்குத்தான் பின்ன சும்மாவே...

உங்களுக்கு ஏன் இந்த நிலை எண்டு பாககுறியா? தம்பி. எல்லாம் கால வித்தியாசம் எல்லாம் விபரமாச் சொல்லுறன் விளக்கமாக் கேட்டுக் கொள் தம்பி.

அதோபார் தம்பி!... அங்க பாத்தியா ஒரு ரெட்டப்பனையை அதில இருந்து அந்தக் குளக்கட்டு வரை எனக்குத்தானிருந்தது. எதை விதைச்சாலும் பொன்னு விளையும்.

காலையில நாலுமணிக்கு எழுந்தா முத்தத்திலையிருந்த வேப்ப மரத்திலிருந்து... ஓம் தம்பி நீபாக்குறது புரியுது...

அந்த வேப்பமரம் போன பெரிய புசலால அடிசாஞ்சு அதை வித்து நாப்பது பவுண் எடுத்தன் தம்பி... அவ்வளவு பெரிய மரம் அதில இருந்து ஒரு தடியை முறிச்சு பல்விடுக்கில வைச்சு சப்பிக்கொண்டு போய், வயலை ஒரு சுற்றுப் பாத்துவிட்டு, காலைக் கடனை முடிச்சுவிட்டுவீட்டுக்குவரேக்க காலை எட்டுமணியாகி விடும்.

வீட்டுக்கு வந்தா ஊரரிசிப் புட்டும், பச்சைமிளகாய்ச் சம்பலுமிருக்கும், அதைச்சாப்பிட்டு மீண்டும் கிளம்பினு... இறங்குதுறை சங்கக்கடை எல்லாம் மேற்பார்வை பார்த்து விட்டு வீடு திரும்ப மணி ஒன்டுக்கு மேலாகிவிடும். என்ன இறங்குதுறையா...உனக்குத் தெரியாதா ஓ!... இப்ப இல்லையெண்டு சொல்லுறியா சொல்லுறன் தம்பிகவனமாக கேட்டுக்கொள் முந்தி இப்ப இருக்கிற மாதிரி இல்ல...ஊர் இருந்தது எங்கட ஊரிலிருந்து உங்கட பட்டணத்துக்குப் போக்குவரத்து நடத்துற தெண்டா மிகக் கஷ்டம். ஊர்க் கோடியில ஒரு பெரிய கடல்நீர் ஏரி சமுத்திரமாக எப்போதும் நிக்கும். அரைக் கட்டைத் தூரத்துக்குப் பரந்திருக்கும். அந்த இடைப் பாதையில வள்ளப் போக்குவரத்துதான் அந்தப் போக்குவரத்துக் குத்தகையை நான் எடுத்திருந்தன் தம்பி... அதில வள்ளம் வந்து நிக்கிற இடம் தான் தம்பி இறங்குதுறை... இப்ப கூட அதுக்குப் பெயர் அதுதான். என்னட்ட அப்ப ஏழெட்டு வள்ளமிருந்தது, அதால நிறையச் சம்பாதிச்சன் தம்பி அதுதான் காலமை போய் எல்லாப்படகுக் காரரும் வந்திட்டினமா எண்டு பாத்திட்டு வருவன்...

பேந்து வழக்கம்போல சங்கக்கடை மேற்பார்வை. மத்தியானம் ஒருமணிக்கு வந்தாச் சாப்பாடு ஒரு கண்ணுறக்கம் பின்னேரம் ஊர் விசாரணை. ஒரே கூட்டம்தான் வீட்டுக் கவலைபற்றி எனக்கு ஒரு எப்பன் கவலையிருக்குமே...மூச்சுக் காட்டக் கூடாது.

வீட்டுக் கவலையே எனக்கு ஏற்படாமல் பாதுகாக்க என் மனிஷியும், மகளும் இருந்திச்சினம். குடும்ப விளக்குகளாக வீட்டை, ஆடு மாட்டைப் பாத்துப் பராமரிக்க அவர்களிருக்க என் வாழ்வு சொர்க்கமாகத்தானிருந்திச்சுது தம்பி.

பத்தாததுக்கு என்ர சகலன் தம்பிராசாவும், அவன் மகனும்; தங்கச்சியுமிருந்தினம்.

ஊர் உறவு எண்டு சிறப்பாக வாழ்ந்தவன் தான் தம்பி! நாளொண்டுக்கு நாப்பதுபேர் என்ர வீட்டில் சாப்பிட்டவை தான் தம்பி! ஆனு... இண்டைக்கு... நீ ஒரு விருந்தாளி ஏன் ஊருக்கே விருந்தாளி... அப்படியிருந்தும் என்னுல் உனக்கு ஒரு வாய் தண்ணீர் கொடுக்க முடியல...இது தான் தம்பி மனிச வாழ்க்கை.

நான் சொல்லி வந்ததை நடுவில விட்டிட்டன் எண்டு நினைக்காத...மனசும் கூட கிளடு தட்டிப்போச்சு...

என்ர சகலன் மகன் கணேசன் எப்ப பாத்தாலும் என்ர வீட்டிலைதான் கிடப்பன் 'மாமா! மாமா!' எண்டு காலைச் சுற்றி வருவான். மகள் அன்னமோ அவனோடு கூடவே சிட்டுக் குருவியாகவே திரிந்து கொண்டிருப்பாள்.

அவர்களைச் சின்ன வயதிலேயே நாங்க தம்பதியளாக நினைச்சிட்டம். அன்னம்மாவுக்கும் கணேசனில உசிர்.

அந்தச் சின்னஞ் சிறுசுகள் நான் வள்ளத்திலேறி பட்டுணம் போயிட்டு வரும் வேளையெல்லாம் இறங்கு துறையியே வழிமேல் விழி வைச்சு நிற்குலகள். அவர்களைக் கண்டதுங் என் சோர்வும் பறந்திடும் ஓம் நாள் —

அன்னம்மா பெரிசாயிட்டாள். ஆமாம் தம்பி என்ர மகள் மனுஷியாயிட்டாள். அண்டு நான் பட்ட சந்தோசத்துக்கு அளவேயில்லை தம்பி! அண்டைக்கு என்னைப்பார்க்க வந்த ஆசாரி முத்தனிட்ட ஏதோ வெறியில ஒரு கல்யாணக் கட்டிலச் செய்யச் சொல்லி அச்சாரப் பணமும் கொடுத்திட்டன். என்ர செய்கையைக் கண்டு என்ர மனிஷியே திகைச்சுப் போட்டுது தம்பி!

அப்படி வாங்கிப் போட்ட கட்டில்தான் தம்பி இது... ஆனு... ஆனு...

நீ பயந்து எழும்பிப் போயிடாத தம்பி... முழுக் கதையையும் கேட்டிட்டுப்போ...

நான் தான் சொன்னனே... குழை குத்தகைக்கு எடுக்கிறதெண்டு... மார்கழி வந்திட்டா... கடலேரிக்கு அப்பாலுள்ள வெட்டுக் காட்டுக் குழையளையெல்லாம் குத்தகைக்கு வாங்கி, வள்ளத்திலேற்றி இக்கரைக்குக் கொண்டுவந்து விடுவேன். பச்சைக் குழைப்பசளை என்ர நிலத்துக்குப் பயன்பட்டது போக, மீதியை ஊராக்களுக்கு வித்து விடுவன்... அதாலயும் பணம் வரும். பல தொழிலை நடுபட்டவனுக்கு பணத்துக்கு என்ன தம்பி குறை...

குழைக்குத்தகை எண்டாச் சும்மா சின்னம் பொன்னனுன வருமான மில்லை. அங்கபார்... அந்தக் கடலுக்கு அப்பால இளங்காடாக இருக்கிறதுபார் பச்சைப் பசேலென்று... அதைத்தான் வெட்டுக்காடு எங்கிறது... அங்கையுள்ள குழையளையெல்லாம் வெட்டி எடுத்துக் கொண்டு என்ர வள்ளங்கள் வரேக்க நீ பாக்கோணும்... அப்படியே சிலுத்துப் போவாய்... குழை வள்ளங்களினுல பாலம் அமைத்தது போல... ஒண்டின் பின் ஒண்டாக. பொழுது சாயும் வேளையில வரேக்க... அது ஒரு காலம் தம்பி என்ர குழையை நம்பி எத்தனை வயல்கள் இருந்திச்சு எண்டு உனக்கென்ன தம்பி தெரியும்... இப்பதான் செயற்கை உரம் எண்டு சொல்லி நிலத்தையே ஒரே அனல் பூமியாக்கி விட்டுங்களே...

குழை வியாபாரத்தால நல்ல வரும்படி. அதோட ஒரு போட்டியில்லாத வியாபாரம். இதில இறங்கிறதுக்கு வள்ளம் வேண்டுமே. அதால போட்டியில்லாமலே வியாபாரம் நடந்தது. இதால ஊரில சிலருக்கு என்னில பொறுமை. எப்படியும் உந்தக் குத்தகையை எடுத்து விட வேண்டும் எண்டு நாண்டு கொண்டு நின்டிச்சினம். என்னட்டையா இது நடக்கும்?

அதோட போக்கு வரத்துக்கும் நான்தான் சங்கத்தில குத்தகை எடுத்திருந்தன்... விளங்கேல்லையா... இந்த வள்ளப் போக்கு வரத்துக்கு ஒவ்வொரு வருடமும் எங்கட கிராமச் சங்கம் குத்தகைக்கு விடும் குத்தகை எடுக்க விரும்புபவர்கள் தங்கள் கொடுக்கப் போகும் தொகையை சங்கத்துக்குச் சொல்லுவினம். யார் கூடிய பணத்தைக் கொடுப்பினமோ அவையளுக்குத்தான் சங்கம் வள்ளப் போக்கு வரத்தைக் குத்தகைக்கு விடும் நான் தான் கிராமச் சங்கத் தலைவர். என்னை விட்டு யார் எடுக்க முடியும். ஆனு... அந்த வருடம் வேண்டுமெண்டே சில பேர் கூடி அதிக பணத்தைக் கொடுத்து எடுத்து விட்டாங்கள். அவங்கள் பத்து வரிய முழைத்தாலும் பெற முடியாத பணம் அது.

நான் திடுக்கிட்டுப்போனன். அதைவிட என்னை இன்னுமொரு சங்கதி திடுக்கிட வைத்தது. எனக்கு எதிராக வேலை செய்த கூட்டத்தில என்ர சகலனும் ஒராள் எண்டதுதான். அதிலும் நான் ஐமிச்சப்படவில்லை... ஏனெண்டா என்ர சகலனும் ஒரு மாதிரியான ஆள். பொதுவா நல்ல மனிஷன். ஆனுக் கொஞ்சம் குடிப் பழக்கம். அதால உள்ள கொஞ்சம் போயிட்டா மனிஷன் இழுத்த இழுப்புக் கெல்லாம்போற ஆள் தான்...

நானும் பொறுத்துக்கொண்டன் தம்பி. என்ன இருந்தாலும் என்ர மகள் வாழப் போற இடமெல்லே. எங்களால ஏன் வாழப்போற சிறிசுகள் கவலைப்படுவான் எண்டு. ஆனுச் சகலனோடு பேசுறதை மட்டும் சற்று நிறுத்திக் கொண்டன்.

அப்பதான் கிராமச் சங்கத் தேர்தல் வந்தது. அதிலும் எனக்குப் போட்டியாக என் சகலனையே நிறுத்தி விட்டார்கள். எனக்கு என்ன செய்யிறதெண்டே புரிய வில்லை. நேரா சகலனிட்டயே போய்க் கேட்டன்., நான் சமாதானமாத் தான் கேட்டன். ஆனு... அவன் குடிமயக்கத்தில ஏதோ ஆபாசமாகக் கேட்டு விட்டான், முகம் பாத்துக்கதைக் காதவன் உப்படிப்பேசிறதைக் கேட்ட எனக்குப் பத்திக் கொண்டு வர முன்பின் யோசி

(14-ம் பக்கம் பார்க்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலை அழிப்போம் என்று முழங்குகிறார் ஜனாதிபதி நாஸர்

## சமாதான முயற்சிகளில் ஊதாண்ட் தீவிரம்

**யுத்தம் மூண்டால், இஸ்ரேலை அழித்து விடுவதே எகிப்தின் நோக்கமாக இருக்கும் என்று எகிப்திய ஜனாதிபதி நாசரின் எச்சரிக்கைக்கு பின், மத்திய கிழக்கின் நிலைமை இன்னும் மோசமடைந்துள்ளதாக உலக ராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். ஐக்கியஅரபுக்குடியரசையும், இஸ்ரேலையும் பிரிக்கும் 'காசா' எல்லையின் இரு புறங்களிலும் எந்த நேரத்திலும் யுத்தத்துக்கு தயாராக இஸ்ரேல் இராணுவமும் எகிப்திய இராணுவமும் நிற்கின்றன. இதற்கிடையில், நாசருடன் நடத்திய சமாதானப் பேச்சு வார்த்தைகள் பற்றிய அறிக்கையை ஐ. நா. பாதுகாப்புக் குழுவுக்கு சமர்ப்பிப்பதற்காக திரு. ஊதாண்ட் தயாரித்துக் கொண்டிருப்பதாக இறுதியாக கிடைத்த செய்திகள் கூறுகின்றன.**

மத்திய கிழக்கில் இன்று ஏற்பட்டுள்ள நிலைமை உலக சமாதானத்தைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. இஸ்ரேலுக்கும் ஐக்கிய அரபுக் குடியரசுக்குமிடையே எழுந்துள்ள பிரச்சினையைத் தீர்த்து வைத்து யுத்த சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கு ஐ.நா. பொதுச் செயலாளர் ஊதாண்ட் எடுத்துள்ளமுயற்சியில்வெற்றிபெறுவாரா? சமாதான முயற்சியில் ஊதாண்ட் இறங்கியிருக்கும் நேரத்தில் இஸ்ரேலுக்கு கப்பல்களை செல்ல விடாமல்தடுப்பதற்காக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அக்கபாவளைகுடாவை மூடுவதென்று ஐக்கிய அரபுக்குடியரசுதீர்மானித்திருப்பது நிலைமையை இன்னும் சீர்கேடடையச் செய்து விட்டதாக உலக ராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

மத்திய கிழக்கில் கடந்த வாரமுதல் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு திடீரென்று ஏற்பட்டதல்ல. யூதர்களுக்கும் அரேபியர்களுக்குமிடையே புகைந்து கொண்டிருக்கும் பழையபகைமையுணர்ச்சியே இந்த திடீர் கொந்தளிப்புக்கு காரணம் என்று கூறலாம்.

இஸ்ரேல் என்று ஒரு தனி நாடு ஏற்பட்டுள்ளதை அரேபியர்கள் விரும்பவில்லை. இஸ்ரேல் அமைக்கப்பட்ட போது அங்கு வாழ்ந்து வந்த அரேபியமக்கள் அகதிகளாக வெளியேற நேர்ந்ததும், அரேபிய நாடுகளுக்கு ஆத்திரத்தைக் கிளப்பி ஏலவே விட்டிருந்தது.

### மோதலுக்கு தயார்

இதையெல்லாம் விட எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் தீராத பகை ஏற்பட்டது சூயஸ் கால்வாய் தகராறின்போதே. சூயஸ்கால்வாயை நாசர் நாட்டுடமையாக்கிய போது, பிரிட்டிஷ், பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் சேர்ந்து இஸ்ரேலும் எகிப்துடன் மோதி தோல்வி கண்டது தெரிந்ததே. இந்தப் போரை அடுத்து இஸ்ரேல் எகிப்து எல்லையான காசா எல்லையில் 110மைல் தூரத்துக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஐ. நா. படை, எகிப்தின் உத்தரவுப்படி இப்போது வாபஸ் வாங்கப்பட்டு விட்டது. அந்த இடங்களில் எகிப்தியராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக இஸ்ரேல் எகிப்து படைகள் மோதத் தயாராக நிற்கின்றன.

எகிப்தும் இஸ்ரேலும் திடீரென்று யுத்தத்திற்கு ஆயத்தம் செய்யக்காரணம் என்ன? எகிப்தும் இஸ்ரேலும் நேரடியாக ஏதாவது பிரச்சினையில் கருத்து வேறுபாடு கொண்டிருக்கின்றனவா? இது இன்று வரை தெரியவில்லை.

### நாசர் கூறும் காரணம்

ஆனால் சிரியாவைப் பாதுகாப்பதற்கே, தான் இந்த நடவடிக்கையில் இறங்கியிருப்பதாக எகிப்து கூறியுள்ளது. சிரியாவைத் தாக்குவதற்கு இஸ்ரேல்முயன்று வருவதாயும் சிரியா தாக்கப்பட்டால் எகிப்திய படைகள் இஸ்ரேலுக்குள் புகுந்து அதைத் தாக்கும் என்றும் காரணம் கூறியுள்ளார் நாசர்.

இதே வேளையில் இஸ்ரேல் அமெரிக்க உதவியுடன் சிரியா மீது தாக்குதல் நடத்துமானால், ரஷியா பார்த்துக்கொண்டிருக்கமாட்டாது. எனவே மோதல் ஏற்பட்டால், அது உலக வல்லரசுகளின் யுத்தமாகவே உருவெடுக்கும் என்று உலக ராஜதந்திரிகள் பலர் கருதுகிறார்கள்

'மத்திய கிழக்கில்யாராவது ஆக்கிரமிப்புச் செய்தால் அது அரேபிய நாடுகளின் ஐக்கிய சக்திகளுக்கு எதிராக செய்யப்பட்ட ஆக்கிரமிப்பு ஆக மட்டுமன்றி சோவியத் யூனியன்மீது செய்த ஆக்கிரமிப்பாகவும்கருதப்படும், என்று சோவியத் யூனியன் விடுத்துள்ள எச்சரிக்கை மறைமுகமாக இஸ்ரேல் மூலம் மத்திய கிழக்கில் நுழைய முயலும் மேற்கத்தய வல்லரசுகளுக்கு விடுக்கப்பட்டதென்றே கூறலாம்.

### போக்கு வரத்து தடை

இதற்கிடையில் இஸ்ரேலுக்கு செல்லும் கப்பல்களை செல்ல விடாமல் தடுப்பதற்காக அக்கபா வளைகுடாவை மூடிவிடுவதென்று ஐக்கிய அரபுக் குடியரசு விடுத்துள்ள பயமுறுத்தல், மத்திய கிழக்கில் சமாதான நம்பிக்கையை சிதறடித்து விட்டதாக அவதானிகள் கருதுகிறார்கள்.

கப்பல் விவகாரத்தில் எகிப்து தலையிடுமானால் அதை முறியடிக்கவளைகுடாவிலுள்ள இஸ்ரேல் கடற்படையினர் தயாராக இருப்பதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. எனவே எந்த நிமிடத்தில் அக்கபா வளைகுடாவில் பீரங்கி முழக்கம் கேட்குமோ என்று உலக மக்கள் அச்சத்துடன் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

மத்திய கிழக்கில் இஸ்ரேல்-எகிப்து யுத்தம் ஏற்படுமானால் அது வல்லரசுகளின் யுத்தமாக மாறக்கூடியதற்கு சாத்தியம் ஏராளமாகக்காணப்படுகிறது. அராபியக் குடியரசு நாடுகளை இஸ்ரேல் தாக்குமானால் அராபிய குடியரசு நாடுகளுக்கு உதவ ரஷியாவும் பின் நிற்கப் போவதில்லை.

### சண்டையா? சமாதானமா?

அந்தநிலை உருவாகுமானால் அமெரிக்காவும் பிரிட்டனும் பிரான்சும், இஸ்ரேலுக்குக் கண்டிப்பாக உதவி செய்தே தீரும். எனவே இந்த யுத்தமே 3வது உலகப் போருக்கு அடிஅத்திவாரமாகஅமைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்த நிலையில் மத்திய கிழக்கில் சமாதானம் ஏற்படுத்த ஐ. நா. பொதுச் செயலாளர் ஊதாண்ட் எடுத்து வரும் நடவடிக்கை வெற்றிபெறுமா? அல்லது மத்தியகிழக்கில் கேட்கப்போகும் வேட்டுச் சத்தம் உலகெங்கும் கேட்குமா? இந்தக் கேள்விக்குரிய பதிலைத் தான்இன்றுஉலகமக்கள் எதிர் நோக்கி நிற்கின்றனர்.

---

# சகல துறைகளிலும் தமிழை புகுத்த தமிழக அரசு தீவிர நடவடிக்கை

ஆங்கிலத்தின் இடத்தில் தமிழ் ஆட்சி மொழியாக வர வேண்டுமென்று மாநிலச் சட்ட மன்றம் ஐந்தாண்டுகட்கு முன்பு முடிவு செய்தது. ஆனால், 'அதிகார வர்க்க அக்கறையின்மை' என்று கூறப்படுவதால், அரசாங்கம் இதில் பொதுவாகச் செயல்பட்டு விட்டது.

இப்பகுதியின் மொழிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட புதிய ஆட்சியாளர்கள் வந்து விட்டதால், தமிழ் அரசாங்கப் பணிகளுக்கும், இதர பணிகளுக்கும், பயன்படுத்தப்படுகிறது.

'தமிழ் மொழி' என்பது புதிய அரசின் முழக்கமாகயிருக்கிறது! இந்தப் பொது உணர்ச்சி எல்லாப் பொது நிகழ்ச்சிகளின் போதும் மக்களிடையே எதிரொலிக்கப்பட்டு 'மக்களின் நல்லெண்ணம்' என்ற நற்பலன், ஆட்சியாளருக்குக் கிடைக்கிறது.

இந்தப் புது நடவடிக்கையைத் துலக்கமாக எடுத்துக் காட்டுவதற்காக ஏப்ரல் 14ம் நாளன்று வந்த தமிழ்ப் புத்தாண்டன்று செயிண்ட்ஜார்ஜ் கோட்டையிலுள்ள அரசாங்கத் தலைமையகத்தின் ஆங்கிலப் பெயரை, 'தமிழக அரசு தலைமைச் செயலகம்' என்று தி. மு. க., அரசு மாற்றியது.

அரசாங்க பஸ் போக்குவரத்துத்துறை ஓட்டிவரும் 1400க்கும் அதிகமான பஸ்களில், 'தமிழக அரசு போக்குவரத்து' என்று தமிழில் எழுதப்பட்டது.

### அண்ணா உறுதி

முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை பதவியேற்றவுடன், போலீசுக்காரர்களிடையே பேசிய போது, ஆங்கிலத்தில் உரையாற்றுகையில், 'அம்மொழியில் அவர்களிடையே பேசுவது அதுவே கடைசிமுறை' என்று குறிப்பிட்டார். போலிசுத் துறையுடன் அரசு நடத்தும் சகிதப் போக்கு வரத்து அனைத்தும் இனிமேல் தமிழிலேயே இருக்கும் என்றும் கூறினார்.

'போலீசார், மக்களின் நண்பர் என்ற முறையில் அவர்களுடன் — மக்களின் மொழியான தமிழில் பேசி, மக்களை நன்கு விளங்கிக் கொள்ள முயல வேண்டும்' என்றும் கருத்துரை கூறினார்.

போலீசுத் துறை இக்கருத்தை உடனே ஏற்றுக் கொண்டது. எல்லாப் போலீசு நிலையங்களிலும் பெயர்ப் பலகைகளில் தமிழுக்கு முதலிடமும், ஆங்கிலத்துக்கு இரண்டாவது இடமும் தரப்பட்டன.

### சாலை சந்தியெங்கும் தமிழ்

சாலைச் சந்திகளில் உள்ள அறிகுறி விளக்குகளிலும் தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன.

முன்னர், கிழமைதோறும் ஆங்கிலத்தில் பத்திரிகையாளருக்கு வெளியிடப்பட்டுவந்த செய்திக் குறிப்புக்கள் இப்போது தமிழில் அச்சிடப்படுகின்றன.

அகில இந்திய வானொலியின் சென்னை நிலையம். 'ஆகாஷ்வாணி என்று இருந்து இப்போது 'வானொலி' என்று அழைக்கப்பட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

'நிதி, சட்ட விவகாரங்களைத் தவிர அரசாங்கத் தொகுப்புகள் அனைத்தும் தமிழில் இருத்தல் வேண்டும்' என்று நிலையான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

'அரசு அதிகாரிகள் அலுவலகங்களை, அரசாங்க விவகாரங்களைப் பற்றிப் பேசும்போது கூடியமட்டிலும் தமிழிலேயே உரையாட வேண்டும்' என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

### எழுத்தர்களுக்கு எச்சரிக்கை

தலைமைச்செயலகத்தில் கடிதப் போக்குவரத்தை நடத்தும் எழுத்தர்கள் சில துறைகளில் தொடர்ந்து ஆங்கிலத்தைப் பயன் படுத்துவது குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளனர்; அவர்கள் கூடிய விரைவில் தமிழுக்கு மாறிக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அரசாங்க அலுவலகங்களிலுள்ள ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகளுக்குப் பதிலாகத் தமிழ்த் தட்டச்சுப் போறிகளை வாங்கவும் ஏற்பாடு நடக்கிறது.

முற்றிலும் தமிழுக்கு விரைவில் மாறிக் கொள்ளவிருக்கும் அமைச்சகங்கள் வருமாறு: பொதுப் பணித்துறை; போக்குவரவு; குடியிருப்பு; உணவு, வேளாண்மை; உள்ளாட்சித் துறை; தாழ்த்தப்பட்டோர் நலத்துறை; செய்தித்துறை,

'ஆட்சியின் எல்லா மாவட்டங்களிலும் தமிழைப் பயன்படுத்துவதற்கு ஊக்குதலளிப்பது' என்று தி. மு. க. அரசு முனைந்து நிற்கையில், இதில் பலன் காண்பதற்கு மக்களிடையே எழுத்தறிவு பெருக வேண்டுமென்பதைக் கட்சித் தலைவர்கள் உணர்ந்திருக்கின்றனர்.

கடந்த 1962ம் ஆண்டில் இறுதியாக எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணிப்பின்படி, இம்மாநிலத்தில் எழுத்தறிவுள்ளவர்களின் தொகை 33 சதவிகிதமாயிருந்தது; இதை இவ்வாண்டில் குறைந்தது 3 சதவிகிதமாவது உயர்த்த வேண்டும் என்று கருதுகின்றனர்.

### புது வடிவு கொடுத்தவர்

இதற்கிடையே, மக்களுக்காக எழுத வேண்டுமென்ற எழுத்தாளர்களின் பெருக்கத்தால், மொழியில் பெருத்த மாறுதல்கள் உண்டாகி வருகின்றன. தமிழ்ச் செய்தித்தாள்களும், சஞ்சிகைகளும் புதுப்பொலிவு கொள்கின்றன. கதை, எழுத்தாளர்கள், சிறந்த எதிர்காலத்தைக் காணத் தொடங்கியுள்ளனர்.

தமிழ் எழுத்திற்குப் புது வடிவு கொடுத்தவர்களில் திரு அண்ணாதுரையும், அவரது அமைச்சர் சிலரும் அடங்கியுள்ளனர். அவர்கள் பலரறிந்த எழுத்தாளர்களாகவும், பத்திரிகையாளராகவும் விளங்குகின்றனர்.

(நேயன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களைப் பற்றி தெரிந்ததும் தெரியாததும்!

புரட்சி நடிகர் என்றும், மக்கள் திலகம் என்றும் சொல்லப்படுகிற எம். ஜி. ஆருக்கு எதற்கெடுத்தாலும் 'ஆமாம்' போடுகிறவர்களைக் கண்டால் பிடிக்காது. எதையும் பளிச் பளிச்சென்று நேருக்கு நேர் ஒளிவு மறைவில்லாமல் பேசுகிறவர்களையே அவர் மிகவும் நேசிப்பார். தம்மைத் தாக்கி எழுதும் பத்திரிகையாளர்களைக் கண்டால்கூட முகமலர்ச்சியுடன் அவர் பேசுவார்.

ஃ ஃ ஃ

இலட்சிய நடிகர் என்கிற எஸ். எஸ். ஆர். தன்னைப் பற்றித் தாக்கி எழுதும் பத்திரிகையாளரைக் கண்டால், தான் அந்தப் பகுதியைப் படித்துப் பார்த்ததாகத் தெரிவிக்கத் தயங்கமாட்டார்.

ஃ ஃ ஃ

பத்மஸ்ரீ பட்டம் பெற்ற நடிகர் திலகம் சிவாஜியைப் பாராட்டி எழுதி இருந்தால் கூட அதைப் படித்துப் பார்த்ததாகக் காட்டிக்கொள்ளவே மாட்டார். விமர்சனத்தில் தன்னைத் தாக்கி இருக்கிறார்கள் என்றால் அந்த விமர்சகரை 'உம்' என்று ஒருபார்வை மட்டும் பார்த்துவைப்பார்.

ஃ ஃ ஃ

பிரபல பின்னணிப் பாடகி எம். எஸ். சுப்புலட்சுமி தனது கணவர் 'கல்கி' சதாசிவம் இல்லாமல் எந்தக் கச்சேரியும் செய்யமாட்டார். "கச்சேரி ஆரம்பிக்கலாம்' என்று கணவர் சதாசிவம் தலையை ஆட்டியதும் கச்சேரி ஆரம்பமாகும். அதேபோல் 'கச்சேரியை முடிக்கலாம்' என்று சதாசிவம் தலையை ஆட்டியதும் தான் எம். எஸ். பாட்டு முடியும்.

ஃ ஃ ஃ

கவிஞர் கண்ணதாசன் கதை எழுதினாலும் சரி, கட்டுரை எழுதினாலும் சரி, தன் கைப்பட எழுதமாட்டார். கண்ணதாசன் சொல்லச்சொல்ல அவரது உதவியாளர்கள் எழுதுவார்கள். உதவியாளர்கள் எழுதிக்கொண்டிருக்கும் போது கண்ணதாசன் எழுதப்படும் விஷயத்தைச் சொல்லிக் கொண்டே குறுக்கும் நெடுக்குமாக நடப்பார். கண்ணதாசனே தன் கைப்பட எழுத வேண்டி வந்தால், உடனே பாயை விரித்து இரண்டு தலையணைகளைப் போட்டு குப்புறப் படுத்துக்கொள்வார். குப்புறப் படுத்துக்கொண்டு தலையணையை நெஞ்சில் வைத்தவாறே எழுதுவார். படுத்துக் கொண்டே பாடல் எழுதும் ஒரே கவிஞர் கண்ணதாசன்.



இந்தத் துப்பாக்கி காட்டுமான்களைத்தான் வேட்டையாடும். ஆனால் கன்னிமான்களை வேட்டையாடாது என்று ஜெமினி கணேசன் விஜயாவிடம் கூறுகிறாரோ? படம்— விரைவில் சினிமாஸ் திரைக்கு வரவிருக்கும் ராமு.

## திரைவாணனின் பதில்கள்

க. சிவநேசன்
மல்லாகம்

கே: நடிகர் திலகம் சிவாஜி கணேசன் எந்தப் பாத்திரத்தில் இதுவரை நடிக்கவில்லை?

ப: அதை கண்டு பிடிக்கத்தான் படத்தயாரிப்பாளர்கள் இப்போது சல்லடை போட்டு தேடுகிறார்கள்.

ஃ

க. முத்துலிங்கம்
களுதாவளை

கே: சரோசாதேவியை எம். ஜி. ஆர். ஏன் திருமணம் செய்ய வில்லை?

ப: ஏற்கெனவே அவருக்கு திருமணமாகி மனைவியும் இருப்பதால்.

கே: மீண்டும் எம், ஜி. ஆருடன் சரோஜாதேவி படங்களில் நடிப்பாரா?

ப: சமீபத்தில் அப்படியான வாய்ப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஃ

ஆனந்த சுப்பிரமணியம்
நீர்கொழும்பு

கே: புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். சொந்தத்தில் தயாரிக்கப் போவதாக இருந்த 'பொன்னியின் செல்வன்' என்னவாயிற்று?

ப: இன்னும் முற்றாக கைவிடப்படவில்லை.

ஃ

சிவாஜிப்பிரியன்
காரைநகர்

கே: பத்மஸ்ரீகணேசன் நடித்த 'தாயே உனக்காக' படம் சென்னையில் 150 நாட்களுக்கு மேல் ஓடி வசூலிலும் முன்னணியில் நின்றதாமே? உண்மையா?

ப: உண்மையல்ல!

கே: எம். ஜி. ஆர் அவர்கள் நடித்த 'பெற்றால்தான் பிள்ளையா'வின் படு தோல்விக்கு காரணமென்ன?

ப: படுதோல்வியென்று உமக்கு யார் சொன்னது? 100 நாட்களுக்குமேல் ஓடி வெற்றியீட்டியுள்ளது.

ஃ

எஸ். ஏ. மக்கள்தாசன்
உருத்திரபுரம்

கே: கலைக்குரிசில் 'பத்மஸ்ரீ' நடிகர் திலகம் என்றெல்லாம் பட்டம் பெற்ற சிவாஜி கணேசன் மக்கள் திலகத்தை விட குறைவாக பணம் வாங்குவது எதற்காக?

ப: சிவாஜி ஒரு 'மக்கள் திலகமாக' இல்லாதது தான் காரணம்.

ஃ

கே நவரத்தினம்
நெடுங்கேணி

கே: மகராசியில் ஜெயலலிதா நீச்சல் குளத்தில் இருக்கும் போது நீர் என்ன நினைத்தீர்?

ப: உம்மைப் போன்ற ரசிகர்கள் அந்தக் காட்சியை எவ்வளவு தூரம் விழுந்து விழுந்து ரசிப்பீர்கள் என்பதை எண்ணிப் பார்த்தேன்.

கே: சிவாஜி கணேசன் தயாரித்துடைரக்ட் செய்யும் படத்தின் பெயர் என்ன?

ப: பெயர் இன்னும் வைக்கப்படவில்லை.

ஃ

கண்ணதாசன்
நீர்கொழும்பு

கே: எல். விஜயலெட்சுமி எதனால் நடிகர் ஜெய்சங்கரை திருமணம் செய்து கொள்ளவில்லை?

ப: திருமணம் செய்து கொண்டிருக்கிறாரே, பல படங்களில்!

திரைவாணன்,
சுதந்திரன் கலைப்பூஞ்சோலை
த. பெ. இல. 1183.
கொழும்பு.

# மீன் தின்னலாமா?

சென்னையில் இருந்து நானும் என் பெற்றோரும் விமானம் மூலம் கல்கத்தாவுக்கு போய்ச் சேர்ந்தோம். விமான நிலையத்தில் எங்களை வரவேற்க மாப்பிள்ளை வீட்டார் வந்திருந்தார்கள். நான் இந்திப்படங்களிலும் நடித்திருப்பதால் ரசிகர் கூட்டமும் ஏராளமாக வந்திருந்தது.

மாப்பிள்ளை வீட்டிற்கு அருகிலேயே பெண் வீடு தனியாக ஒதுக்கியிருந்தார்கள். நாங்கள் அங்கே சென்றோம்.

இரவு 9 மணிக்கு மாப்பிள்ளையின் தாயார், சகோதரிகள் ஆகியோர் வந்து என்னை அலங்காரம் செய்தார்கள். மாப்பிள்ளை வீட்டுக்கு என்னை ஊர்வலமாக அழைத்து சென்றார்கள்.

வீட்டிற்கு அருகில் நாங்கள் சென்றதும், சங்குகள் ஊதத் தொடங்கி விட்டன. 5, 6 சங் சங்குகள் தொடர்ந்து ஊதின. சங்கு சத்தம் கேட்டதும் நாங்கள் திடுக்கிட்டு விட்டோம்! நம் ஊரில் எதற்கு சங்கு ஊதுவார்கள் என்பதுதான் நமக்குத் தெரியுமே. ஆனால் சங்கு ஊதுவதை மங்களம் என்று வங்காளிகள் கருதுகிறார்கள். அவர்களுக்கு அது நாதசுரம் போல!

ஆரத்தி எடுத்து என்னை வீட்டுக்குள் அழைத்து சென்றார்கள். 'இதுதான் உன் கணவன் வீடு' என்று, வீட்டில் உள்ள ஒவ்வொரு அறையையும் எனக்குக் காட்டினார்கள். வீட்டில் உள்ள ஒவ்வொருவரையும் (மாப்பிள்ளையைத் தவிர) எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.

வைரக்கல் பதித்த வளையல்களை என்னகைகளில் மாப்பிள்ளையின் தாயார் (என் மாமியார்) எனக்கு அணிவித்தார். வீட்டுக்கு வரும் மூத்த மருமகளுக்கு வைர வளையல் அணிவது அவர்கள் வழக்கம்.

மறு நாள் காலையில் மாப்பிள்ளை எங்கள் வீட்டுக்கு வந்தார். அவரை என் அப்பா வரவேற்றார். எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த எல்லோரையும் (என்னைத் தவிர) அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். இனிப்புகள் வழங்கினார்கள்.

அன்று மாலையில் திருமணம் நடந்தது. மாப்பிள்ளை வீட்டுக்குப் பக்கத்தில் பெரிய மைதானத்தில் திருமண மண்டபம் அமைத்திருந்தார்கள். அங்கே ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்.

நான் மணமேடைக்கு சென்றதும், மாப்பிள்ளையை அழைத்து வந்திருந்தார்கள். ஒரு வேட்டியால் முக்காடு போட்டு அவரை மூடியிருந்தார்கள்! பார்க்க, எனக்கு வேடிக்கையாயிருந்தது.

என் எதிரில் அவரை நிறுத்தினோம். ஆகவே, நம் ஊர் வழக் முக்காட்டை நீக்கினேன் [illegible] எங்கள் இருவரையும் பார்த்துக் கொள்ளச் சொன்னார்கள். அப்பொழுதுதான் நாங்கள் முதல் தடவையாக சந்தித்துக் கொள்வதாக ஐதீகம்!

பிறகு அவர் எனக்கு மோதிரம் அணிவித்தார் இந்தமோதிரம்தான் அங்கே தாலி போல!

ஆனால், நாங்கள் தாலி கட்ட வேண்டும் என்று விரும்பி

# தின்றால் எப்படியிருக்கும்?



## 'விஜி' கேட்கிறார்

பூசை செய்தார்கள். இது ஒரு முக்கிய நிகழ்ச்சியாக நடக்கிறது. இது நம் ஊர் 'மஞ்சள் நீராடுதல்' போல இருக்கிறது'

பிறகு, என் நெற்றியில் வகிடுக்கு மேல் அவர் குங்குமம் பூசி விட்டார். நம் ஊரில் தாலி கட்டுவது போல. இது தான் வங்காளத்தில் முக்கியமான திருமணச் சடங்கு. புரோகிதர்கள் வேதம் ஓதினார்கள். சங்கு ஊதினார்கள். நம் ஊர் கட்டு மேளம் போல! அக்கினி வளர்த்து. அவர் எனக்குத் தாலி கட்டினார்.

வங்காள முறைப்படி இப்பொழுது பாதித் திருமணந்தான் முடிந்திருக்கிறது! மீதித் திருமணம் மறு நாள் தான் நடக்கிறது!! எனவே, விருந்து முடிந்ததும், நான் பெண் வீட்டுக்குப் போய் விட்டேன். அவர் மாப்பிள்ளை வீட்டுக்குப் போய்விட்டார்.

மறு நாள் ஒரு பெரிய மீன் மீது நிறைய வர்ணங்கள் பூசி தாம்பாளத்தில் வைத்திருந்தார்கள். அதன் எதிரில் எங்கள் இருவரையும் இருத்தி, 

இந்த சடங்கு முடிந்ததும், மணமக்களை வாழ்த்தி பரிசுகள் வழங்குகிறார்கள்.

அன்று இரவு... என் வாழ்நாளிலேயே மறக்க முடியாத இன்ப இரவு. எங்கள் முதல் இரவு. இதில் நம் ஊர் வழக்கத்திற்கும், வங்காள வழறுக்கத்திற்கும் ஏதாவது வேக்பாடு உண்டா என்று எனக்குத் தெரிய வில்லை. ஏனென்றால், நம் ஊர் வழக்கமே எனக்குத் தெரியாதே!

அவர்கள் மீனை தெய்வம் போல போற்றுகிறார்கள்.

அதே நேரத்தில் மீன்தான் அவர்களின் முக்கிய உணவு. எங்களைப்போலவே, என் கணவன் வீட்டாரும் பிராமணர்கள்தான். ஆனால், மீனை போடு போடு என்று போடுகிறார்கள்! வங்காளத்தில் எல்லாப் பிராமணர்களுமே மீன் சாப்பிடுவார்களாம்! 'இனிமேல் மீன் சாப்பிட பழகிக் கொள்ளுங்கள் என்று என் நாத்திகள் என்னைக் கேலி செய்தார்கள்!

மீன் தின்னலாமா? தின்றால் எப்படியிருக்கும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம். ஜி. ஆர். அளித்த சுவையான பதில்கள்

(மக்கள் திலகம் எம். ஜி. அர். அவர்கள் சமீபத்தில் சில கேள்விகளுக்கு அளித்திருந்த சில சுவையான பதில்கள் இங்கு இடம் பெறுகின்றன.)

கே: நீங்கள் வெளியே செல்லும்போது ஏன் வேட்டி சட்டை அணிந்து செல்கிறீர்கள்? 'சூட்' அணியக் கூடாதா?

ப: உடைகளின் மாறுதல் சூழ்நிலையைப் பொறுத்தது தான் என்று நான் கருதுகிறேன். பண்புக்கு மாறுபடாத வகையில் எப்போதும் எந்த உடையையும் யார் வேண்டுமானாலும் அணிந்து கொள்ளலாம். நான் சிம்லாவிற்கு படப்பிடிப்புக்குச் சென்றிருந்தபோது அங்கே அதிகக் குளிராக இருந்த காரணத்தால் சூட் அணியவேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டது. சூழ்நிலை நம்மை அப்படி வற்புறுத்துமானால் நாம் என்ன செய்ய முடியும்?

கே: உங்களுக்கு கவலைகள் அதிகமா?

ப: கவலைகளை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலைகள் மிகமிக அதிகம். ஆனால் அவைகளின் தாக்குதலைப் பெரிதாக எடுத்துக்கொண்டு அவைகளையே பிரச்சினைகளாக்கிக்கொள்வதுகிடையாது.

கே: உங்களுக்கு ஏதேனும் இசைக்கருவி வாசிக்கத் தெரியுமா?

ப: ஏதோ கொஞ்சம் ஆர்மோனியம் வாசிக்கத் தெரியும்.

கே: தாங்கள் நடிக்கும் படங்களுக்கு இனியும் கண்ணதாசன் பாடல் எழுதுவாரா?

ப: அது படத் தயாரிப்பாளர்கள் தீர்மானிக்க வேண்டியதொன்று.

கே: நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆறுமாதங்களுக்கு பேசமாட்டேன் என்று கூறியதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?


ப: அப்படி அவர் பேசினார் என்பது உண்மையானல் 'ஆறுமாதங்கள் அவகாசம் தருவோம். அதுவரை பேசமாட்டோம்' என்று சில காங்கிரஸ் தலைவர்கள் தி. மு. க. அமைச்சரவைக்கு 'காலம்' கணிப்பதைப் போல அவரும் சொல்லியிருக்கலாம். தலைவர்களை பின்பற்றுவது தொண்டர்களின் நல்ல பண்பு. அதை நாம் பாராட்டத்தான் வேண்டும்.


கே: திரையுலகில்வருங்காலத்தில் உங்களது இடத்தை ஜெய்சங்கர் பிடித்துவிடுவார் என்கிறார்களே உண்மையா?

ப: எந்த நடிகரும் வேறு எந்த நடிகருடைய இடத்தையும் பிடித்துவிட்டதாக வரலாறே கிடையாது. மக்கள் யாருக்கு எந்த இடத்தை தருகிறார்களோ அந்த இடம் அவர்களுக்கு நிச்சயம் கிடைக்கும்.

கே: நீங்கள் ஜெயலலிதாவுடன் நெருங்கி நடிக்கும் போது எப்படியிருக்கும்?

ப: நடிகன் நடிகையைத் தொடும்போது எப்படி இருக்குமோ அப்படி இருக்கும்.





விரைவில் சினிமாஸ் திரைகளுக்கு வரவிருக்கும் 'அன்பே வா' வண்ணப்படத்தில் கன்னடத்துப் பைங்கிளி.

# 3-ம் பிறை பார்க்கும் 2 நட்சத்திரங்கள்

நடிகை ஜோதிலட்சுமி இருக்கிறாரே, இவர் ஒவ்வொரு மாதமும் மூன்றாம் பிறை பார்க்கத் தவறமாட்டார். மாலையிலிருந்தே பிறை தெரிகிறதா என்று பார்க்கத் தொடங்கிவிடுவார் இவர். பிறை கண்டதும் உடனே ராஜகுமாரி அக்காவுக்கு போன் செய்வார்

வழக்கம் போல, கடந்த மாதம் 3ம் பிறையைப் பார்த்ததும், ஜோதிலட்சுமி விரைந்து சென்றார் ராஜகுமாரிக்கு டெலிபோன் செய்ய. அனேக முறை முயற்சி செய்தும் 'லைன்' கிடைக்கவில்லை. அதற்குள் எங்கே பிறை மறைந்து விடுமோ என்று பிறையைப் பார்க்க வெளியே ஜோதிலட்சுமி வந்த போது டெலிபோன் மணி கணகணத்தது. ஓடி வந்து 'போனை' எடுத்த ஜோதிலட்சுமியிடம் பேசியது ராஜகுமாரியேதான். சொல்ல வந்த விஷயமும் மூன்றாம் பிறை பற்றியதுதான்.

டெலிபோன் கொஞ்சநேரம் 'என்கேஜ்ட்' ஆக இருந்த காரணமும், ராஜகுமாரி, ஜோதிலட்சுமிக்கு இது பற்றிச் சொல்ல முயன்று கொண்டிருந்ததால் தானாம்.

# ராஜஸ்ரீயின் கோவா அனுபவம்

சமீபத்தில் ஹிந்திப்பட வெளிப்புறக் காட்சிகளுக்காக பகல் பனிரெண்டு மணிக்கு கொச்சிபோய் அங்கிருந்து கோவா செல்ல மூன்று பிளேன் டிக்கெட்டுகள் ரிசர்வ் செய்திருந்தார்கள் படப்பிடிப்பாளர்கள்.

முதல் நாள்வரை நிரம்ப படப்பிடிப்பு இருந்தமையால், அன்று காலை 7 மணிக்குத் தான் 'ஷாப்பிங்' கிளம்பி தேவையானவைகளை வாங்கிக் கொண்டேன். வீட்டுக்குத் திரும்பும்போது மணிபத்தரை ஆகிவிட்டது. அவசர அவசரமாக சாப்பிட்டு விட்டு அக்காவும், மாமாவும் ரெடியாக கட்டி வைத்திருந்த சாமான்களை காரில் ஏற்றி 'ஏர் போர்டிற்கு' கிளம்பினோம்,

வண்டி ஸ்டார்ட் ஆனது தான் தாமதம். 'ஹச்சு' என்றார் அக்கா! எனக்கும், மாமாவுக்கும் ஒரே கோபம். போங்கக்கா! உங்களுக்கு எப்போ பார்த்தாலும் சகுனம் பார்க்கும் வேலைதான். இது எப்போதுதான் போகப் போகிறதோ என்று கூறினேன்.

வண்டி ஏர்போர்ட் அடைந்ததும் பிளேன் வரவும் சரியாக இருக்கவே, பிளேனில் ஏறி சில மணி நேரத்தில் கொச்சியை அடைந்தோம். 'சகுனம்' என்று கூறுவீர்களே, பார்த்தீர்களா இப்போது! என்று கேலி செய்தேன் அக்காவை.

திடீரென்று ஒரு அறிவிப்பு! 'இன்னும் நான்கு நாட்களுக்கு கோவா செல்ல பிளேன் கிடையாது!' என்று. என்ன செய்வது என்று திகிலடைந்தோம்!

ஆனாலும் பம்பாயில் சென்று அங்கிருந்து போகலாம் என்று எண்ணினோம். விசாரித்ததில் பம்பாய்க்கும் நான்கு நாட்களுக்கு 'ரிசர்வேஷன்' கிடையாது. எல்லாம் தீர்ந்துவிட்டது என்றனர்! சென்னை திரும்பி விடலாம் என்றால் அதற்கும் இதே கதைதான்!

நான் நடித்த மலையாளப் படம் ஒன்று அப்போது கொச்சியில் ஓடிக்கொண்டிருந்தது. அதனால் எங்களைச் சுற்றி ஏர் போர்டில் ஏக கூட்டம். என்ன செய்வது என்று விளங்காது அம் மலையாளப் படம் எடுத்த புரொட்யூஸர் வீட்டுக்குச் சென்றோம். அவர் 'படம் டப்பிங்' செய்ய முன்னமேயே சென்னை சென்றிருப்பதாக கூறினர்கள்.

'என்ன இது சகுனத்தை அலட்சியம் செய்த பலனோ' என்று வருந்திக்கொண்டிருந்த போது மலையாளப் படத்தை தயாரித்த கம்பெனி மனேஜரை சந்தித்தோம். நல்ல வேளை! அவர்மூலமாக [illegible] திரும்ப சில கான [illegible] பட்ட ரிசர்வேஷன் டிக்கெட்டுகளை பயன்படுத்திக் கொண்டு சென்னை திரும்பினோம். சென்னை வந்த பிறகு பம்பாய் வழியாக கோவா சென்றோம்.



பிளேனை விட்டு இறங்கியதும், அப்பாடி! இன்னும்பத்து நாளைக்கு பிரயாணம் பற்றிய [illegible] என்ற [illegible] இருபத்தைந்து மைல் காரில் பிரயாணம் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கேட்கும் போது உண்டான கோபம்——அப்பப்பா, இதுவரைஎனக்கு அப்படியொரு கோபம் வந்ததே இல்லை!

காரில் இருபத்தைந்துமைலையும் கடந்தோம். அதைவிட பெரியதோர் அதிர்ச்சி! மற்றும் ஒரு பனிரெண்டு மைல்கள் 'லாஞ்சில்' போகவேண்டுமாம்! திருப்பதி மலையானை வேண்டிக்கொண்டே 'லாஞ்சில்' ஏறிக்கொண்டோம்.

சமுத்திரக் கொந்தளிப்பின் பேரிரைச்சலும் சுழன்று சுழன்று அடிக்கும் பேய்க் காற்றும் உண்டாக்குகின்ற பயங்கரம் போதாதென்று கூட வந்த 'கைட்' (வழிகாட்டி) ஒருவர், நேற்று, அதற்கு முந்திய நாள், முந்திய வாரம் நடந்துபோன விபத்தின் தகவல்களை விவரித்துக் கொண்டிருந்தார். உயிரைக் கையில் பிடித்துக்கொண்டுகுறிப்பிட்ட இடத்தை அடைந்தோம்.

விடிந்ததும் படப்பிடிப்புக்கு புறப்பட்டோம். ஓடும் ஸ்டீமரில் படப்பிடிப்பு நடந்தது. மறுநாள், அருகில் அமைந்துள்ள ஒருதீவில் படப்பிடிப்பு

இந்த இடத்தின்பேரதிசயம் யாதெனில் பகல் உச்சி வேளையில் தண்ணீர் நாலா புறமும் சூழ்ந்து நில பாகமே தெரியாதாம்! கூட வந்திருந்த எனது சகோதரிமிகவும்பயந்து விட்டார் இதைக் கேட்ட பின் உச்சி வேளையில் வர வேண்டிய நீர் முன்னதாக வந்துவிட்டால் எப்படி திரும்புவது? ஆபத்து ஏதாவது நேர்ந்து விடுமோ என்ற கவலை! இதையெல்லாம் யார் கேட்கிறார்கள்?

பயந்தது போலவே அன்று முன்னமாகவே நீர் சூழ்ந்துக் கொள்ள ஆரம்பித்தது. அக்கா ரொம்பவும் பயந்து போனார்கள். அவசர அவசரமாக லாஞ்சில் திரும்பினோம். இப்படியாக ஆறு நாட்கள் ஓடி விட்டன.

ஏழாவது நாள் அன்று அருகிலிருந்த மற்றொரு திட்டில் படப்பிடிப்பு. அதற்கு நடந்து தான் செல்ல முடியும் தண்ணீரில் நடக்க வேண்டும் என்று கேட்டபோது எனக்குஉள்ளூர பயம் ஏற்பட்டது. அக்கா என்னை அனுப்பவே மறுத்து விட்டார்கள்.

முதலில் வந்த இடத்தில் எதுவும் கூறக்கூடாது என்ற கருத்துடன் துணிந்து சென்றேன். ஒருவாராக படப்பிடிப்பு முடிந்தது. இன்னல்கள் எதுவுமின்றி இருக்குமிடம் திரும்பினேன். கனவிநாள் அல்லவா—அன்று எங்களுக்கு விருந்து நடந்தது. ஊருக்கு திரும்பினோம் ஏழுமலையானை துதித்தவாறு. சகுனம் பார்த்துக் கொண்டுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங் கட்டில்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

யாமல் அவன்ர கன்னத்தில அடிச்சுப் போட்டன்.

தங்கை கத்த அவன் கத்தியைத் தூக்க... தலைநிமிர்ந்து நிண்ட நாங்க, தலைகுனிய வேண்டியதாயிற்று.

வீட்டில் மனுஷியும், அன்னம்மாவும் அழுதழுது என் உசிரையே வாங்கி விட்டார்கள். மனிஷிக்கு மகளின் கவலை மகளுக்கு கணேசன் நினைப்பு. எனக்கு வாழ்வே வெறுத்துப் போச்சு...

இதுக்கிடேல்ல ஒரு கங்கதி. கேட்டியெண்டா விறைச்சுப் போவாய். நான் என்ரவயலில பட்டி அடைக்கிறது வழக்கம். ஓ! நீ பட்டணத்துப் பொடியன். பட்டியடைக்கிறதெண்டா விளங்காதுதான். பட்டியடைக்கிறதெண்டா ஒவ்வொரு வயலிலும் நாப்பது ஐம்பது மாடுகளை நாலைந்து நாளைக்கு கட்டி விடுறது. அதுகள் அங்கின உள்ள புல்லைத் திண்டு, எருவையும் வயலில் போட, வயல் நல்ல உரமாகி விடும். ...நான் என்ர மாடுகளை மட்டுமல்லாமல் பிற இடத்திலிருந்தும் மாடுகளைக் கொண்டுவந்து பட்டியடைக்கிறது வழக்கம். அப்பதான் என்ர வயலுச்கு போதுமான பசளை கிட்டும்... ஆனு அந்த முறை பட்டியடைக்க வெண்டு கொண்டு வந்த மாடுகளில சரிஅரைவாசி அப்படியே இறந்து போய்... வயல் பாக்கப் போன நான் அப்படியே மயங்கிப் போய், எப்படி வீடு வந்து சேர்ந்தன் எண்டே எனக்குத் தெரியாது. அப்படி ஒரு பயங்கரம் நிறைந்த கொடுமைக் காட்சியை என் ஆயுளில கூட நான் கண்டதில்லை. அவை ஏன் இறந்தன வெண்டு இன்னமும் எனக்குப் புரியல்லே தம்பி!

எனக்கு உலகமே சுடுகாடாகிப் போச்சுது தம்பி... பட்டகாலிலே படும் எண்ட கதையாய்... கிராமச் சங்கத் தேர்தலிலும் சகலனே வெற்றி பெற...

நான் தலையில துண்டைப் போட்டுக் கொண்டு குந்த வேண்டியதாயிற்று.

அப்ப கணேசன் என்ன செய்தான் எண்டா கேக்கிறுய்? என்ன செய்வான் பாவம். அடிக்கடி அவன் வீட்டிற்கு வந்து மாமிக்கும், அன்னத்துக்கும் தேறுதல் சொல்லுவான். அவன் வருகையுமில்லா விட்டால் எங்க குடும்பமே இருளில் மறைந்திருக்கும்.

ஒரு நாள் அவன் வருகையும் தடைப்பட்டது. 'மாமா! பட்டணத்துக்குப் படிக்கப் போறன்!' - எண்டு ஒரு நாள் வந்து நிண்டான். மகிழ்ச்சியோடுதான் எல்லாரிட்டையும் விடைபெற்றுக் கொண்டு போனுன்.

அவன் போனதும் எங்களுக்கு வாழ்வே வெறிச்சிட்டது. இறக்கையொடிந்த பறவையாக நான் ஒடுங்கிப் போய் மூலையில் இருக்க, அன்னமும் தாயும் என்னைப் பார்த்து கண்ணீர் வடிக்கிறதைத் தவிர என்ன செய்ய முடியும் அவர்களால் தம்பி;

கணேசன் விடுமுறைக்கு ஊருக்கு வரும் போதெல்லாம் எங்களைக் காணுமலே போக மாட்டான். அவன் அவ்வளவு நல்லவன் தம்பி... ஆனு அவன் வந்து கொழும்புக்குத் திரும்பிப் போனதும் யார் உவையளுக்கு மாப்பிள்ளை கொடுக்கிறதெண்டு சொன்னது? எண்டு ஊர் முழுக்கச் சொல்லித் திரிவான் சகலன்.

இதைக் கேள்விப்பட்ட என் வீட்டின் குல விளக்குகள் சாமி படத்துக்கு முன்னுல் தினசரி கண்ணீர் மாலை கோக்கிறது தான் தொழிலாய்ப் போச்சு. நானும் அவையளைப் பாத்து ஊமைக்குரலில் கதறுவதே என் தொழிலாகி விட்டது

ஒரு முறை விடுமுறைக்கு ஊருக்கு வந்தவன் 'ஐயா, என்ன சொன்னுலும் நான் தான் அன்னத்தை முடிக்கிறது' எண்டு சொல்லி விட்டுப் போனுன். ஆனுல் அவன்ர வாக்கு நிறைவேறியிருந்தால் ஐயோ!

எல்லாத்துக்கும் தலைச்சுளியெண்டு ஒன்றிருக்கிறதே, தம்பி!... அதை மாத்த முடியுமா?'

கணேசன் வந்து விட்டுப் போன சில நாளில், அன்னம் ஏதோ வயிற்றுவலி எண்டு சொன்னுள். பின்படிப்படியாக வலி கூடித் துடித்தே போனுள். ஊர்ப் பரியாரிட்டக் காட்ட அவரும் 'பட்டணத்துக்கு கொண்டு போங்க' எண்டிட்டார். யாழ்ப்பாணத்து ஆஸ்பத்திரியில வந்து காட்ட ஏதோ கல் போய் குடலில அடைஞ்சிருக்கு. சின்ன ஒப்பிறேசன் செய்தாச்சரியாப் போயிடும் எண்டு கத்தி வைச்சு சுகமாத் திரும்பிவர...

ஊரில் இருக்கிற நாக்கில நரம்பில்லாததுகள்... ஐயோ.. இப்ப நினைச்சாலும் மனம்அனலாய் எரிகிறது தம்பி... எல்லாம் என்ர குடும்பத்தைக் கலைக்கச் செய்த சதி தம்பீ...

'என்ர மகள் அன்னம் ஏதோ தவறு நடந்ததால தான் ஒப்பிறேசன் பண்ண வேண்டி வந்தது எண்டு ஒரு கதையைக் கட்டி விட்டினம்.'

—அதைக் கேட்ட மகள் அப்படியே பதை பதைச்சுப் போய் விட்டா. நோய் தேறிய பலவீன உடம்பு. தலையை நிலையில மோதின மோது... ஐயோ... நான் ஒப்பிறேசனில இறந்திருக்கக் கூடாதா எண்டு கத்தின கத்து......

மலரில் சேறுபட்டாலும் சேற்றில் மலர் விழ்ந்தாலும் மலருக்குத்தான மாசு தம்பி...

அன்னத்தை எங்களால தேற்றவே முடியவில்லை தம்பி.

ஒரு நாள். நான் வெளியில போட்டு வீட்டுக்கு வாறன். மனிசி குசினியில ஏதோ வேலையாக இருந்தா. இந்தக் கட்டில்ல என்ர மகளுக்காக... மண இரவுக்காக வாங்கிய கட்டில் அன்னம் அலுங்காமல் படுத்திருந்தா, பிறரின் மெல்லிய காலடிச் சப்தம் கேட்டோடனயே பதறித் துடித்தெழும்பும் அன்னம் அசையாமலே படுத்திருந்தா... 'அன்னம்' எண்டு கூப்பிட்டன். பதிலேதுமில்லை. மீண்டும் கூப்பிட்டன். ஏதோ சந்தேகம் தட்டியது. மீண்டும் அன்னம் எண்டு கத்தினன். பதிலில்லை. எனக்குப் புரிந்து விட்டது. எல்லாமே புரிந்து விட்டது. என் கத்தலைக் கேட்டு அவள் ஓடி வந்தாள். மயங்கிச் சாய்ந்தாள்.

ஓம் தம்பி!... அன்னம் எங்களை மோசஞ் செய்து விட்டுப் போய் விட்டாள். அலரிச்செடி வேர் அவளை ஆட்கொண்டு விட்டது.

பிறகென்ன தம்பி... மகள் போனுள். மனைவி போனுள். பாவி நான் மட்டும் இன்னும் பழிசுமக்க வாழுறன். என் வயல்களை யார் யாரோ எடுத்தார்கள். ஆண்டார்கள். ஆனு நிலத்தை நிலமாக பார்க்க முடியவில்லை. அவர்களால்... நிலத்தை விற்ருர்கள்... பலர் பட்டணக்கரையை அடைந்தார்கள்... பட்டணத்தில் உணவுக்குப் பஞ்சம் ஏற்பட இடத்துக்கு நெருக்கடி ஏற்பட மீண்டும் கிராமத்துக்கே வந்து கொண்டிருக்கிறுர்கள். ஒரு கால் நூற்றுண்டு மாற்றங்களையே இந்தப் பழங் கட்டிலில மர்ந்து கொண்டு பார்த்துக் கொண்டிருக்கிறன் தம்பி... எனக்கு எப்பொழுது மாற்றம் வருமோ?...

என்ன தம்பி...! சொல்லுறுய்... என்ர கதை உன் ஆராய்ச்சிக்கு மிகவும் உதவியா இருக்கோ... நன்றியோ? உனக்கெல்ல தம்பி நான்நன்றி சொல்லவேணும்... இந்த வயோதிப காலத்தில... ஒரு அறளைப்பேச்சை அலுக்காமல் கேட்ட உனக்கெல்ல நான் நன்றி சொல்ல வேண்டும். போய் வா தம்பி!

(யாவும் கற்பனை)

# மொழிகள் அனைத்..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

விஞ்ஞானக் கருத்தினில் வளர்ந்த அறிவுடைய மேல நாட்டவரும், கலிலீயோ காலம்வரை, உலகம் உருண்டை, உலகம் ஞாயிற்றைச் சுற்றி வருவது, என்னும் அடிப்படை உண்மையை ஏற்காது என்றுராகவும், தமிழ் மக்கள் எவ்வளவு காலம் முன்னர் அவ்வுண்மைகளைத் தெளிந்தவராயிருந்தனர் என்பதற்கும் இந்த 'உலகம்' சான்றுகும்..

இந்தச் சொல் போன்று —பிறர் கணுத கண்டறியாத் உண்மைப் பொருளை உணர்தும் திறன் வாய்ந்த தனித் தமிழ்ச் சொற்கள் பலவாகும். 'கடவுள்' என்னும் சொல், காட்சிக்கும் கருத்துக்கும் எட்டாத கடந்ததொருபொருளை, 'உள்ளங்கடந்ததை உணர்த்துவதும் ஊழ்' எனுஞ்சொல் தானுக விளைதலுடைய இயற்கை ஆற்றலை உணர்த்துவதும் 'உயிர் என்பது செயற்படும்நிலையாகிய பண்பையும் 'உடம்பு' என்பது அதற்கு இடமாகும் பொருளையும் உணர்த்துவனவாதலும், எண்ணுவோர் தமிழ்ச் சொல் வழங்கும் பொருள் அருமை கண்டுவினவாதிரார்.

நிலை பெற்றதாக நிற்றலால் 'நிலம் எனவும், நீர்த்து ஓடுதலால் 'நீர்' எனவும், அலைத்தலால் 'கால், காற்று எனவும், தீய்த்தலால் 'தீ' எனவும் பிறவற்றை வெளிப்படுத்தலால் 'வெளி' எனவும் பெயர் கொண்ட தன்மையும் அகக்காழ் உடையன மரம்எனவும், புறக்காழ் உடையன புல் எனவும், காரணத்தோடு பகுக்கப்பட்ட முறையும் முதலாயின தமிழின் தனிச் சிறப்பாம்.

## யாழ். ஞானப்பிரகாசரின் தொண்டு

இத்தகைய மாட்சியுடைய தமிழின் மூலச் சொற்கள் (தர்துகள்) எவையெனக் கண்டறிதல் அருமையுடைய செயலேயாகும், எந்த அடியினின்றும் ஒவ்வொரு சொல்லும் பிறந்தது என்பதைக் காண விரிந்த ஆராய்ச்சியும்' பரந்த நூலறிவும், நுண்மாண் நுழைபுலனும் வேண்டப்படுவதாம்.

அத்தகுமொழி ஆராய்ச்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட ஒரு பேறறிஞர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஞானப்பிரகாசர் ஆவர். அவர் நாற்பது ஆண்டுகளுக்கு மேல் இடையறுது நிகழ்த்திய மொழியாராய்ச்சியின் பயனுக கண்டுரைத்த முடிவு இதுவேயாகும்

தமிழ்ச் சொற்களின் தால வடிவ அடிச்சொற்கள் எல்லாம் ஓரசையினவே. அவை. எண்ணிக்கையில் மிகச்சில வே' அவை காலத்தோடு வளர்ந்தே, பல்லாயிரக் கணக்கான அளவில், வழங்குவன ஆயின.

உலக மொழிகள் அனைத்தும் —அவற்றின் சொல் மூலங்களை ஆராயும் இடத்து, அவை பழந் தமிழ்ச் சொல் தாதுக்களோடு தொடர்புடையனவாய் அதே பொருள் தொடர்போடு வழங்குவதைத் தெளிவுபடுத்த முடியும்.

## தமிழ் மாட்சி காண உழைப்பீர்

இவ்வாறு அவர் கண்ட முடிவுக்கான சான்றுகள் பல பல. எனினும் அந் ஆராய்ச்சி முற்றுப் பெறவில்லை. தக்க மொழி [illegible] புலமையுடையோர் இந்த ஆராய்ச்சியில் தொடர்ந்து ஈடுபடுவார்களானல், தமிழ் —திராவிட, மொழிகளிக, தமக்கையாக, வட மொழிக்கு வளம் தந்த அன்னையான் இந்தோ ஐரோப்பிய மொழிகட்கெல்லாம் பல சொற்களை வழங்கியதோடன்றி, உலக மொழிகள் அனைத்துக்கு பொருந்திய மூலம் அடிதாது) உடைய முதல் தாய் மொழியாக விளங்கிய மொழிஎன்பதுநாட்டப்படும். இன்று வரலாறு இருளடைந்து. மொழியறிவு தேய்ந்து, ஆராய்ச்சி நலிந்து தமிழ் மாட்சி மறைந்து கிடக்கிறது.

தன்மாட்சி, எழுஞாயிற்று, ஒளிபாக, இருளகற்றும் திறமாகமாற்றியுள்ளமை கண்டு மகிழ்வோமாக.

## தமிழினத்தின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

படி கட்சி சுமத்திய பொறுப்பையும் தட்டாமல் ஏற்றுக் கொண்டு, அதனுல் பொலீஸ் தடியடிக்கு இலக்கானுர்.

பொலீஸ் தடியடியால் சுகவீனமுற்று படுக்கையில்படுத்த திரு. கந்தையா அதையே மரணப்படுக்கையுமாக்கிக்கொண்டார் ஆம், 1963ம் ஆண்டு ஜூன் மாதம் 4ம் நாள் இயற்கையடைந்தார்.

திரு. கந்தையாவின் தொண்டு நமக்கெல்லாம் ஒளி விளக்காக திகழ்ந்து வழிகாட்டட்டும் அந்தத் தியாகச்செம்மல் காட்டும் திவ்விய ஒளியில் நடந்து சென்று நம் இலட்சிய புரியை அடைவோமாக.

## கொலை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டிரேட் கோர்ட்டில், தோட்டத்துள் அத்து மீறி பிரவேசித்ததாகக் குற்றம் சாட்டி மெய்யப்பன்மீது ஒருவழக்கு தாக்கல் செய்தார்.

கோர்ட் மெய்யப்பன் மீது வாரந்து பிறப்பித்தது எனவே பொலிஸார் மே 7ந் திகதி மெய்யப்பனைக் கைது செய்வதற்கு ஸ்டெலன்பர்க் தோட்டத்துக்குச் சென்ற போது, அவர் அங்கு காணப்படவில்லை.

மே 8-ந் திகதி தோட்டந்தில் சம்பள நாள்.

அன்று முதலாவது எதிரியும் இரண்டாவது எதிரியும் இரசக் கவுண்டன் என்னும் மற்றெரு தொழிலாளியுடன் கண்டிக்குச் சென்று, மெய்யப்பனைச் சந்தித்துப் பேசிவிட்டு, அன்றே தோட்டத்துக்குத் திரும்பி விட்டனர்.

அடுத்த நாள் 9ந் திகதிதான் போப்துரை கொலை செய்யப் பட்டார்.

(தொடரும்)

## 'தேன்' மேடையேறுகிறது

அடுத்தமாதம் 6-ந் திகதி கொழும்பு கலா ஸ்ரேஜ் நாடக மன்றத்தார் பம்பலப்பிட்டி சரசுவதிமண்டபத்தில் 'தேன்' என்ற தமது புதிய சமூக நாடகத்தை அரங்கேற்றவிருக்கின்றனர்.

இந்நாடகத்தில் இலங்கை சினிமா, வானொலி நடிகர்களான ஏ. ரகுநாதன், சந்திரகலா, எஸ். நாகராஜா, எஸ். எஸ். சின்னையா, சூர்யகுமாரி, சரோஜா, கே. பரராஜசிங்கம், எஸ். விஸ்வநாதராஜா, இந்திராணி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

நாடகத்தின் கதை வசனத்தை ஆதி-சந்திரனும், டைரக்‌ஷனை எஸ். அருமைநாயகமும் கவனிக்கிறுர்கள். இந்நாடகத்தை திரு. கே. கதிர்காமத்தம்பி தயாரித்தளிக்கிறுர்.

## வாழவழியில்லை காரணம் உரிமை அற்று இருப்பதே

ஒரு நாடு உயர்ந்துள்ளது. என்பதை அந் நாட்டு தொழிலாளர்களின் வளர்ச்சி, அவர்களின் நிலை ஆகியவற்றிலிருந்து எடைபோட்டுவிடலாம். ஆனுல் எமது இலங்கை நாடு செழிப்புற்ற நாடாகவிருந்தாலும் இங்குள்ள தொழிலாளர்கள் உயர்ந்தவர்களாக வாழ வழிகிடைக்கவில்லை. இதற்கு முக்கிய காரணம் உரிமையற்றவர்களாக இருப்பதுதான். இதை நினைக்கும் போது தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் ரத்தக் கண்ணீர் வடிக்கின்றனர். இதை ஆட்சியாளரும், முதலாளி வர்க்கமும் உணர்ந்து தொழிலாளர்களை நல்ல நிலையில் வாழ, அவர்கள் தம் கலை கலாசாரம், பண்பாட்டை பேணிகாக்க ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு கடந்த 8-4-67ல் தலவாக்கொல்லையைச்சேர்ந்த பெரிய மட்டுக்கொல்லை தோட்டத்தில் நடந்த இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தோட்டத் தேர்தல் கூட்டத்தில் கழகத்தின் கொடியை ஏற்றி வைத்து தலைமை உரை நிகழ்த்திய கழகத்தின் இணைப் பொருளாளர்களில் ஒருவரான திரு. மு. எல்லாளன் கூறினுர்'

மற்றும் தலைமை அலுவலக பிரமுகர் திரு. கோ. இ. து. கோவிந்தராசன், தலவாக்கொல்லை மாவட்டப் பிரதிநிதி திரு. எஸ். பாக்கியநாதன் ஆகியோர் உரையாற்றினர். பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர். திரு. கே. வி. பெரமன், துணைத்தலைவர் திரு. ஆர். சிவனு செயலாளர் திரு. எல் தர்மலிங்கம், பொருளாளர் திரு. ஆர். வெங்கிடாசலம், கலக்டர்கள் திருவாளர்கள் எஸ். காமன், கே. பெருமாள் ஆகியோருடன் 11 பேரைக் கொண்ட தோட்டக் குழு வாலிபமுன்னணி தலைவர் திரு. வி. வேலு.

## பேசி பயனில்லை செயல் வேண்டும்

ஈழவள நாட்டைப் பொறுத்த மட்டில் நாமுயர்ந்தால்தான் இந் நாடு சுபிட்சம் பெற முடியும் என்பதை எல்லேரும் உணரும் காலம் வந்து விட்டது. இந்நேரத்தில் நாம் அறிவை செம்மையான வழியில் வழி நடத்தி நமக்கும் நம் இனத்திற்கும், நாட்டுக்கும் நம்மை பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். தொழிற் சங்க சரித்திரத்தில் பேசிப்பேசி பல ஆண்டுகளையும் வீணுக்கிவிட்டோம். இனி ஒரு நிமிடத்தையேனும் பேசி வீணுக்காது செயலில் காட்ட இறங்க வேண்டும். அப்படி பொதுமக்கள் அனைவரும் செயல் வீரராக மாறுவதற்கு எமது கழகத்தின் மாவட்டக்குழுக்கள் வழி காட்ட வேண்டும்.

இவ்வாறு கடந்த 16.5.67ல் நடைபெற்ற தலவாக்கொல்லை, இலங்கைத் தொழிலாளர் கழத்தின் மாவட்டக் குழுக் கூட்டத்தில் உரையாற்றி கழகத்தின் தலவாக்கொல்லை மாவட்டப்பிரதிநிதி திரு. எஸ். பாக்கியநாதன் கூறினுர்.

மற்றும் கழகத்தின் தலைமை பிரமுகர் திரு. கோ. இ. து. கோவிந்தராசன் திரு. சாமன் ஆகியோரும் பேசினர். ஈற்றில் மாவட்டக்குழு தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கம்பனின் கவிநயம்

தமிழகத்து வாழ்ந்த புலவர்களில் கம்பன் தனிச் சிறப்புப் படைத்தவன். அவன் தமிழ்பேசும் உலக மக்கட்கு ஆக்கித் தந்த ஒப்பற்ற தமிழ் நூலாகிய கம்பராமாயணம் சொற்செறிவும் பொருட்செறிவும், கற்பனைச் சிறப்பும், உவமை முதலிய அணிச் சிறப்பும் ஒருங்கே அமையப்பெற்றது. இன்றும் கம்பராமாயணம், வாழையடி வாழையென வருகின்ற மக்களனைவரும் கற்றின்புறுமாறு தண்ணொளி பரப்பி நிற்கின்றது. கம்பராமாயணத்தைக் கற்றுணர்ந்தோரால் கம்பனின் கவிச் சிறப்பை நன்கறியலாம்.

"தோன்றியகூனியுந்
துயிக்கும் நெஞ்சினள்
ஊன்றிய வெகுளியாள்
உலைக்குமுள்ளத்தாள்
கான்றெரி நயனத்தாள்
கவிக் குஞ்சொல்லினள்
மூன்றுல கினுக்குமோர்
இடுக்கண் மூட்டுவாள்"

கூனியின் உள்ளத்தைக் கற்பனைக் கண்கொண்டுணர்ந்த கம்பர் அவளின் தறுகண் மன நிலையை மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"மூன்றுலகினுக்குமோர்
இடுக்கண்மூட்டுவாள்"

என்ற அடியினால் கூனியின்வஞ்சக சிந்தையை எம்மால் நன்குணர முடிகின்றது. கம்பன் படைத்த கதாபாத்திரங்களில் கூனி முக்கிய இடத்தைப் பெற்றுள்ளாள். கூனி கம்பராமாயணத்தின்முதுகெலும்புபோல் அமைந்துள்ளாள், எனின் அது மிகையாகாது.

"மின் பொருவு தேரின் மிசை
வீரன்வரும்போழ்தில்
தன் பொருவில் கன்று தனி
தாவி வரல் கண்டாங்கு
அன்புருகு சிந்தை யொரு
ஆவுருகு மாப் போல்
என்புருகி நெஞ்சுருகி
நெஞ்சுருகி நிற்பார்"

என்ற செய்யுளை ஈண்டு நோக்குங்கால் நகரமாந்தர் இராமன் மாட்டுக் கொண்டிருந்த அன்பு நன்கு விளங்குகின்றது. மின்னலையொத்த தேரின் மேல் இராமன் வரும்போது தன் கன்று குதித்து ஓடி வரக் கண்ட தாய்ப் பசுவைப்போல் மக்கள் அன்பினால் அன்பேயுருவாகக் காட்சியளித்தார்கள் என்று கம்பர் சிறந்த உவமை மூலம் விளக்கியுள்ளார். எனவே கம்பனின் கவிதைகள் உவமை அணிச்சிறப்பு வாய்ந்தவை என்பது விளங்குகின்றது.

எனவே கம்பராமாயணத்தின் மூலம் கம்பனின் கவிச் சிறப்பையும், கற்பனைத் திறத்தையும், நன்கறியலாம். ஆகவே இந்நிகரற்ற நூலாகிய கம்பராமாயணத்தை மாணவர்கள் கற்று இன்புறுமாறு வேண்டுகிறேன்.

**ஆ. ரகுபதி**

# இவர் யார்?



உங்கள் திறமையை சோதித்துப் பார்ப்பதற்காகவே இப் போட்டி நடத்தப்படுகிறது.

இங்கு துண்டு துண்டாகக் காணப்படும் பகுதிகளை சரியான முறையில் சேர்த்துப் பார்த்தால், தமிழகம் செய்த தவப் பயனாகத் தோன்றிய பெருமகன் ஒருவருடைய உருவம் தோன்றும்.

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம், இத்துண்டுகளைச் சேர்த்து முறைப்படி ஒழுங்காக அப்பெரியாரின் உருவந் தோன்றுமாறு ஒட்டி, அதன் கீழ் அந்த அறிஞரின் பெயரையும் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவேண்டியதே.

இப் போட்டியில் வெற்றி பெறும் அதிர்ஷ்டசாலியான மாணவருக்கு ரூபா 10-00 பெறுமதியுள்ள புத்தகப் பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.

போட்டி முடிவு திகதி 30-6-67.

எங்கே, உங்கள் திறமையைப் பார்ப்போமே!

அன்புள்ள தம்பி தங்கைகளே,
வணக்கம்.

கட்டுரை அனுப்பி வைப்பதில் நீங்கள் காட்டி வரும் உற்சாகம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

மாணவர் மன்றம் உங்கள் பகுதிதானே! அதனை சிறப்படையச் செய்வது உங்கள் பொறுப்பல்லவா?

உங்கள் திறமையைச் சோதிக்க இந்தக்கிழமையிலிருந்து போட்டியொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. மகிழ்ச்சிதானே!

அன்புள்ள,
கோபு அண்ணு.

# அறிந்து கொள்ளுங்கள்

**மனித தோல்**

ஒருமனிதனுடையதோலை உரித்தெடுத்துப் பரப்பினால் இருபது சதுர அடி இருக்கும். அது ஏழுமுதல் பத்து மூத்தல்வரை கனமிருக்கும்.

**பூச்சிகள்**

உலகத்தில் மொத்தம் 20 லட்சம் வகையான பூச்சிகள் உயிர் வாழ்கின்றன.

**தூக்கம்**

எட்டுமணி நேர தூக்கத்தில் பன்னிரண்டு நிமிஷ நேரம்மட்டுமே மனிதன் நிம்மதியாக உறங்குகிறான்.

**தலைமயிர்**

தலைமயிர் ஒரு மாதத்தில் ஏறத்தாழ அரை அங்குலம் வளருகிறது குளிர்காலத்தைக் காட்டிலும் வெய்யிற காலத்திலும்தான் மயிரின் வளர்ச்சி அதிகம்.

**அகர நெடுங் கணக்கு**

எதியோப்பிய மொழி தவிர மற்றெல்லா மொழிகளினுடைய நெடுங் கணக்குகளிலும் அகரமே முதலெழுத்து.

**ஏக்கர்**

'ஏக்கர்' என்றும், 'ஏகரா' எனவும் நிலத்தின் அளவைக் குறித்துச் சொல்கிறோமல்லவா? இந்தச் சொல்லின் வேர்ச்சொல் 'யோக்' என்ற ஆங்கிலச் சொல்லாகும். 'யோக்' என்றால் 'நுகம்'. நுகத்தில் கட்டிய இரண்டு காளைகள் ஒரு நாளில் சூரிய உதயத்திலிருந்து அஸ்தமனம் வரை உழக்கூடிய நில அளவையே ஆதி நாளில் 'ஏக்கர்' எனக்குறிப்பிட்டார்கள்.

**நரம்புக்குப் பதில்**

ஒரு நாய்க்கு, நரம்பு ஒன்றுக்குப் பதிலாக மெல்லிய மின்சாரக் கம்பி ஒன்றை ரஷிய விஞ்ஞானிகள் அண்மையில் பொருத்தினர்.

**சவரக் கலை**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தஅலெக்சாண்டருடைய தந்தையாரின் காலத்தில் தான் முகச்சவரம் செய்து கொள்ளும் பழக்கம் ஏற்பட்டதாம்.

**மாபெரும் ஓசை**

1833-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆறும் நாள் சுமத்திரா தீவிலுள்ள கிராகடோ எரிமலை தீயைக் கக்கிய போது எழுந்த ஓசை 3000 மைல்களுக்கு அப்பாலும் கேட்டதாம்.

க. அன்னபூரணி,
திருமலை.

# பலருக்குத் தெரியும் சிலருக்குத் தெரியாது

நியூஸ் என்னும் சொல் எப்படி உண்டாயிற்று?

வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு இவைகளை குறிக்கும் நோர்த், ஈஸ்ட், வெஸ்ட், சௌத் என்னும் ஆங்கில சொற்களின் முதல் எழுத்துக்கள் சேர்க்கப்பட்டபோது நியூஸ் (NEWS) ஆயிற்று.

சூயஸ் கால்வாய் வெட்டி இந்தியாவிற்குக் குறுக்கு வழி செய்தது யார்?

பெர்டினன்—டி—லெஸ்ஸெப்ஸ் என்ற பிரெஞ்சுப் பொறியியல் மேதை.

எந்தப் புகழ் பெற்ற ஆங்கிலக் கவி குருடாக இருந்தார்?

சொர்க்கநீக்கம்பாடிய ஜோன் மில்டன் என்பவர்தான் கண்ணற்ற போதிலும் கவி மழை பொழிந்த ஆங்கிலக் கவிஞர்.

இக்காலத்தில் வழங்கும் குடை முதன் முதலில் யாரால் உபயோகிக்கப் பட்டது?

1786-ல் வாழ்ந்த ஜோனஸ் ஹாலவே என்பவர்தான் முதன் முதல் குடை பிடித்தவராவார்.

முதன் முதலில் இந்திய மொழியில் எப்போது புத்தகம் அச்சடிக்கப் பட்டது?

இந்தியர் குறைநயத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவில் 1577-ம் ஆண்டில் கொச்சியில் முதல் புத்தகம் அச்சடிக்கப்பட்டது.

முதன் முதல் உலகப்படம் வரைந்தவர் யார்? எந்த நூற்றாண்டில் வாழ்ந்தார்?

தாலமி என்பவர்தான் முதன் முதலில், உலகப் படம் வரைந்தவராவார். கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தார்.

—கி. சந்திரசேகரன்,
மன்னார்.

# பாட்டுப் பாடவா?

ஒரு சமயம் ஜவஹர்லால் நேரு குழந்தைகள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள புது டில்லி அ. இ. ரேடியோ நிலையத்திற்கு வந்திருந்தார். குழந்தைகளோடு குழந்தையாய் கனகுஷியாய் காணப்பட்ட நேருஜியைப் பார்த்து ஒரு குழந்தை திடீரென்று 'நேரு மாமா...பாட்டொன்று பாடுங்களேன்' என்று கேட்டது. நேருஜிக்கு தர்ம சங்கடமாகி விட்டது. என்ன சொல்லி சமாளிக்கலாம் என்று யோசிப்பதற்குள் மற்ற குழந்தைகளும் 'நேரு மாமா பாட்டு, நேரு மாமா பாட்டு' என்று உடும்புப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டன.

நேருஜியின் நிலைமை எப்படியிருக்குமென்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள். பளிச் சென்று அவரது மூளையில் ஒரு யோசனை உதித்தது.

'குழந்தைகளே உங்கள் விருப்பப்படி பாடுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. பாடுவதற்கு முன் நான் செய்யற மாதிரி நீங்களும் செய்யணும். அப்பத்தான் பாடுவேன்' என்றார்.

'ஓ...ரெடி' என்று ஏக காலத்தில் எல்லாக்குழந்தைகளும் கூவி தலையாட்டின.

'சரி அப்படியானால் இப்படிச் செய்யுங்க பார்க்கலாம்' என்று தலையைத் தரையில் வைத்து, கால்களை உயரத் தூக்கி சிரசாஸனம் செய்து காண்பித்தார் நேரு!

'பாவம்! குழந்தைகள் எவ்வளவோ முயற்சித்தும் தோல்வியையே கண்டனர்.

நேருஜியும் தந்திரத்தால் சங்கீதத்திலிருந்து தப்பிப் பிழைத்தார்.

# அதிசயம் ஆனால் உண்மை!

இன்னும் 20 ஆண்டுகளில் 1, 000, 000, 000 ஆசியாக்காரர்கள் பிறப்பர். இன்று உள்ள வாழ்க்கைத் தரப்படி அவர்கள் வாழவேண்டுமானால் அவர்களுக்குத் தேவையானவை.

300,00,00,000 அதிக வீடுகள்.

10,00,000 அதிக மருத்துவ விடுதிப் படுக்கைகள்.

1,20,000 அதிக ஆரம்பப்பள்ளிகள். ஒரு பள்ளிக்கு ,000 மாணவர்கள் வீதம்.

1,000,00,00,000 கலன் அதிகக் குடிநீர் தினசரி.

1,00,000,00,00,000 கிலோவாட் அதிக மின்சக்தி.

1,00,00,000 டன்கள் அதிகக் கோதுமை (ஆண்டு தோறும்).

8,20,00,000 டன்கள் அதிக அரிசி (ஆண்டு தோறும்).

18,00,00,000 டன்கள் அதிகக் காய்கறி (ஆண்டு தோறும்)

6,00,00,000 டன்கள் அதிக மீன் (ஆண்டு தோறும்).

1,30,00,000 டன்கள் அதிக இறைச்சி (ஆண்டு தோறும்).

55,00,000 அதிக போலீஸ்காரர்கள்.

10,00,000 அதிகத் தீயணைக்கும் படையினர்.

60,00,000 அதிக அரசாங்க அலுவலாளர்கள். இது தவிர ஆயிரக்கணக்கான புது சாலைகளும், பூங்காக்களும் தேவைப்படும்.

இதைப் படித்து முடித்தவுடன் மயக்கம் வருகிறதா? [illegible]ர்கள்.

# யானை எவ்வளவு காலம் வாழும்?

யானைக்கு நூறு வயது என்பார்கள். ஆனால், நிபுணர்கள் இதை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். யானை 60 வயது வரை வாழ்ந்தால், அதுவே அதிகம் என்கிறார்கள்.

யானையின் வயது, அதன் கடைவாய்ப் பற்களை பொறுத்தது என்று கண்டு பிடித்து இருக்கிறார்கள். பக்கத்துக்குஇரண்டாக மொத்தம் 4 கடைவாய்ப் பற்கள் இருக்கின்றன. இப்பற்கள் தேய்ந்ததும், புதுப்பற்கள் முளைக்கும். ஒரு யானையின் வாழ்க்கையில் இவ்வாறு ஆறு தடவைக்குமேல் கடைவாய்ப்பல்முளைப்பதுஇல்லை. சாதாரணமாக யானையின் 40-வதுவயதில் கடைசியாக கடைவாய்ப்பற்கள் முளைக்கின்றன. ஆகவே, யானை ஐம்பது வயதுக்கு மேல் இருப்பது அபூர்வம் என்கிறார்கள்!

# விரைவில்

?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெற்றிப்பெரு மிதத்தால் ஏறு நடைபோடும்

# ஏற்றமிகு 5-வது வாரம்!

ராணி (யாழ்ப்பாணம்)
சென்ட்ரல் (மருதானை)
ஈஸ்டர்ன் (சம்மாந்துறை)
ஆனந்தா (மன்னார்)
ராதா (கந்தப்பொலை)
மொடர்ன் (குருநாகலை)
சுஜாதா (சிலாபம்)





எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
அசோகன், மனோகர்
ரங்கராவ் நாகேஷ்
இன்னும் பலர் நடித்தது

கதை—தயாரிப்பு
எம். எம். ஏ. சின்னப்பா தேவர்

தேவர் பிலிம்ஸ்

## தாய்க்குத் தலைமகன்

டைரெக்ஷன்:
எம். ஏ. திருமுகம்

---

# இப்பொழுது காட்சி தருகிறது

செல்லமகால் (கொட்டாஞ்சேனை)
வின்சர் (யாழ்ப்பாணம்)
இம்பீரியல் (மட்டுநகர்)
நெல்சன் (திருமலை)
ஸ்ரீ முருகன் (வவுனியா)
குமரன் (மன்னார்)
(ஜூன் 5 முதல்:) நீகல் (நீர்கொழும்பு)



ரவிச்சந்திரன், பாரதி, தங்கவேலு, நாகேஷ், மனோரமா
எம்.வி. ராஜம்மா, பேபி சகிலா, ஓ. ஏ. கே. தேவர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்

## எங்க பாப்பா


தயாரிப்பு டைரக்ஷன்: பி. ஆர். பந்துலு
இசையமைப்பு: எம். எஸ். விஸ்வநாதன்
பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
பின்னணி: சௌந்தரராஜன், சுசிலா

4-வது வாரம்
கெயிட்டி (கொழும்பு)
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
## நாடோடி

---

# ஜூன் 5ம் திகதி திங்கள் முதல்

கிங்ஸ்லி (கொழும்பு)
ஈரோஸ் (பாமன்கடை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
விஜிதா (அட்டன்)
திவொலி (நூரளை)
கல்யாணி (நாவலப்பிட்டி)
மொடேன் (பண்டாரவளை)
மொடேன் (பதுளை)



★ சிவாஜி கணேசன் ★ கே. ஆர். விஜயா
எஸ். வி. சகஸ்ரநாமம், எம். வி. ராஜம்மா,
ரங்கராவ், நாகையா, மற்றும் பலர் நடிக்கும்

## செல்வம்

கதை, வசனம், டைரக்ஷன்:
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்



5-வது வெற்றி வாரம்
கெப்பிட்டல் (கொழும்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ரவிச்சந்திரன்
ஜெயலலிதா நடிக்கும்

## குமரிப் பெண்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ... பண்டாரநாயக்கா வீதி, 194, ஏ, இலக்கத்தில்
1967-ம் வருடம் மே மாதம் 31-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org